# ஞானச்சுடர்



ஆவணி 2018






248 ஆவது மலர்


வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

**பொருள்:** ஊன் உண்ணாமையினால் உயிர்கள் அழிந்துபோகாமல் நிலைபெறும். ஊன் உண்ட ஒருவனை விழுங்கிய நரகம் அவனை வெளியே விட வாயைத் திறவாது. (255)

தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில்.


**பொருள்:** உண்ணுதற்காக உலகத்தவர் உயிர்களைக் கொல்லா ராயின் விற்றற் பொருட்டுக் கொலை செய்து ஊனை விற்பார் யாரும் இலராவர். (256)

# நற்சிந்தனை

மறப்பேனோ குருநாதன் தன்னை

**முத்தி நல்குமே**

**பதைப்பற்றிரு நெஞ்சமே**



இராகம் – தன்யாசி தாளம் – ஆதி

**பல்லவி**

பார்ப்பதெல் லாஞ்சிவ மாகவே கண்டு
பதைப்பற்றிரு நெஞ்சமே.


**அநுபல்லவி**

பதைப்பற்ற பேர்க்கேசிவ பாக்கிய முண்டு
பஞ்சேந் திரியம் அஞ்சையும் வென்று
(பார்)

**சரணம்**

மார்க்கஞ் சொல்லும் வழிதனிற் செல்லு
மாறாத மௌனத் தியானத்தில் நில்லு
தீர்க்க மானகுரு செல்லப்பன் பாதம்
சிந்திக்கும் யோகசுவாமி வந்திக்குங் கீதம்
(பார்)

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 248

2018 ஆவணி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| உணவளித்து உயிர் ஓம்புதல் | கு. சோமசுந்தரம் | 01 -04 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 05 -09 |
| சுய நம்பிக்கை வாழ்வின்... | பூ.க. இராசரத்தினம் | 10 -13 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 14 -16 |
| அருளியலும் அறிவியலும் | இராம. ஜெயபாலன் | 17 -19 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 20 -26 |
| மனிதனுக்கு சமயவாழ்வு... | பு. கதிரித்தம்பி | 27 -28 |
| நாம் இழந்த உரிமைகளைப்... | எம்.பி. அருளானந்தன் | 29 -30 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 31 -32 |
| ஸ்ரீமத் கணேசானந்தா... | ஆ. சிவநாதன் | 33 -35 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 36 -37 |
| மண்டூர்க் கந்தசுவாமி கோயில் | மூ. சிவலிங்கம் | 38 -40 |
| பாராட்டு விழாவும்... | வல்வையூர் அப்பாண்ணா | 41 -47 |
| சந்நிதியின் வரம் | கே.எஸ். சிவஞானராஜா | 48 -49 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 50 -53 |
| சிந்தை மகிழ்ந்தே இங்கு... | கி. குலசேகரன் | 54 -55 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 56 -60 |
| பொறுமை என்னும் அணி | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 61 -62 |
| வட இந்திய யாத்திரை | மோகனதாஸ் சுவாமிகள் | 63 -64 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர்
# ஆடிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

ஞானச்சுடர் 247ஆவது மலருக்கான வெளியீட்டுரையினை பேராதனைப் பல்கலைக்கழக மாணவி செல்வி தயாளினி குமாரசாமி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையின்மூலம் ஆச்சிரமம் ஆற்றும் பலவித சமய, சமூக சேவையின் பலாபலன்களை சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு அப்பணிகளின் மகத்துவத்தைப்பற்றி பயனடைந்தோர் சிலாசித்துக் கூறுவதையும், பாராட்டுவதையும் கேட்பதனூடாக நாம் உண்மை நிலையை விளங்கக்கூடியதாக உள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு ஆன்மீக மலர் 247 மாத காலமாக தொடராக வெளிவருவதையிட்டும் கடந்த இரு வருட காலம் இம் மலருக்காகிய வெளியீட்டுரையினை ஆற்றுவதற்கு சந்நிதி வேலவன் பேரருள் புரிந்ததை எம் வாழ்வில் மறக்க முடியாது. தொடர்ந்தும் இம்மலர் வெளிவர சந்நிதி வேலவன் அருள் புரியவேண்டும் என வணங்கி நிறைவு செய்கின்றேன் என்றும் கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:**

ஞானச்சுடர் ஆடிமாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை சைவப்புலவரும், ஆசிரியரும், சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலம் தொடர்பு கொண்டவருமாகிய திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவர் தன் ஆரம்ப உரையாக தான் இளம் வயதில் ஆச்சிரமச் செயற்பாட்டின் சிறப்பு கருதி அதனோடு இணைந்து இங்கே இடம்பெறும் வாராந்த நிகழ்வினூடாக இம்மேடையில் சொற்பொழிவாற்றி படிப்படியாக ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினைச் செய்து, கடந்த ஐந்துவருட காலம் இம்மலருக்கு மதிப்பீட்டுரை ஆற்றிவருவதோடு எமது வாழ்க்கை நிலைகூட படிப்படியாக வளர்ச்சிபெற்றிருப்பது கண்கூடாக அறிந்துகொண்டு இருக்கின்றோம். எல்லாவற்றிற்கும் ஆச்சிரம சுவாமிகளினூடாக சந்நிதி வேலவனின் கருணையே காரணம் என்று கூறி மலரில் இடம்பெற்ற கட்டுரைகளின் தன்மைபற்றி சபையில் இருந்த அடியார்களுக்கு உணர்வு பூர்வமாக விளக்கிக்கூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

"தேவர் டாக்டர்" என அனைவராலும் அன்பொழுக அழைக்கப்பட்டு வந்த டாக்டர் மாப்பாணபிள்ளை யோகீஸ்வரதேவன் 04.09.2018 செவ்வாயன்று காலமானார் எனும் செய்தி மருத்துவ உலகிற்கு பேரிழப்பாகும்.



1980முதல் வடமராட்சியில் பல்வேறு வைத்தியசாலையிலும் பணியாற்றிய அமரர் மா. யோகீஸ்வரதேவன், பரு. ஆதார வைத்தியசாலையில் பணிபுரிந்த காலப்பகுதியில், 1987 லிபரேஷன் ஒப்பரேஷன், இந்திய இராணுவ நடவடிக்கை போன்றவற்றில் படுகாயமடைந்த பல நூற்றுக்கணக்கான மக்களுக்கு இரவு-பகல் பாராது- அளித்த சிகிச்சையினால் வாழ்வு பெற்றவர்கள் இன்றும் அன்னாரது உள்ளன்பான சேவையினை நினைவு கூருகின்றனர்.

பின்னாளில் அமரர் டாக்டர் மா. யோகீஸ்வரதேவன் பல்வேறு பொது விடயங்களிலும் முன்னின்று உழைத்தார். குறிப்பாக, வதிரி சிறுவர் - முதியோர் இல்லமான பரமானந்தா ஆச்சிரமத்தின் இயக்குனர் சபையில் தலைவர்-செயலாளர் - பொருளாளர் எனப் பல்வேறு பதவிகளிலும் தன்னலமற்ற சேவை புரிந்து மக்கள் மனங்களில் நிலையான இடங்கொண்டவராகும்.

அமரர் டாக்டர் மா. யோகீஸ்வரதேவன் அவர்களுக்கும்-சந்நிதியான் ஆச்சிரமத்திற்கும் மிக நெருக்கமான உறவுண்டு. ஆச்சிரம மருத்துவப்பணி ஆரம்பமான 2000ஆம் ஆண்டில் இருந்து ஏறக்குறைய 10 ஆண்டுகள் கடமை புரிந்தார் என்பது மறக்க முடியாதது. அவரது திறமையான மருத்துவப் பணியினால், சந்நிதியான் ஆச்சிரம இலவச வைத்திய சேவைப்பணி படிப்படியாக வளர்ந்து 2010இல், மறைந்த அமைச்சர் மகேஸ்வரன் அவர்கள் ஞாபகார்த்தமாக அமைக் கப்பட்ட புதிய கட்டிடத் திறப்புவிழாவிற்கு வருகை தந்த அமரர் மா. யோகீஸ்வரதேவன் அவர்களை ஆச்சிரமம் நன்றியோடு வரவேற்று விருதளித்து கௌரவித்தமையையும் நினைவிற் கொள்வது தகும்.

சந்நிதியான் ஆச்சிரம இலவச மருத்துவ சேவைக்கு முழுமையான அர்ப்பணிப்பை வழங்கி-சேவையினை நிலைபெறச் செய்த அமரர் டாக்டர் மா. யோகீஸ்வரதேவன் அவர்களது ஆத்மா இறைவன் காலடியில் நித்திய ஓய்வுபெறவும் - சாந்தி பெறவும் சந்நிதியான்ஆச்சிரமம் பிரார்த்திக்கிறது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 09. போர்க்களத் தலகை வகுப்பு

பகலிர வின்றியொர் புகறிசை நந்திய பற்பா னுத்தகை
படமுதல் விசும்பு தூர்த்த டுக்கு பிணமலை
பவுரிவ ரும்பரி புரநரல் பங்கய வித்தா ரத்தன
பயிரவி பதங்கள் வாழ்த்தெ டுத்த பசியன
பரியகொ முந்தசை பயிரவ ரென் றுபவ லிக்கா நிற்பவர்
பகரிட மறிந்து பாத்தி ரத்தி லிடுவன
பரவிவ ருங்குறள் பசிதணி யும்படி பட்டார் கைப்படு
பரிசையின் முகந்து சூட்டி றைச்சி சொரிவன
படுகள மென்பதொர் செறுவில் விளைந்தன பற்கோவைப்பயில்
பவுரிவி சைகொண்டு தீட்டி மெத்த வடுவன
பரியணி திண்பணை முடியம டிந்துடல் பப்பா தித்துணி
படவிழு பெருங்கை மாக்க ருக்கல் பகிர்வன
படைவிச யந்தெரி சலதிவ லம்புரி பற்றார் பட்டுள
பலபல விதங்க ளார்ப்பெ டுக்கு முதடின
பகடுபி ளந்தத னுரிவைபு னைந்திடு குப்பா யத்தன
பதவிய ரிணஞ்செ யூட்டு டுத்த வுடையின:,

உகமுடி வன்றினும் வெருவவ ரும்பல வுற்பா தத்தன
வொளிமதி வகிர்ந்த கீற்றெ யிற்று நிலவின
உருவமி ருண்டன திகிரிவி லங்கலி னுட்பாய் கிற்பன
உலவிநி ணமொண்டு கூட்ட மைத்து நுகர்வன
உறுதியு றுங்கவ வடவைநெ டுங்கன லுட்கா கப்பெரு
குதிரபி சிதங்கள் பேர்த்தி றக்கி யிடுவன
உருமுமி டைந்தென வதிர்குர லின் றமி லொப்பே றிட்டுநி
ருதர்மவு லிகொண்டு கோட்டை யிட்டு மலைவன
உலகுகு லுங்கிட வரியது ணங்கையி னைச்சா திப்பன
உவணப டலங்கள் காக்கை சுற்றி வருவன
உலைதரு மென்குட ரிடைபட இந்திர னுத்யா னத்தல
ருகிர்கொடு புனைந்த சூட்டு முற்றி மலைவன
உயரிப முங்குர கதகுல முங்கன பொற்றேர் வர்க்கமு
முடைபடு கலங்கள் போற்சு ழித்து விரைபட
ஒழுகுதி ரந்தனின் முழுகியெ ழுந்தன உச்சா டத்துட
னுடைகட லதிர்ந்து கூப்பி ளக்கு நடையின:,

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

A. ஆனந்தகுமார்

(லண்டன்)

Dr. G. பவானி

(மகப்பேற்று நிபுணர், யாழ்ப்பாணம்)

உரிமையாளர்

(மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்)

Dr திருமதி பத்மராணி குகானந்தன்

(பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி)

S.S. ரஜீந்திரன்

(நீர்வேலைப்பகுதி, மாநகரசபை, யாழ்ப்பாணம்)

சி. சிவமூர்த்தி

(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

அ. சிவகுமார்

(யாழ்ப்பாணம்)

A. நாகரெத்தினம்

(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)

இ. குமாரசாமி J.P.

(ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி)

பொ. குமாரசாமி

(சட்டத்தரணி, நவிண்டில்)

திருமதி கௌரி சுரேசன்

(ஆசிரியர், ஆவரங்கால்)

செ. கந்தசாமி

(வங்கியாளர், சண்டிலிப்பாய்)

நா. சிவசிதம்பரம்

(கோணாவளைலேன், கொக்குவில்)

இராசையா தங்கவேல்

(அச்சுவேலி)

S. அருளையா

(கொழும்பு)

ச. பத்மநாதன்

(தெற்குத் தோப்பு, புத்தூர்)

க. தெய்வேந்திரம்

(பண்டத்தரிப்பு)

தே. தேவராஜேந்திரன்

(திகிரி லேன், தும்பளை)

பொ. நாகலிங்கம்

(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

முத்து கணேஷ்

(மஞ்சத்தடி, இணுவில்)

K. கஜமுகன்

(இராசவீதி, நீர்வேலி)

செ. சிவலிங்கம்

(மலர் வசந்தம், இணுவில்)

N. ஜெயரட்ணராசா

(பண்ணாகம், சுழிபுரம்)

சி.து. கலைச்செல்வம்

(பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்)

தலைவர்

(வாழ்வகம், சுண்ணாகம்)

வை.ச. பரஞ்சோதி

(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)

ச. ஸ்ரீவிவேகானந்தராசா

(கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

சீ.சி. கந்தையா (பலாலி)

(ஆவரங்கால்)

மு. முருகதாஸ்

(சிறுப்பிட்டி தெற்கு)

T. தியாகலிங்கம்

(இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்)

S. K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார்

(மானிப்பாய் தெற்கு)

இ. தயாபரன்

(கோண்டாவில்)

S. சாம்பவி

(யாழ்ப்பாணம்)

செ. தர்மலிங்கம்

(சாவகச்சேரி)

திருமதி தி. பரமேஸ்வரி

(ஆனைக்கோட்டை)

S. பொன்னம்பலம்

(சுண்ணாகம்)

ப. திருக்குமரன்

(அமுதசுரபி, கட்டுடை)

சி. நவரெத்தினம்

(ஆனந்தா வீதி, மானிப்பாய்)

**சி. சுப்பிரமணியம்**

(சமரபாகு, உடுப்பிட்டி)

**சிறி மாதவன்**

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**ந. பொன்னுத்துரை**

(தொம்பை வீதி, உடுவில்)

**ச. திவாகரன்**

(உரும்பராய் மேற்கு)

**க. சச்சிதானந்தன்**

(சந்தை வீதி, உடுப்பிட்டி)

**நா. மகேந்திரராசா**

(பிறேம மகால், வல்வெட்டி)

**சு. சிவராசா**

(கொக்குவில்)

**வ. சிவலிங்கம்**

(குருபரன் தொலைத் தொடர்பு நிலையம், கரவெட்டி)

**கா. அருளானந்தன்**

(அராலிவீதி, சங்கானை)

**பத்மநாதன் குணசுந்தரி**

(ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை)

**ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம்**

(அச்சுவேலி)

**வே. இராஜேந்திரா**

(ஆவரங்கால்)

**ச. மார்க்கண்டு**

(ஊரெழு மேற்கு)

**திருமதி கமலஹாசன் மஞ்சுளா**

(வல்வெட்டி)

# உணவளித்து உயிர் ஓம்புதல்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்த வற்றுள் எல்லாந் தலை"

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"
"ஐயமிட்டுண்"
"தானங்களிற் சிறந்தது அன்னதானம்"
"ஈதல் அறம்"
"யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி"

இவ்வாறு தலைசிறந்த வாழ்வியல் நெறிகளை வகுத்து, வாழ்ந்துகாட்டி, வழிப் படுத்தியவர்கள் நம் முன்னோர்கள். அந்தக் காலப்பகுதிகளில் நாட்டில் வான்முகில் வழுவாது மழையைப் பொழிந்தது; பயிர்கள் செழித்து வளர்ந்து, உணவு வழங்கின; மக்கள் அனைவரும் பசிப்பிணியின்றி மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். நாட்டின் வளங்கள் பெருகின; மன்னன், கோன்முறை தவறாது, நல்லாட்சி செய்தான்; எவ்வித குறையும் இல்லாது உயிர்கள் வாழ்ந்தன. நான்மறை அறங்கள் மக்களால் வாழ்வில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. அறங்கள் பேணப்பட்டமையே மக்கள் எல்லாச் செல்வங்களையும் பெற்று, நிறை வாழ்வு வாழ்ந்தமைக்கான முதன்மைக் காரணம். ஆனால், தற்காலத்தில், அறநெறி புறக்கணிப்புக்குள்ளாகி வருகிறது. அறநெறி பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்கிறது சிலப்பதிகாரம். உண்மைக் கூற்று.

அறவழியில் தேடிய பொருட்கள் சதாகாலமும் இன்பம் பயப்பன. அவ்வாறே தர்மம் பிசகாது வாழும் வாழ்க்கையும், இறுதிக் காலம் வரை இன்பம் நிறைந்ததாகவே அமையும். "அறத்தால் வருவதே இன்பம்" என்று உறுதியாகச் சொல்கிறது, தமிழ் மறையாக விளங்குகின்ற திருக்குறள். அற வழியில் நின்று வாழும் வாழ்க்கையே இம்மையில் இன்பத்தையும், மறுமையில் முத்தியின்பம் ஆகிய பேரானந்தப் பெருவாழ்வையும் வழங்கக்கூடியது.

தற்காலத்தில், மனிதர்களில் பெரும்பாலானவர்கள் நீதியைக் குறுக்கி, நிதி சேர்க்கின்றனர். "அரசன் அன்றறுப்பான்; தெய்வம் நின்றறுக்கும்" என்பது ஆன்றோர் அநுபவ வாக்கு. அரச தண்டனைக்கு தப்பினாலும், தெய்வ தண்டனைக்கு ஒருபோதும் தப்பவே முடியாது. எனவே அறத்தோடு தருமநெறி பிசகாது வாழும் வாழ்க்கையே இன்பம் தரக் கூடியது. அறத்தோடு பொருந்தாமல், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழும் வாழ்க்கை, துன்பத்தையே தரும். இது அநுபவ ரீதியாகக் கண்ட உண்மை.

தரும வழியில் சம்பாதித்த பொருள்களை, நிதியைப் பகுத்துத் தானும், தன் தேவைகளைப் பூர்த்தி செய்து; ஏனையோருக்கும் கொடுத்துக் காப்பாற்றுதல்; அறங்கள்

*மனிதனிடம் சத்துவகுணம் ஓங்கும்போது இறை காட்சிக்காக அவன் ஏங்குகிறான்.*

யாவற்றிலும் தலையாய அறம் ஆகும். "அறஞ்செய விரும்பு" என்ற மகா வாக்கியத்தை ஒளவையார் ஆத்திசூடியில், முதல் மகுட வாசகமாக முன்வைத்துள்ளார்.

பசிப்பிணியே, உடலுக்கு ஏற்படும் நோய்களுள் மிகக் கொடியது. அதுவே, ஏனைய நோய்களுக்கும் காரணமாகின்றது. பசிப்பிணியைப் போக்க வல்லவர்களே, மனித நேயம் மிக்க மாமனிதர்கள்.

உயிரை வளர்க்க வேண்டுமாகில், உடலை வளர்க்க வேண்டும். உடல் புறக்கணிக்கக் கூடிய பண்டமுமன்று; பிண்டமும் அன்று. உடலை வளர்ப்பதற்கு உணவு இன்றியமையாததாகும்.

**"உடம்பினை முன்னம் இழுக் கென்றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண்டான் என்று**
**உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே"**

-திருமூலர்.

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், உறவினர், சுற்றத்தார், ஏழைகள், ஊனமுற்றோர், ஆதரவற்றோர் ஆகியோருக்கு உணவு அளித்தல், தாகசாந்தி செய்தல் என்பன இல்வாழ்வானின் கடமை என அறநூல்கள் கூறும். இத்தகைய கைங்கரியங்களை முழு மனதோடு செய்வதற்கு, அவர்கள் மனங்களில் ஆழ்ந்து கிடக்கும் அன்பும் கருணையும் காரணமாகின்றன. இன்னார், இனியவர்; நண்பர் பகைவர்; வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடு இல்லாமல்; சகல மனிதர்களையும் இதய சுத்தியோடு நேசித்தல் என்பது மனித நேயம். இவ்வாறே சகல உயிரினங்களையும் நேசித்தல் ஆன்மநேயம் எனப்படும்.

இல்லறம் சைவநீதி நெறிப்படி நல்லறம் ஆகும். "இல்லறமல்லது நல்லறமன்று" என்பது முதுமொழி. எதனால் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், இல்லறத்தாரிடம் காணப்படுகின்ற விருந்தோம்பல் பண்பாடே என்பது தெரியவரும். தம்மை நோக்கி, உணவு கேட்டு இல்லத்திற்கு வருபவர்கள், புறத்தே பசியோடு இருக்க, தாம் மட்டும் உணவுண்டு இன்புறுவது இந்து தர்மத்திற்கு முரணானதும் புறம்பானதுமாகும்.

**"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"**

-திருமந்திரம்.

இறைவனை வழிபடும்போது, மலர் கிடைக்கப்பெறாவிடின், ஒரு பச்சை இலையையாவது இட்டு வழிபடுதல்; பசுமாட்டிற்கு ஒரு வாய் புல் கொடுத்தல்; பசித்து வருபவருக்கு ஒரு கவளம் உணவு வழங்குதல்; வேற்றுமை காட்டாது, எல்லாரிடமும் இனிய வார்த்தைகள் பேசி, அவர்களை மகிழ்வித்தல்; மனிதர்களாகப் பிறந்த அனைவரினதும் தலையாய கடமையாகும். சிறப்பாகச் சைவ நெறி இவற்றைப் புண்ணியங்களாகவும்; தர்மங்களாகவும் கொள்கின்றன. இவற்றை முறையே கடவுள் வழிபாடு, ஆன்மநேயம், மனிதநேயம், மனிதப் பண்பாடு எனக் குறிப்பிடலாம்.

சைவ மரபு, பசித்தோருக்கு உணவு அளிக்கும் உயர் பண்பினைக் கட்டி வளர்த்து வந்திருக்கிறது. மேலும் வளர்த்து வருகிறது. திருக்கோயில்களுக்கு அணித்தாகத் திருமடங்கள், அன்ன சத்திரங்கள் அமைக்கப்பெற்று, அன்னதானம், தாகசாந்தி, தங்குமிட வசதிகள் வழங்கப்படுகின்றன. இக்கைங்கரியங்கள், தடையின்றி நடைபெறுவதற்குப் புண்ணியசீலர்கள் அறக்கட்டளைகளை நிறுவியுள்ளனர். மேலும் பலர் நிதியுதவிகள், பொருள் உதவிகள், சரீர உதவிகள் என்பனவற்றை வழங்கிவருகின்றனர். ஒரு சிலர் திருமடங்களில் இப்புண்ணிய கைங்கரியங்களை நிறைவாக நடாத்தும் பொருட்டும்; நிர்வகிக்கும்

*கோபமாகப் பேசும்போது அறிவு தன் முகத்துக்குத் திரையிட்டுக் கொள்கிறது.*

பொருட்டும் முழுநேரத் தொண்டர்களாகத் திருத்தொண்டு செய்து வருகின்றனர். உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துப் பணிசெய்து வருகின்ற "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே"

ஆலய மகோற்சவங்களின்போதும்; மற்றைய விசேட வைபவங்களின்போதும்; கந்தபுராணப் படிப்பு நிறைவுபெற்ற மறுநாளிலும், ஆலயங்களிலும் மற்றும் வீடுகளிலும், மகேஸ்வர பூசை எனப்படும் அன்னதானம்; ஒரு மரபாக பண்டுதொட்டு வளர்ச்சி பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வீடுகளில் நடைபெறும் மங்கல வைபவங்கள்; விரதங்கள்; விழாக்கள், பண்டிகைகள் காலங்களிலும் அன்னதானம், விருந்து என்பன நடைபெறும்போதும்; அபரக் கிரியைகளின்போதும் உணவளித்தல் சைவ மரபு வளர்த்த நற்கருமங்கள் ஆகும். அந்த வகையில் சைவ நெறி சமய நோக்குடன், சமூக நோக்கையும் கொண்டுள்ளமை புலனாகின்றது.

சைவ நாயன்மார்கள் மக்கள் தொண்டு, மகேஸ்வரன் தொண்டாகக் கொண்டனர்.

**"மண்ணினிற் பிறந்தார்பெறும் பயன் மதிசூடும்**
**அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்"**

என்பது திருஞானசம்பந்தர் திருவாக்கு. இப் பண்பாடு பேணி வளர்த்துத் தொடரப்பட வேண்டும். அன்னதானம் புண்ணியச் செயல் ஆகும். "ஈதல் அறம்" என்றும் "ஈவது விலக்கேல்" என்றும் நம் ஆன்றோர் வழங்கிய அறவுரையும் ஆகும்.

சர்வலோக நாயகியாக விளங்கும், உமாதேவியாரை அன்னபூரணி என்றும் உலகமாதா என்றும் அழைத்து வழிபடுவது சைவமரபு. அன்னம் என்பது சோறு என்று பொருள்படும். அன்னம் அளித்துக் காப்பாற்றுபவள் தாய். அதனால், தாயை அன்னை என்று அழைக்கின்றனர். சுந்தரமூர்த்தி நாயனார்; திருவாரூர் மக்கள் பஞ்சத்தில் வாடிய போது, அவர்களின் பசித்துயரைப் போக்கத் திருவுளங்கொண்டு, குன்றையூரில் தான் பெற்ற நெல் மணிகளை, திருவாரூருக்கு அனுப்பி வைக்க உதவுமாறு தோழமை நிலையில், உரிமையோடு திருக்கோளிலி எம்பெருமானுக்கு விண்ணப்பம் செய்தார். எம்பெருமானும் சுந்தரரின் வேண்டுதலை ஏற்றுத் திருவருள் புரிந்தார்.

பஞ்சத்தால் வருந்திய மக்களின் பசித்துயரைப்போக்க, ஞானசம்பந்தரும் அப்பரடிகளும் சிவபெருமானை நோக்கிப் பதிகம் பாடிப் படிக்காசு பெற்று மக்களின் பசிப் பிணியைப் போக்கினார்கள்.

அர்த்தசாமத்தில் அடைமழை நேரத்தில் வயலுக்குச் சென்று முதனாள் விதைத்த நெல்லைப் பொறுக்கியெடுத்துக் குற்றி, அரிசியாக்கி சோறு சமைத்து உணவு கேட்டு வந்த சிவனடியாருக்கு, அன்புப் பத்தினியார் சகிதம் உள்ளன்போடு அமுதூட்டியவர் இளையான்குடிமாற நாயனார் ஆவார்.

அப்பூதியடிகள்; திருநாவுக்கரசு நாயனாரின் அணுக்கத் தொண்டர். அன்னதான மடங்களும், தண்ணீர்ப் பந்தல்களும், சத்திரங்களும், திருநாவுக்கரசர் பெயரினால் அமைத்து மக்களுக்குப் பெருந்தொண்டு ஆற்றிச் சிவபெருமானின் திருவருளைப் பெற்றவர்கள்.

சிறுத்தொண்டர், அடியவர்களின் பசித் துயர் துடைத்துத் தொண்டாற்றியவர். உச்ச நிலையாகச் சிவனடியார் வேடத்தில் வந்தவரின் விருப்பத்திற்கிணங்க பிள்ளைக் கறி சமைத்து உணவளித்துச் செயற்கரிய செயல் செய்தவர். சிவபெருமானே, சிவனடியார் வேடத்தில் வந்து, சிறுத்தொண்டரை

*உலக வாழ்க்கையில் ஒரு விருந்தினரைப்போல் நடந்துகொள்.*

ஆட்கொண்டு அருள்பாலித்தவர். "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்பது ஔவை மொழி. சேக்கிழார் தாம் இயற்றிய பெரியபுராணத்தில் இவற்றையும், இவை போன்ற அருட்செயல்களையும் பெருமைப் படுத்தியுள்ளார்.

சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணத் தில் பெரும் பஞ்சம் ஏற்பட்டபோது மக்களின் பசிப்பிணியைப் போக்குவதற்குக் கஞ்சித் தொட்டிகளை ஊர்தோறும் அமைத்துத் தொண்டாற்றியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். ஒவ்வொரு வீட்டாரிடமும் பிடியரிசி பெற்று, கஞ்சித் தொட்டித் தர்மத்தை அமுல்படுத் தியதன்மூலம் நாவலர் பெருமான் இப் புண்ணிய கைங்கரியத்தில் மக்களையும் ஈடு படுத்தினார். "யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி" என்ற திருமூலரின் திருமந்திர வாக்கு இங்கு செயலாகின்றதைக் காணலாம்.

ஒவ்வொரு குடும்பத்தினரும்; தின மும் உலையில் அரிசியைப் போடும்போது ஒரு கைப்பிடி அரிசியை எடுத்து ஒரு பாத் திரத்தில் இட்டுச் சேர்த்து வைப்பர். ஒரு மாதகாலம் சேர்த்த அரிசியை, அன்னதான மடங்களுக்கு அல்லது வேறு இத்தகைய கைங்கரியங்களைச் செய்து வருகின்ற தரும ஸ்தாபனங்களுக்கு வழங்குகின்ற மரபு ஒன்று, நாவலர் காலம்வரை யாழ்ப்பாணத்துச் சைவத் தமிழ் மக்களிடையே வளர்ச்சி பெற்றிருந்தமை வரலாறு ஆகிவிட்டது. தற் காலத்தில் அப்பாரம்பரியம் அருகி வருவதை உணரக்கூடியதாக உள்ளது. இத்தகைய பசிநோயைத் தீர்க்கும் பண்பாட்டினை மீண் டும் கட்டியெழுப்ப நாம் முயலவேண்டும். "சிறுதுளி பெரு வெள்ளம்" என்பது ஆன் றோர் வாக்கு.

"உண்ணும் உணவைப் பழித்தல் ஆகாது" உணவைக் கொட்டுதல், சிந்துதல் ஆகாது; வீணாக்குதல் பாவம் ஆகும்" இது விரதம் ஆகும்.

வாழ்க வளமுடன்; வாழ்க வையகம்.

## செல்வச் சந்நிதியில் இருப்பது வெள்ளிவடிவேல்

சந்நிதியில் இருக்குதொரு வெள்ளிவடிவேல்
செல்பவரை நோக்கிடும் அந்த வெள்ளிவடிவேல்
அன்னதானம் வழங்குவதும் அந்த வடிவேல்
அடியார் குறை தீர்ப்பதுவும் செல்வ வடிவேல்
எண்ணியது பெற்றிடலாம் இங்கு வருவீர்
ஏழைகளும் விரும்பிக் குடிகொள்ளும் தலமே
பண்ணிய பாவவினை அறுக்கும் வடிவேல்
பரமசிவன் குருமகன் அமர்ந்த தலமே சந்நிதி.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*நிலையில்லா வாழ்வை நிலையென்று எண்ணிவிடாதே.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த

– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –

(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 07. காருணியத்திரங்கல்

காருணியத்திரங்கல் என்பது இறைவனது திருவருளின் பொருட்டு இரங்குதல் என்னும் பொருளுடையது. காருணியம்- திருவருள் காருணியத்துக்கு இரங்கல் எனக் குவ்வுருபு விரிக்க.

*அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்*

65. தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள் விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள் நின்மலா போற்றி போற்றி.

**ப-ரை:**

காய வாழ்க்கை தரிக்கிலேன்- உடம்போடு இவ்வுலகில் வாழும் வாழ்க்கையைப் பொறுக்குமாற்றலுடையேனல்லேன்; சங்கரா போற்றி- சுகத்தைச் செய்பவனே பாதுகாத்தருள்க. வான விருத்தனே போற்றி- சிதாகாயத்தில் விளங்கும் முதியோனே காத்தருள்க; எங்கள் விடலையே போற்றி- எங்கள் பெருமையிற் சிறந்தோனே பாதுகாத்தருள்க. ஒப்பு இல் ஒருத்தனே போற்றி- ஒப்பற்ற ஒருவனே பாதுகாத்தருள்க; உம்பர் தம்பிரான் போற்றி- வானவர்க்குத் தலைவனே பாதுகாத்தருள்க; தில்லை நிருத்தனே போற்றி- தில்லைச் சிற்றம்பலத்தின் கண் திருக்கூத்து இயற்றுபவனே பாதுகாத்தருள்க; எங்கள் நின்மலா போற்றி போற்றி- பாசபந்தமுடைய எங்களுக்கு அதனை நீக்கியருளும் இயல்பாகவே பாச பந்தங்களினீங்கியவனே பாதுகாத்தருள்க பாதுகாத்தருள்க.

உடம்போடு வாழும் வாழ்க்கையைப் பொறுக்குமாற்றலுடையேனல்லேன்; ஆதலால் சங்கரா, வானவிருத்தனே, எங்கள் விடலையே, ஒப்பில் ஒருத்தனே, உம்பர் தம்பிரானே, தில்லை நிருத்தனே, எங்கள் நின்மலா பாதுகாத்தருள்க பாதுகாத்தருள்க என்பதாம்.

காய வாழ்க்கை- காயத்தோடு கூடி வாழும் வாழ்க்கை காயம்- உடல். பிராரத்த வினையுடைமையால் உடலோடு கூடிவாழும் வாழ்க்கை உளதாக அதனால் இறைவனது திருவுருவக்காட்சியைப் பிரியநேர்ந்தமையால் உளதாகும் துன்பமிகுதி பற்றித் "தரிக்கிலேன் காய வாழ்க்கை" என்றார். "தினைத்துணையேனும் பொறேன் துயராக்கையின் திணவலையே" (நீத் 39) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

சங்கரன் = சம்+கரன். பேரின்பமாகிய சுகத்தைச் செய்பவன் என்பது பொருள். போற்றி என்பது வணக்கம் என்னும் பொருள் தருவதாயினும் ஈண்டு பாதுகாத்தருள்க என்னும் பொருளில் வந்தது. "போற்றினரியவை போற்றல் (குறள் 693) என்புழியும் இப் பொருட்டாதல் காண்க. வானம் என்றது சிதாகாயத்தை இறைவன் காலதத்துவத்தைக் கடந்தோனாகலின் "விருத்தனே" என்றார்.

"நிருத்த னவன் நீதி யவன் நித்த னெறியாய
விருத்த னவன்"

ஞான 167:5.

"விருத்தன்காண் விண்ணவர்க்கு மேலானான் காண்"

நாவு 299:2.

"வெண்காடு மேய, விருத்தனாய வேதன் றன்னை" சுந். 6:10.

எனத் தேவாரத்தும் வருவன காண்க. விடலை- தலைவன்; பெருமையிற் சிறந்தோன்.

"திண்ணி யோனுந் தலைவனும் பாலை
யிறைவனுங் காமத்துறைவனும் விடலை"

10:1039

எனப் பிங்கலந்தையில் வருதலுங் காண்க. இறைவன் பெருமையிற் சிறந்தோனாகலின் விடலையே என்றார்.

"மந்தர வரிசிலை யதனிடை யரவரி வாளியால்
வெந்தழி தர வெய்த விடலையர்"

தே.ஞான 344:5.

"விடலையானை விரைகமழ் தேன் கொன்றைப்
படலையானை"

தே.நாவு 208:4.

என வருவனவுங் காண்க.

ஒருத்தன் என்பதே ஒப்பற்றவன் எனப் பொருள்படவும் ஒப்பில் ஒருத்தனே என்றது இறைவன் ஒப்பும் உயர்வும் அற்ற தனிமுதல்வன் என்பதைப் புலப்படுத்தற் பொருட்டென்க. "ஒப்பிலா வொருவன்றன்னை" "மற்றாரும் தன்னொப்பாரில்லாதான் காண்" நாவு 238-10 எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

உம்பர் தம்பிரான்- தேவர் தலைவன். "உம்பரார் தம் பராபரா" (சத 97) என இத்திருவாசகத்தும், "உம்பர் பெருமான்", "தேவர்பிரான்", "விண்ணோர்கட்குத் தேவர்" (ஞான 33:6; 318:10, 267:7; உம்பர் தம்பிரான் (நாவு 180:6) எனத் தேவாரத்தும் "உறுதுணை நந்தியை உம்பர்பிரானை" எனத் திருமந்திரத்தும் (2630) வருவன காண்க. உம்பர்- வானவர் "சூளாமணி யும்பர்க் காயவன்" என்னும் திருக்கோவையாரிலும் (47) இப்பொருட்டாதல் காண்க.

தில்லை நிருத்தன்- தில்லைச் சிற்றம்பலத்து இடைவிடாது நிருத்தஞ் செய்பவன்; "நிருத்தம் பயின்றவன் சிற்றம்பலத்து" எனத் திருக்கோவையாரில் (62) அடிகள் அருளி யமையுங் காண்க. நிருத்தம்- கூத்து. உம்பர் தம்பிரானாயினும் அவர்க்கரியனாய் எம்மனோர்க் கெளியனாய் தில்லைச் சிற்றம்பலத்துத் திருக்கூத்து இயற்றும் பேரருளாளன் என்பது

தோன்றத் தில்லை நிருத்தனே என்றார். "விண்ணிறந்தார் நிலம்விண்டார் என்று மிக்காரிருவர், கண்ணிறந்தார் தில்லையம்பலத்தார்" (107) எனத் திருக்கோவையாரில் அடிகள் அருளியமை கண்டு சிந்திக்கற்பாலது.

நின்மலன்- அநாதியே மலங்களினின்று நீங்கியவன் எங்கள் நின்மலா என்றது மலபந்தமுடைய எங்களுக்கு அதனை நீக்கியருளும் மலமற்றவனே என்றவாறு.

இதன்கண், சங்கரா வானவிருத்தனே விடலையே ஒப்பில் ஒருத்தனே உம்பர் தம்பிரான் தில்லை நிருத்தனே எங்கள் நின்மலா என விளித்து, போற்றி என்பவற்றால் "காத்தருள்க" என இரங்கி வேண்டுதலின் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 61.

66. போற்றியோ நமச்சி வாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய சயசய போற்றி போற்றி.

**ப-ரை:**

ஓம் நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன் போற்றி- ஓம் நமச்சி வாய என்னும் மந்திரப் பொருளாயுள்ளவனே பாம்பை அணிந்தவனே பிராரத்த வினையால் அடியேன் அறிவு மயங்கப் பெறுகின்றேன் காத்தருள்க; ஓம் நமச்சிவாய புகலிடம் பிறிது ஒன்று இல்லை போற்றி- ஓம் நமச்சிவாய என்னும் மந்திரப் பொருளாயுள்ளவனே, நான் அடைக் கலமாக அடையத் தகுந்தவிடம் நின்னையொழியப் பிறிதொன்றில்லை; ஆதலாற் காத்தருள்க; ஓம் நமச்சிவாய புறம் எனை போக்கல் போற்றி- ஓம் நமச்சிவாய என்னும் மந்திரப் பொருளாயுள்ளவனே நின் காட்சியைப் பிரிந்த என்னைப் புறத்தே போக்காது காத்தருள்க. ஓம் நமச்சிவாய போற்றி- ஓம் நமச்சிவாய என்னும் மந்திரப்பொருளாயுள்ளவனே காத்தருள்க; சய சய- நின் புகழ் வெல்க வெல்க. போற்றி போற்றி- காத்தருள்க காத்தருள்க.

ஓம் நமச்சிவாய, புயங்கனே பிராரத்த வினையால் அறிவு மயங்குகின்றேன்; காத் தருள்க; ஓம் நமச்சிவாய நான் அடைக்கலமாக அடையத் தகுந்த நின்னையொழியப் பிறிதொன்றில்லை; ஆதலாற் காத்தருள்க; ஓம் நமச்சிவாய என்னைப் புறத்தே போகவிடாதே; காத்தருள்க; ஓம் நமச்சிவாய காத்தருள்க; நின்புகழ் வெல்க வெல்க; காத்தருள்க காத்தருள்க என்பதாம்.

போற்றி என்பன காத்தருள்க என்னும் பொருளன. ஓம் நமச்சிவாய என்பது இறைவனுக் குரிய தூல பஞ்சாக்கர மந்திரமாகும். நமச்சிவாய என்பது இறைவனது அருட்டிருமேனியின் அங்கங்களாக அமைந்திருக்கும் முறையினை,

"ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம் - கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகரு முகம் வாமுடியப் பார்"

என்னும் உண்மைவிளக்கத்தானுமறிக. திருவடியிலே நகாரமும், திருவுந்தியிலே மகாரமும், திருத்தோளிலே சிகாரமும், திருமுகத்திலே வகாரமும், திருமுடியிலே யகாரமுமாக

அதிஷ்டம் எப்பொழுதும் சுறுசுறுப்பைத் தொடர்ந்தே சென்றுகொண்டிருக்கும்.

இந்த முறைமையிலே நமச்சிவாய என்ற பஞ்சாக்கரமே திருமேனியாக அமைந்தமையை இதனால் அறியலாம். இம்மந்திரம் தூலமாதல் பற்றியும் போகத்தை விரும்பும் உயிர்களால் செபிக்கப்படுதல் பற்றியும் தீக்கைப் பேறுடையார் அஃதிலார் ஆகிய யாவர் முன்னும் சொல்லத்தக்கதாதல் பற்றியும் அடிகள் "நமச்சிவாய வாழ்க" (சிவபுராணம்) என்பது முத லாகப் பலவிடங்களிலும் கூறியுள்ளார். சைவ சமயாசாரியர்களுள் ஒருவராகிய இவ்வாளுடைய அடிகளைப் போலவே ஆளுடைய பிள்ளையார் ஆளுடைய அரசர் ஆளுடைய நம்பியார் ஆகிய மற்றை சமயாசாரியர் மூவரும் தாமருளிச் செய்த தமிழ் மறைகளில் நமச்சிவாய என்னும் தூலபஞ்சாக்கரத்தையே அமைத்துத் திருப்பதிகஞ் செய்தருளுவாராயினர்.

"நாத நாம நமச்சிவாயவே" 307:1.

என ஆளுடைய பிள்ளையாரும்,

"நற்றுணை யாவது நமச்சிவாயவே" (11:1)

என ஆளுடைய அரசரும்,

"சொல்லுநா நமச்சிவாயவே" 48:1.

என ஆளுடைய நம்பியும் அருளிச்செய்தமை காண்க. ஆனால் அவர்கள் அம்மந்திரத் தினைச் சிகாராதியாகவே செபித்து வந்தனர் என்பது அவர்கள் வரலாற்றிடையே அறியத் தக்கதாகவுள்ளது. அடிகள் "நமச்சிவாய" என நகாரமுதலாகக் கூறினும் ஞானாசாரியனாகிய இறைவனிடத்து சிகாராதியாகவே உபதேசம் பெற்றனர் என்பது, "நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்" (ஏசறவு 10) என அருளிச் செய்தமையான் அறியப்படும். சிகா ராதியாகிய சூக்கும பஞ்சாக்கரமே பேரின்ப வாழ்வில் எய்தி வாழ்வதற்கு உச்சரிக்கத்தக்கது என்பது.

"ஆதிமல மிரண்டும் ஆதியாய் ஓதினால்
சேதியா மும்மலமுந் தீர்வாகா - போதம்
மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி
விதிப்படியோ தஞ்செழுத்துமே" உண்மை விளக் 43.

என்பதனால் அறியலாம்.

சூக்கும பஞ்சாக்கரம் இறைவனது சூக்குமமாகிய திருமேனியில் நான்கு திருக் கரங்களையும் முயலகனை மிதித்த திருப்பாதத்தையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது. இதனை,

"சேர்க்கும் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்"

என்னும் உண்மைவிளக்கத்தானுமறிக.

புயங்கன்- பாம்பை அணிந்தவன். "புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே" "திருப்புயங்கன் அருளார் பெறுவார்" (யாத்திரைப்3, 10) என அடிகள் மேலும் கூறுதல் காண்க. மயங்குகின்றேன் என்பது நினது அருளுருவக்காட்சியை இழந்து, பிராரத்த வினையோடு கூடிய உடலோடு வாழ்தலின் அவ்வினையின் அநுபவத்தால் மயக்கமடைகின்றேன் என்றவாறு. மயக்கம்- திரிபுணர்ச்சி. புகலிடம்- தஞ்சம் அம்மயக்கினை நீக்குதற்குத் தஞ்சமான இடம் நீயன்றிப்

*உழைப்பும் நம்பிக்கையும் சேருமிடத்தில் ஏழ்மை இருக்காது.*

பிறிதில்லையென்பார், "புகலிடம் பிறிதொன்றில்லை" என்றார். இறைவனே புகலிடம் என்பது "பொருளே தமியேன் புகலிடமே" (நீத் 17) எனவும், "எமக்குப் புகலாம் விருப்பர்க்கு" (திருக்கோவை 143) எனவும் அடிகள் அருளியமையானறிக.

புறமெனைப் போக்கல் என்றது நின்சார்பினின்றும் பிரித்து மலச் சார்பிலே செல்லுமாறு என்னைப் போக்காதொழிக வென்றவாறு. போக்கல் என்னும் முன்னிலை எதிர்மறை ஒருமை வினைமுற்று போக்காது என வினையெச்சப் பொருட்டாய் "போற்றி" என்பதனோடு முடிந்தது. கண்டாய்- முன்னிலை அசை இறுதியிலுள்ள போற்றி போற்றி என்பதற்கு வணக்கம் வணக்கம் எனப் பொருளுரைக்கினும் இழுக்காகாது.

இதன்கண், மயங்குகின்றேன் புகலிடம் பிறிதொன்றில்லை, புறமெனைப் போக்கல் கண்டாய் என்பவற்றால் எனக்கருள் செய்யவேண்டுமென்பது புலப்படுதலின் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 62. (தொடரும்...

## நாயின் சாமர்த்தியம்

ஒருநாள் நாய் ஒன்று காட்டில் வழி தவறிவிட்டது. அப்பொழுது அங்கு சிங்கம் ஒன்று பசியோடு அலைவதைப் பார்த்த நாய், ஒரு நிமிடம் பதறிப்போனது. இன்றோடு நம் கதை முடிந்தது என்று எண்ணியது. அப்பொழுது அந்த நாய் அங்கு கிடந்த எலும்புத் துண்டுகளைப் பார்த்ததும் அருமையான திட்டம் ஒன்றைத் தீட்டியது. சிங்கம் வரும் வழியில் திரும்பி அமர்ந்துகொண்டு எலும்புத் துண்டுகளைச் சுவைக்கத் தொடங்கியது. சுவைத்துக் கொண்டே சத்தமாக "சிங்கத்தைக் கொன்று தின்பது எவ்வளவு சுவையாக உள்ளது, ஆனால் வயிறு நிறையவில்லை. இன்னொரு சிங்கம் கிடைத்தால், ஆஹா! வயிறு நிறைந்துவிடும்" என்று கூறியது.

இதைக்கேட்ட சிங்கம், "அய்யோ...! இந்த நாய் சிங்கத்தை அல்லவா கொன்று தின்கிறது" என்று நினைத்துப் பயந்து அங்கிருந்து ஓடிப்போனது.

இதையெல்லாம் மரத்தின்மேல் இருந்து குரங்கு ஒன்று பார்த்துக்கொண்டிருந்தது. சிங்கத்தை ஏமாற்றிய இந்த நாயைச் சிங்கத்திடம் போட்டுக்கொடுத்தால், சிங்கத்தின் நட்பைப் பெற்று வாழ்நாளெல்லாம் பயம் இல்லாமல் வாழலாம் என்று நினைத்தது.

உடனே சிங்கத்திடம் சென்று, நாய் செய்த தந்திரத்தைப் பற்றிச் சொன்னது. அதைக் கவனித்த நாய் ஏதோ தப்பு நடக்கப்போகிறது என்று உணர்ந்தது. குரங்கு சொன்னதைக் கேட்ட சிங்கம் கோபங்கொண்டு, "இப்பொழுது அந்த நாயை என்ன செய்கிறேன் பார். நீ என் முதுகில் ஏறிக்கொள்" என்று குரங்கை முதுகில் ஏற்றியபடி நாய் இருந்த இடத்தை நோக்கி ஓடியது.

இப்போது அந்த நாய் என்ன செய்திருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய முடியுமா? தன்னை நோக்கிச் சிங்கம் பாய்ந்து வருவதைப் பார்த்த நாய், முன்போலவே திரும்பி உட்கார்ந்துகொண்டு, "இந்தக் குரங்கை அனுப்பி ஒரு மணி நேரமாகிவிட்டது. இன்னும் ஒரு சிங்கத்தைக்கூட ஏமாற்றி அழைத்து வரவில்லையே" என்று உரக்கக் கூறியது. இதைக் கேட்டதும், சிங்கம் குரங்கைத் தள்ளிவிட்டுத் திரும்பிக்கூட பார்க்காமல் ஓடியே விட்டது.

**நீதி:** நாம் வாழும் உலகில் சிங்கம் மற்றும் குரங்குபோல பலர் நம்மைச் சுற்றி இருக்கலாம், அவர்களை அடையாளம் காண முயற்சி செய்யுங்கள். சாமர்த்தியத்துடன் வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.

*அகங்காரம் அடியோடு நீங்காவிட்டால் இறைவனை அடையமுடியாது.*

# சுய நம்பிக்கை வாழ்வின் மூலவேர்

– திரு பூ.க. இராசரத்தினம் அவர்கள் –

சுய நம்பிக்கை ஒரு மனிதனுடைய ஜீவநாடி. ஒருவன் நோயிலிருந்து பிழைப்பேன் என்று சுய நம்பிக்கையோடு இருப்பவன் பிழைத்துக்கொள்ளலாம் என்பது சான்றோர் வாக்கு. படைப்பாளி சாமூவேல் யோன்சன் சுயநம்பிக்கை பற்றிக் கூறிய வார்த்தை களைக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

'பெரிய பிரயத்தனங்களை மேற்கொள் வதற்கு சுய நம்பிக்கை முதலாவது தேவை யான பொருளாகும்." சுய நம்பிக்கை வாழ் வின் மூலவேர் எனலாம்.

சுயநம்பிக்கை உடையவன் தெய் வீகப் பற்றோடு வாழ்க்கையின் கடைசி நிமி டம் வரை போராடுவான். அவன் திருப்தியுடன் வாழ்கின்றான். நம்பிக்கை ஏற்படும்பொழுது மனிதன் தன்னுடைய இலட்சியங்களுக்கு ஏற்ப சாதனைகளைப் புரிகின்றான். இலட் சியம் ஒரு மகத்தான சக்தி. ஒரு நாட்டின் மக்கள் ஒவ்வொருவரிடமும் அதே இலட் சியம் துடிக்கும்போது அந்த நாட்டின் மொத்த சக்தி அதிகரிக்கின்றது. அந்த ஐக்கிய சக்தி சாதிக்க முடியாதவற்றையும் சாதிக்கின்றது. சுய நம்பிக்கை உள்ளிருந்து புறப்படும் மாபெரும் சக்தி. இச் சக்தி உள்ளவர்களை அவர்களின் பேச்சு, செயற்பாடுகள்மூலம் அறிந்து கொள்ளலாம். "நான் அதைச் செய்து முடிப்பேன். இலட்சியத்தை அடை வேன்" எனக் கூறுவார்கள்.

சுய நம்பிக்கையற்றவர்கள் பேச்சில், செயற்பாடுகளில், தயக்கம் பயம் உடை யவர்களாகக் காணப்படுவார்கள். இவர்கள் தங்களையே நம்பமாட்டார்கள். அதேபோல பிறரையும் நம்பமாட்டார்கள். இவர்கள் பிறரைச் சார்ந்து வாழவிரும்புபவர்கள். தமது பொறுப்புக்களை மற்றவர்கள்மீது சுமத்தி விடுவார்கள். தாழ்ந்த மனப்பாங்கு உடைய வர்களாகக் காணப்படுவார்கள். தமது திறமை பற்றிச் சந்தேகம் கொள்வார்கள். புதிதாகத் திட்டமிடத் தயங்குவார்கள். சில சமயம் அநாவசியமாகத் தமக்குத் தீங்கு விளைவிக்க எண்ணுவார்கள். இதற்கு எதிர் மாறாக தன்நம்பிக்கை உடையவர்கள் அகம் பாவம், கர்வம் உடையவர்களாகவும் இருப் பார்கள்.

ஒரு மனிதனைச் செயற்படச் செய் வது அவனது மனதில் தோன்றும் எண்ணங் கள். உதாரணமாகப் பயம் நிறைந்த எண் ணங்கள் அவனை பலவீனப்படுத்துவதால் விரும்பிய செயற்பாடுகளின் அத்திபாரமும் சீர்குலைந்துவிடும். அவனுடைய சக்தியைக் குறைத்தும் விடும். இதற்குப் பதிலாக நல்ல உற்சாகம் நிறைந்த எண்ணங்களோடு, நல்ல சேவை செய்கின்ற மனப்பாங்கோடு வாழ்ந் தால் மனதைப் பலப்படுத்த முடியும். மனோ தத்துவ நிபுணர்கள் ஆய்வுகள் மூலம் தாம் அறிந்தவற்றைக் குறிப்பிட்டுள்ளார்கள். பயத் துக்குரிய காரணங்களை இனம் கண்டு ஆவன செய்ய வேண்டும். "பயந்தாங்கொள்ளி கள் பல முறை தமது மரணத்துக்கு முன் இறக்கின்றார்கள்" என்று ஓர் ஆங்கில அறிஞர் கூறியுள்ளார். தெய்வ நம்பிக்கை யைப் பலப்படுத்த வேண்டும். நல்ல பிற காரியங்களைப் புரிவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும். நல்ல பாட்டை முணு முணுக்கலாம். தாம் பெற்ற பாராட்டுக்களை, வெற்றிகளை, உன்னத செயற்பாடுகளை

*துன்பங்கள் நம் திறனுக்கும் நம் வலிமைக்கும் விடப்படும் சவாலாகும்.*

இரைமீட்டிப் பார்க்கலாம். பெரியோர்கள் தமது இலட்சியங்களை அடைவதற்காக அனுபவித்த இன்னல்களை, தியாகங்களை நினைவிற்கொள்ளலாம். வீரம் நிறைந்த சம்பவங்களை - உதாரணமாக சினிமாவில் பார்த்து அனுபவித்த வீரம் நிறைந்த காட்சிகளை நினைவிற் கொள்ளுதல் போன்ற படிமுறைகளைக் கையாளலாம். யோக அப்பியாசம், தியானம், மக்கள் சேவை போன்றவற்றை அரவணைத்து நிம்மதியாக வாழ்ந்தவர்கள் பற்றிய சான்றுகள் உண்டு என்பதை அவர்களுக்கு விளக்கிக் கூறவேண்டும். மகாத்மா காந்தி தனது எண்ணங்களாலும், செயல்களாலும், இலட்சியத்தாலும், மன உறுதியாலும், சத்திய நெறிகளாலும், தியாகத்தாலும் தன்னைத் தானே உயர்த்திக்கொண்டார். நாமும் சுயநம்பிக்கையுடன், சத்தியத்தையும் தர்மத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆங்கில அறிஞர் கபிடக்லஸ் இவ்விடயம் பற்றி விளக்கம் தருகிறார். "ஒருவராவது நூறு வீதம் நம்பிக்கை உடையவர்களாக இருக்க முடியாது. இது வாழ்நாள் முழுவதிலும் உள்ள நிலைதான். நீ நீயாக இருந்து நம்பிக்கையோடும் துணிவோடும் இருக்கப் பழக வேண்டும்."

நாம் சில உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்விலும் சிந்தனையிலும் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படலாம். உடல் நோய்வாய்ப்பட்டால் மனமும் தளர்ச்சியடையலாம். இவற்றை நாம் நன்கு விளங்கி வாழப் பழக வேண்டும். இளம் வயதில் சிறு பிணக்குகளும், தோல்விகளும் சுய நம்பிக்கையைப் பாதிக்கும். இவற்றை படிப்படியாக, அனுபவ வாயிலாக நாம் விளங்கி மனதைத் திடப் படுத்தி வைத்திருக்கப் பழக வேண்டும். ஆங்கில அறிஞர் போர் நாட்சோ கூறியவற்றைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். "முதல் பனிச்சறுக்கு விளையாட்டில் இறங்குபவன் பலமுறை விழுந்து எழுந்துதான் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். எந்தத் துறையிலும் நீ புதிதாய் இறங்குகிறாய் என்றால் உனக்கு முன் அதிலே அந்தத் திறனாளிகள் இருப்பார்கள். அவர்களை எல்லாம் பார்த்து நம் செய்கையைத் தீர்மானம் செய்ய வேண்டுமென்றால் நம்மால் ஒரு காரியமும் செய்ய முடியாது."

நாம் நல்லதையே சிந்தித்து, நல்ல விழுமியங்களைப் பின்பற்றி வாழ்ந்தால், பிறர் எங்களைப் பற்றி என்ன சொல்லி விடுவார்கள் என்ற பயம் தேவையில்லை, ஒருவனை இயக்கும் துடிப்புண்டு. நல்லெண்ணங்களால் விளையும் செயல்களின் துடிப்பு எல்லோரையும் மகிழவைக்கும் தன்மை வாய்ந்தது. எல்லாம் நன்மைக்கே என்ற சிந்தனையோடு எல்லோரும் வாழப்பழக வேண்டும். ஒருவன் தான் செய்த நற்செயல்களை இரைமீட்டிப் பார்த்தால் சூழலினால் ஏற்படுத்தக் கூடிய பயப்பீதியை விரட்டி அடிக்கலாம். திருவள்ளுவர், சேக்ஸ்பியர் போன்ற அறிவாளிகளின் அறிவுரைகளை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

"**அறன் அறிந்து முத்த அறிவுரையார் கேண்மை**
**திறன் அறிந்து தேர்ந்து கொளல்**" குறள் - 441

மனம் தளராது வாழ முடியும் என்ற சுய நம்பிக்கையோடு வாழப் பழக வேண்டும். "மனித வாழ்க்கையில் ஓர் அலையோட்டம் உண்டு. அது வெள்ளம்போல் புரண்டு எழும் சமயத்தில் அதிர்ஷடத்தைக் குவிக்கின்றது அலையோட்டம் - அலையில் மேடும் பள்ளமும் உண்டு. அது பள்ளத்தில் இருக்கும் பொழுது மனதளவில், உ ı ளளவில் எல்லோருக்கும் அச்சமும் இயலாமை எண்ணங்களும் எழுவது உண்டு. இந்த உலக இயல்பை

*தூய மனமுடையவன் எல்லாவற்றையும் தூயதாகவே காண்பான்.*

நாம் உணரும்போது அலையோட்டத்தில் இந்தக் கீழ்நிலையைக் கடக்க மிகவும் உதவும். இது உலக இயல்பு என்று எமது மனத்தைத் தேற்ற வேண்டும்" என உலகப் புகழ்பெற்ற நாடக ஆசிரியர் சேக்ஷ்பியர் கூறியுள்ளார்.

மேலும் உதாரணங்கள் வாயிலாக விளக்கலாம். ஆங்கில மன்னன் றொபேட் புரூஸ் போரில் தோல்வி அடைந்த பின் கட்டிலில் படுத்தான். ஒரு சிலந்தி உட் கூரையிலிருந்து கீழே வர நேர்ந்தது. ஆனால் மேலே போவதற்கு முயற்சியைக் கைவிட வில்லை. ஒன்பதாவது தரம் அதன் சுய நம்பிக்கை வெற்றியடைந்தது. அரசனும் தானும் வெற்றியடையலாம் என்ற சுய நம்பிக்கையோடு மனம் தளராது போர்புரிந்து வெற்றியடைந்தான்.

மூன்றாம் உலகத்தில் அதியுயர் தலைவர்களில் ஒருவராக மதிக்கப்படும் நெல்சன் மண்டேலா சுயநம்பிக்கையோடு பல வருடங்களாகப் போராடி இலட்சியப் போராட்டத்தில் வெற்றியடைந்தார்.

மனிதன் தான் வாழவேண்டும்- தன்னைப் போலவே பிறரும் வாழ வேண்டும்- மனிதர் எல்லோரும் மனிதராகவே வாழ்ந்திட வேண்டும் என்ற மனப்பாங்கைக் கொண்டவனாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் சுயநம்பிக்கை பலம் பெறும், மனித இனம் ஒன்றுபட்டு வாழும், நாகரிக வாழ்வு வாழ முடியும், நாடுகள் செழிப்படையும்.

நாடுகளும் மக்களும் சுய நம்பிக்கையோடு வாழ்வதற்கு மனிதனால் படைக்கப் பட்ட முட்டுக்கட்டைகள் தோன்றிய வண்ணம் உள்ளன. மனிதனுடைய அவசியமாக உணவு, உடை, உறைவிடம் என்ற மூன்று அம்சங் களோடு, சமூகம் பெறவேண்டிய புதிய அம்ச மாக விஞ்ஞானம் விளங்குகிறது. இதனால் மனிதனுடைய மனநுட்பம், மனோதிடம், குழப்பங்களுக்கு உள்ளாகி இருக்கின்றன. மனோ இயக்கம், பாதை விலகி இயந்திரங் களின் பின்னால் செல்ல நேர்ந்தது. விஞ்ஞா னம் சுதந்திரமாக வளர்ந்து கொண்டு சாதக-பாதக நிலையில் இயங்குவதை, அதனை உடமையாகவும் ஆதிக்க உரிமையாகவும் வைத்துக்கொண்டு, அமைப்பு ரீதியில் உச்சக் கட்டத்தில் இருப்பவர்கள் வழி நடத்த முடி கிறது. இந்நிலையில் நாட்டின் மக்களின் பொது எதிர்பார்ப்புக்களுக்கு பரிமாற்றப்பட முடியாமல் போவது யாவரும் அறிந்த விடயமாகும்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சி தடுக்கப் பட முடியாத நிலையில், அதன் பயன்களை மனிதனுக்கு சாதகமாக மட்டுமே இயக்கச் செய்ய பாதகமாக மாறாதவாறு பார்த்துக் கொள்ள எந்த நெறியும் இல்லை. இந்நிலை யில் மனித நலனுக்கு ஆதரவாக இல்லாத அம்சங்களைப் பற்றி மனிதன் சிந்திக்கும் பொழுது சுய நம்பிக்கையை இழக்க நேரிட லாம். எனவே விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியை எந்த நோக்கத்திற்காக, எவ் விதத்தில் மனிதன் கைக்கொள்ள வேண்டும் என்பதை ஆராய வேண்டிய தேவை ஏற்பட் டுள்ளது. உலகப்புகழ்பெற்ற விஞ்ஞானி அல்பேட் ஐன்ஸ்ரன் "சமயமும் விஞ்ஞான மும்" பற்றிக் கூறிய வார்த்தைகளைக் குறிப் பிடுவது பொருத்தமாகும். "சமயம் அற்ற விஞ்ஞானம் நொண்டி, விஞ்ஞானமற்ற சமயம் குருடு. இதற்கு கலைத்துறையும் விஞ்ஞானத் துறையும் இணைந்து ஆய்வுகளை மேற் கொள்ள வேண்டும். மனிதனின் அணுகு முறை விஞ்ஞான செயற்பாடுகளை மனித நோக்கத்திற்குச் சாதகமாக ஆக்கிக் கொள் வது என்ற நிலைப்பாடு அமைந்தால் அது விஞ்ஞானத்திற்கும் மனிதனுக்கும் பயனுள்ள தாகும்.

மனிதன் சுயநம்பிக்கையோடு வாழ தனிமனிதனது, தரமும், பண்பும் மட்டுமே போதாது. சமுதாயமும் மனித இனமும் சீர்பட, திருந்த, நல்வாழ்வு வாழ மனிதனை மனிதனாக வாழ வைத்திடும் நல்ல நிலை, நல்ல சூழ்நிலை தேவை. மிகத் தேவை. அப்பொழுதுதான் மனிதன் சுய நம்பிக்கையோடு வாழ முடியும். வாழ்க்கை ஒரு வாய்ப்பு என்பதை நன்கு புரிந்தால் சுய நம்பிக்கையோடு சீரும் சிறப்புடனும் வாழலாம்.

## 2018ஆம் ஆண்டுக்கான
## யாழ் விருது



யாழ் விருது பெற்ற கலாநிதியே
அன்னதான அண்ணலே
அமுத கலாஜோதியே
காட்சி தரும் கந்தனே
வாழ்வளிக்க வாழும் வள்ளலே
தொண்டைமானாற்று மோகனதாஸ் சுவாமிகளே
நீவிர் வாழ்க
நீடூழி வாழ்க.

அடியவர் வினை அறுத்து
அருள் கோடி அருளும்
சந்நிதிச் சண்முகன்
மலர்ப்பாதங் கிடந்து புரண்டு
இன்னும் இயற்றுவீர் பணிகள் பல.

எந்நிதியும் தரும் சந்நிதியான்
"யாம் இருக்கப் பயம் ஏன்" என்கிறான்
கேட்கிறதா?
துவ்வாதார் துயர் தீர்க்கும்
உம் பணி தொடர
துணை நிற்பான் அவன்
பயம் ஏன்

கந்தன் பணி தொடர்வீர்
அவன் அருள் அடைவீர்.

-சீ. சாந்தநாதன்-

*மௌனமாகத் தியானம் செய்தால் மனம் கலங்காத நிலை வந்து சேரும்.*

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள் (தொடர்ச்சி...)

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

ஒரு சமயம் யசோதை குழந்தையை மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தாள். திடீரென்று தாங்கமுடியாத அளவுக்கு குழந்தை கனத்தது. வியப்போடு குழந்தையைக் கீழே இறக்கிவிட்டுவிட்டு, வீட்டு வேலைகளில் ஈடுபட்டாள். அப்போது கம்ஸனால் அனுப்பப்பட்ட திருணாவர்த்தன் என்னும் அசுரன் புயல் காற்றாகி வீசியபடி, அங்கிருந்த பகவானை எடுத்துக்கொண்டு கிளம்பினான். கோகுலமே இருளில் மூழ்கியது. கடும் புயலோடு மண் மழை பொழிந்தது. அந்த இருளிலும், புயலிலும் குழந்தையைக் காணாது யசோதை கதறினாள். திருணாவர்த்தன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் போகமுடியவில்லை. குழந்தையின் கனம் பாறாங்கல் போன்று கனமாக இருந்தது. குழந்தையைத் தள்ளிவிட முயன்றான். குழந்தை அவன் கழுத்தை இறுக்கியது. அவன் விழி பிதுங்கி உயிர் பிரிந்தது. குழந்தையோடு கீழே ஒரு பாறையின்மீது விழுந்து அவன் உடல் சிதறிப் பொடிப்பொடியாகியது. குழந்தை அவன் சிதறிய உடல்மீது விளையாடிக்கொண்டிருந்தது. மீண்டும் மரணத்திலிருந்து மீண்டு வந்த குழந்தையைக் கண்டு பெற்றோர் சந்தோசத்தில் திளைத்தனர். "பூர்வ ஜன்மத்தில் நாம் மிகுந்த புண்ணியத்தைச் செய்திருக்கவேண்டும். நம் குழந்தை ராட்சதனிடமிருந்து தெய்வ அனுக்கிரகத்தால் உயிர் பிழைத்தான். என்ன தவம் செய்தோமோ, என்ன பூஜைகளைச் செய்தோமோ, கஷ்டப்பட்டவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து உதவினோமோ தெரியவில்லை. குழந்தையை உயிரோடு மீண்டும் அடைந்துவிட்டோமென மகிழ்ந்தனர்.



யதுக்களின் புரோகிதர் கர்க்க மகரிஷி. அவர் கோகுலத்துக்கு வந்தார். அவர் இரு குழந்தைகளுக்கும் சடங்குகள் செய்து பெயர் சூட்டினார். ரோகிணியின் மைந்தனுக்கு "பலராமன்" என்றும், நந்தகோபரின் குழந்தைக்கு "கிருஷ்ணன்" என்றும் பெயரிட்டார்.

நந்தன் திருமாளிகையில் அதிகாலை மாடுகள் தங்கள் கழுத்து மணிகளை ஆட்டி சுப்பிரபாதம் செய்கிறது. யசோதா பசுஞ் சாணத்தை திருமகள் வரவுக்காக மனதிலே தோத்திரம் செய்து பாடித் தெளிக்கிறாள். எழில் கோலம் இடுகிறாள். துளசிச் செடிகள் காற்றில் தலையசைத்து அசைந்து மணக்கிறது. அவளையறியாமல் கண்ணபிரானின் திருக் காலடிகளை வரைந்து விடுகிறாள். அட! என்ன இது! அங்குசம், சங்கு சக்கரம்!

*ஆசையற்றவனே அகில உலகிலும் மிகப்பெரிய பணக்காரன்.*

அழகிய கொடி! அமுதகலசம்! கற்பகமரம் போலும் மங்கல சின்னங்களையன்றோ காலடி ரேகைகளாய் அவளையறியாது வரைந்துள்ளாள்!

அங்குவந்த கர்க்கமுனிவர் அதைக் கண்டு திகைக்கிறார். "நன்றே செய்தாய் அம்மா. இவன் ஆயர்புத்திரன் அல்லன். அருந்தெய்வமம்மா!" கீழே குனிந்து பரந் தாமனின் திருப்பாதச் சுவடுகளைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டு உள்ளே சென் றார்.

வைரங்கள் பதிக்கப்பட்ட தங்கத் தொட்டில்! கைதேர்ந்த ஆசாரியரால் செதுக் கப்பட்ட மகர மீன்களால் நான்கு மூலை களுக்கும் அலங்காரம். அதன் புரளும் கண் களிலே மாணிக்கங்கள் பக்கத்திலே அகில் தூபம் புகைந்து நறுமணம் கமழ்கிறது. குத்துவிளக்கொன்று சுடர்விட்டுப் பிரகாசிக் கின்றது. மெத்தென்ற வெண்மையான அன் னத் தூவியாலான திருமஞ்சம். ஆதி சுந்தர னாய் மென்மையான மெத்தையிலே ஒய்யார மாய் நந்தபாலன், யசோதையின் செல்வம், கோபியர் ரமணன் படுத்துறங்குகிறான். கர்க் கர் உறங்குவதாய் நடிக்கும் கண்ணனை விழி கொட்டாமல் பார்க்கிறார். கரங்களைத் தலைக்குமேல் உயர்த்தி ஸ்தோத்திரம் சொல்லி மங்களா சாசனம் செய்து கும்பிடு கிறார்.

மடிநிறைந்தொழுகும் பாலுடைய காராம் பசுக்களைச் சரசரவென்று கறந்துவிட்டு, கன்றுகளைப் பாலுண்ண அவிழ்த்துவிட்டு விட்டு, கறந்த பாலை அடுப்பிலே காய்ச்ச வைத்தாள் யசோதை. பெரிய சாடியில் தயி ரைக் கொட்டி சிலுப்பினாள். கைவளையல் களும் ஓசைப்படுத்த தயிரரவம் கண்ணனை எழுப்பி விடுகிறதாம். "அம்மா! என்ன செய் கிறாய்?" "வெண்ணெய் கடையறேன் செல் லமே, நீ போய் இன்னும் கொஞ்சநேரம் தூங்கப்பா". "தூங்கப்படாதம்மா. ராட்சதர்கள் விழுங்கி விடுவார்கள். எப்போதும் விழித்துக் கொண்டிருக்கணும் என்று நீதானே நேற்றுச் சொன்னாய்?" "சரிசரி நீ போய் அண்ண னுடன் சமர்த்தாக விளையாடு". "அம்மா! இந்த வீடும், செல்வமும் உனது என்று நீதானே நேற்றுச் சொன்னாய். அப்படியானால் இப்பொழுதே எனக்கு வெண்ணெய் தர வேண்டும்" "கண்ணா! பிடிவாதம் செய்யாதே. அதிகாலையில் வெண்ணெய் உடம்புக்கு நல்லதல்ல" "அம்மா! நீ என் பங்கைக் கொடுத்துவிடு. சூரியன் வந்ததும் குழந்தைக் கண்ணன் சாப்பிடுவானாம்." யசோதை மந்த காசமாய்ச் சிரித்தாள். "என்னே புத்திசாலி இந்தக் குழந்தை!" என வியந்தபடி கொஞ் சம் வெண்ணெயை அவன் கையில் கொடுத்து விட்டு வெண்ணெயைக் கடையத் தொடங் கினாள். கண்ணன் வெண்ணெயுடன் அடுத்த வீட்டிற்கு ஓடிவிட்டான்.

குழந்தைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தார்கள். கன்றுகளோடு விளையாடினார்கள். தாய்மார் இவர்களின் விளையாட்டுக்களைப் பார்த்து மகிழ்ந்தார்கள். கோகுலத்திலுள்ள இடைச் சிறுவர்களுடன் சேர்ந்து தினம் தினம் கொண் டாட்டம்தான். எல்லோருக்கும் கிருஷ்ணன் தான் தலைவன். அவன் செய்யும் அட்ட காசமோ தாங்கமுடியாததாக இருந்தது.

கிருஷ்ணன் தரும் தொல்லைகளை எல்லாம் மற்றப் பெண்கள் யசோதையிடம் முறையிட்டார்கள். பால்கறப்பதற்கு முன்னே கன்றுகளை அவிழ்த்து விடுகிறான். ஏன் இப்படிச் செய்கிறாய் என்றால் சிரிக்கிறான். பால் தயிர் எல்லாம் திருடிச் சாப்பிடுகிறான். குழந்தை சாப்பிடட்டுமே என்று பார்த்தால் குரங்குகளையெல்லாம் கூப்பிட்டுக் கொடுக் கிறான். அதில் ஒரு குரங்கு சாப்பிடாவிட்டால் பானை சட்டியெல்லாம் உடைத்து விடுகிறான்.

*பூரணமாகத் தெரிந்துகொள்ளாத விஷயம் நம் அறிவில் சேராது.*

வெண்ணெய் தயிர் இல்லாவிட்டால் தொட்டிலில் கிடக்கும் குழந்தையைக் கிள்ளி அழ விடுகிறான். இப்படியாக ஒவ்வொரு கோபியரும் கண்ணன்மேல் அதிகம் பிரியமுள்ளபோதும், பொய்யாகக் கோபம் கொண்டவர்களைப்போல முறையிடுகிறார்கள்.

"தாயே யசோதா உன்தன் ஆயர்குலத்துதித்த
மாயன் கோபாலக் கிருஷ்ணன் செய்யும் ஜாலத்தைக்கேளடி (தாயே)
தையலே! கேளடி உன் பையனைப்போல் இந்த
வையகத்தில் ஒரு பிள்ளை அம்மம்மா நான் கண்டதில்லை (தாயே)
காலினிற் சிலம்பு கொஞ்ச கைவளை குலுங்க முத்துமாலைகள் அசைய
தெருவாசலில் வந்தான்
வானோர்கள் மகிழ மனிதர் எல்லாம் புகழ நீலவண்ணக்
கண்ணன் நடனம் ஆடினான்.
பாலன் என்றுதாவி அணைத்தேன் யசோதா
அணைத்த என்னை மாலையிட்டவன் போல வாயினில் முத்தமிட்டான்
பாலன் அல்லடி உன்மகன் ஜாலமாய் செய்வதெல்லாம்
நாலு பேர்களிடம் சொன்னால் நாணம் மிகவாகுதடி (தாயே)
முந்தாநாள் அந்திநேரத்தில் சொந்தமுடன் கிட்டவந்து
விந்தை பலவும் செய்து விளையாடினான்
கையளவாகிலும் வெண்ணெய் தந்தால்தான் விடுவேனென்று
முன்துகிலைத் தொட்டிழுத்துப் போராடினான்"

எனும் கீர்த்தனையில் கிருஷ்ணனுக்கு வெண்ணெய் மேலிருந்த அதீதப் பிரேமையை குறிப்பிடுகிறார் ஊத்துக்காடு வேங்கட சுப்பையர் ஸ்ரீ கிருஷ்ணகானத்தில். (தொடரும்...

## குறையா நிறையா

ஒரு கிராமத்தில் ஏழை ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தன் வீட்டுத் தேவைக்காகத் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்துவருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். தண்ணீர் எடுத்துவர அவன் இரண்டு பானைகளை வைத்திருந்தான். அந்தப் பானைகளை ஒரு நீளமான தடியின் இரண்டு முனைகளிலும் தொங்கவிட்டு, தடியைத் தோளில் சுமந்து செல்வான். இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய ஓட்டை இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும்பொழுது, குறையுள்ள பானையில் பாதியளவு நீரே இருக்கும். குறையில்லாத பானைக்குத் தன் திறன்பற்றி பெருமை. குறையுள்ள பானையைப் பார்த்து எப்பொழுதும் அதன் குறையைக் கிண்டலும் கேலியும் செய்துகொண்டே இருக்கும். இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன. கேலி பொறுக்க முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்து பின்வருமாறு கேட்டது. "ஐயா! என் குறையை நினைத்து நான் மிகவும் கேவலமாக உணர்கிறேன். உங்களுக்குத் தினமும் என் குறையால், வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்தி, உங்கள் வேலைப்பளு மிகவும் அதிகரிக்கிறது. என் குறையை நீங்கள் தயவுகூர்ந்து சரி செய்யுங்களேன்" "பானையே! நீ ஒன்று கவனித்தாயா? நாம் வரும் பாதையில், உன் பக்கம் இருக்கும் அழகான பூச்செடிகள் வரிசையைக் கவனித்தாயா? உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும். அதனால்தான் வழி நெடுக பூச்செடி விதைகளை விதைத்து வைத்தேன். அவை நீ தினமும் சிந்திய தண்ணீரில் இன்று பெரிதாக வளர்ந்து எனக்குத் தினமும் அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்து நான் வீட்டை அலங்கரிக்கிறேன். மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன்" என்று எஜமான் பதிலளித்தான். இதைக்கேட்ட பானை கேவலமாக உணர்வதை நிறுத்திவிட்டது. அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப்படாமல் தன் வேலையைக் கருத்துடன் செய்யத் தொடங்கியது.

*நீங்கள் அளிக்கும் தானமே உங்களைப் பாதுகாக்கும் கேடயம்.*

# அருளியலும் அறிவியலும்

– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –

அருளையும் அறிவையும் இரு கண்களாகக் கொண்டே சமய இலக்கியங்கள் யாவும் படைக்கப்பட்டு இருக்கின்றன. இதனால் அறிவும் அருளும் பாலும் நீரும்போல் பிரிக்கமுடியாதபடி சமய இலக்கியங்களுக்குள் கலந்தேயுள்ளன. இருந்தபோதும் இன்றைய அறிவியல் வளர்ச்சிகள் சமய இலக்கியங்களைத் தனித்துறையாக்கி விட்டிருக்கின்றது. தவிர சமய இலக்கியங்கள் புனிதமாகவும் போற்றப்படுகின்றது. ஆனால் அறிவை அறிய வைப்பதில் சமய இலக்கியங்களே வரலாற்றுக் காலத்தில் மிகப் பெரும் பங்காற்றி இருக்கின்றன என்பது மட்டுமல்ல, இன்றைய பல்வேறு நவீன கண்டுபிடிப்புக்களுக்கு சமய இலக்கியங்களே களமமைத்துக் கொடுத்துள்ளன. எவ்வாறாயினும் அறிவும் அருளும் பிரிக்கமுடியாதபடி இணைந்தே சமய இலக்கியங்களுக்குள் இருக்கின்றபோதும் அறிவும் அருளும் தனித்துவத்தைக் காட்ட முரண்படுகின்ற நிலைகளையும் போட்டா போட்டி நிலைகளாக புராண இதிகாசங்களில் மட்டுமல்ல, வேதங்களிலேயே காட்டப்பட்டும் உள்ளன. இந்த வகையில் இறைவனின் அவதாரங்களையே அறிவும் அருளும் தனித்துவப்படுத்தும் வண்ணம் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டும் இருக்கின்றது. தவிர மறு சமயங்களில் கூட சித்துவும் சிந்தனையுமாக அருளும் அறிவும் தனித்தும் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் அருளை மேலோங்கச் செய்ய இறைவனை சித்துக்களால் காண்கின்ற போக்குக்கு இணையாக அறிவை மேலோங்கச் செய்ய அதீத கற்பனைகளைப் புகுத்தி அறிவை ஆர்வமுடன் அறிய வைப்பதில் சமய இலக்கியங்கள் ஆரம்ப காலத்தில் பெரும் பங்காற்றியும் இருக்கின்றமை பல்வேறு ஆய்வுகளில் புலனாகின்றது.

மேலும் மனிதர்கள் அறிவை அறிவதைக் காட்டிலும், அருளிலேயே பற்று (பக்தி) மிக்கவர்களாக இருந்தமையால் அருள் முறைமையிலேயே அறிவும் முன்கொண்டு சென்றமையாலேயே மக்களிடம் அறிவை மேம்படுத்துவதில் சமய இலக்கியங்கள் பெரும் பங்காற்றின. இன்றுகூட மனிதர்கள் அறிவை அறியவேண்டும் என்ற ஆவலில் அறிவதில்லை. மாறாக பட்டம் பதவிகளுக்காக கல்வியைக் கற்கின்றபோது அறிவை அறிந்துகொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்ற நிலை அன்று கல்வி கற்க வேண்டிய தேவையில்லாத காலத்தில், அறிவை மக்கள்முன் கொண்டு செல்வதில் எவ்வளவு சிரமங்கள் இருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். புரிந்து கொள்வீர்கள்.

இந்தவகையில் இறைவன் உலகைப் படைத்தான் என்ற கூற்றில் அறிவியல் மிளிர்கின்றது. ஆனால் இந்தக் கூற்றில் அருள் இல்லை. ஆனால், இறைவன் உலகைக் காக்கிறான் என்ற கூற்றில் அருள் மிளிர்கின்றது. மேலும் இறைவனே அழித்தலையும் செய்கின்றான் என்ற கூற்றில் பயம் ஏற்படுகின்றது. இது பயபக்திக்கு வித்திடுகின்றது.

ஆகவேதான் படைத்தல் என்பது அறிவுக்கு விருந்தளிப்பதும் காத்தல் என்பதும் அழித்தல் என்பதும் பய பக்திக்கு தூண்டுதலாகவும் அமைவதையும் குறியீடாகக்

*ஞானம் அடைந்தவனுக்கு எல்லாவித பந்தங்களும் அறுந்துவிடுகின்றன.*

கொண்டே இந்து மதத்தில் படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மாவுக்கு கோவிலும் இல்லை. வழிபாடும் இல்லை. எவ்வாறாயினும் இறைவன் ஒருவனே அவனே படைத்தல், காத்தல், அழித்தல் அருளல் மறைத்தல் என்னும் ஐந்தொழிலையும் செய்கின்றான்.

மேலும் அருள், நல்லருள் தீயயருள் என இருநிலைகள் இருப்பதுபோல் அறிவிலும் அறிவும் அறியாமையும் இருக்கின்றது. தவிர அறிவும் அருளும் கலந்தேயிருப்பதால் அறிவும் அறியாமையும் கூட அருளுக்குள் கலந்து நல்லருள் தீயயருளுக்கு மேலும் வலுவூட்டுகின்றது. இதனால் காலத்துக்குக் காலம் சமய இலக்கியங்கள் புதுப்பிக்கப்பட்டும் வந்திருக்கின்றமை வரலாறுகளில் இருந்து அறிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

இந்தவகையில் அருள் என்பது அறிவுக்கு அப்பாற்பட்ட அற்புதங்கள் அதிசயங்கள் நிறைந்த சித்துக்களாகவும் அறிவுகூட புதுப்பிக்கும்போது அற்புதங்களும் அதிசயங்களும் நிறைந்த சிந்தனைகளாகவும் காலத்துக்குக் காலம் இறைவனின் படைப்பின் பரிணாமத்துக்கு அமைவதாகவும் இடம்பெற்றும் இருக்கின்றது. உதாரணமாகச் சொல்லப் போனால் சித்துவுக்கு ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்சரையும் சிந்தனைக்கு சுவாமி விவேகானந்தரையும் குறிப்பிட முடியும். மேலும் இந்த உதாரணத்தை விரிவாக்கிக் காட்டவேண்டுமாகில் சித்துவுக்கு ஸ்ரீவாள் சத்யசாயி பாபாவையும் சிந்தனைக்கு கவிஞர் கண்ணதாசனையும் எடுத்துக்காட்ட முடியும். மறு சமயங்களில் சித்துவுக்கு யேசு நாதரையும் சிந்தனைக்கு நபிகள் நாயகத்தையும் (ஸல்) குறிப்பிடமுடியும்.

வேதகாலத்திலேயே சித்துவையும் சிந்தனையையும் வேறுபடுத்தும் பட்டங்களாக பிரம்ம மகரிஷி ஞான மகரிஷிப் பட்டங்களையும் குறிப்பிட முடியும். தவிர அசுரர்களும் அரக்கர்களும் கூட சித்துவாலும் சிந்தனையாலுமே (வீரம்) வேறுபடுத்தப்படுகின்றனர்.

அடுத்து இலக்கியங்களில் அறிவியலையும், அருளியலையும் வேறுபடுத்திப் பார்த்தால் இறைவனை இயற்கையாகவும் (பிரபஞ்சம்) எங்கும் நிறைந்தவனாகவும் காண்பதுவும் அறிவியலாகும். ஆனால் அவனைப் புனிதம் மிக்கவனாக ஆலயங்களில் காண்பது அருளியல் ஆகும். தவிர, ஆயிரம் ஆயிரம் ஆலயங்கள் இருந்தபோதும் ஒரு சில ஆலயங்களே மிகவும் பிரபல்யமாகப் போற்றப்பட அவற்றின் சிறப்பு மிக்க அருளியலே காரணமாகும்.

இந்தவகையில் இறைவனே அனைத்தையும் படைத்தவன் என்பது அறிவியலாக இருந்தபோதும் கூட ஒருசில பொருள்களையே அருள் மிகுந்தவையாகப் போற்றப்பட ஆன் மீகச் சிறப்புமிக்க அருளியலே காரணமாகும். உதாரணமாக கற்கள் அதிசயம் மிக்க நீர் நிலைகள் இவ்வாறு மேலும் பல புனிதப் பொருள்களை நாம் உயர்வாகக் கொண்டாட இயற்கையைத் தாண்டிய அற்புதமே காரணமாகும்.

இவ்வாறு இறைவனே அனைவரையும் படைத்தான். ஆகவே அனைவரும் இறைவன் படைப்பே என்பது அறிவியலாக இருந்தபோதும் நாம் தீட்சை கேட்டு சைவர்களாக விளங்குவது அருளியலேயாகும்.

எனவே அருளியல் என்பது நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது. அறிவியல் என்பது ஆராய்ந்து அறிந்து தெரிந்து கொள்ளக்கூடியது. ஆனால் இரண்டும் இணைந்ததுதான் சமய வாழ்வு. இதற்குச் சான்றாக எமது மொழி, பண்பாடு கலாசாரம் பழக்க வழக்கங்களின் பிரதிபலிப்பாக ஒரு கூட்டுத் தொகுப்பாக இருப்பதுவே இந்துமதம்.

*அகங்காரம் இருக்கும்வரை முத்தி கிடைக்க வழியில்லை.*

ஆகவே அறிவியலை நாம் எந்தக் கோணத்திலும் ஆராய முடியும். ஆனால் அருளியல் என்பது அவரவர் அனுபவிக்கின்ற மெய்ஞான உணர்வு. இந்த மெய்ஞான உணர்வுகளின் அனுபவங்கள் கூட அறிவியலாலேயே தொகுக்கப்பட்டு ஆவணப்படுத்தப் பட்டு சமய இலக்கியங்களாக எமது அறிவியலுக்கு அப்பாற்பட்டவையாக வழிவழியாக வருகின்ற நம்பிக்கை மட்டுமே இவற்றுக்குச் சான்றாகவும் இருக்கின்றது.

எவ்வாறாயினும் அருளியல் மட்டுமல்ல அறிவியலும் ஆன்றோர்களை நம்பி அதையே சான்றாகக் கொண்டு எங்கள் ஆராய்ச்சிகளுக்கு ஆதாரங்களாக முன் வைக்கின்றோம். ஆகவே அருளியல்போல் அறிவியலிலும் நம்பிக்கைகள் இருக்கத்தான் செய்கின்றன. தவிர, இன்றைய அறிவியல்கள் ஒவ்வொன்றும் தனித்தனித் துறைகளாக மட்டுமல்ல ஒரே துறைக்குள்ளேயே கோட்பாட்டு ரீதியான பின்பற்றல்களும் பிளவுகளும் கூட இருக்கின்றன. இந்த வகையில் யானையைப் பார்த்த குருடர்கள் நிலை அறிவியலிலும் காணப்படுகின்றது.

ஒரு முழுமை பெற்ற முரண்பாடுகள் இல்லாத அறிவியல் ஊடாக அருளியலை அணுக முடியுமாக இருந்தால் எம் கைகளில் இருக்கும் ஆதாரங்களையும் அனுபவங்களையும் கொண்டு நம்பகத்தன்மையுடைய முடிவுகளுக்கு வரமுடியும். இந்தவகையில் அருளியல் இலக்கியங்கள் அதீத கற்பனை மிகுந்தவையாக இருந்தபோதும் எம் வாழ்வில் அவை ஒத்துப்போகும்போது ஜதார்த்த பூர்வமாக அவை உண்மை என நாம் உணர்கிறோம்.

எனவே மனித வாழ்வியலூடாகவே நாம் இறைவனைக் காண எம்மைப் பக்குவப் படுத்திக் கொள்ளும்போது அருளியலும் அறிவியலும் இணைந்து கொள்கின்றது. சமய இலக்கியங்களின் உண்மைத் தன்மைகள் மீண்டும் நிரூபிக்கப்படுகின்றது.

**மேலும் சிறக்க...**

அமிழ் தாய் சுவைக்கும் அருமருந்தாய்
நோய்கள் போக்கும் அன்னதானமும்
தமிழ் மொழியின் பக்திச் சுவையைப்
பாரறியப் பகரும் ஞானச்சுடரும்
புகழ் பூத்த சந்நிதியான் அருளும்
ஆச்சிரம சேவைகளும் மேலும்சிறக்க
யாழ் விருது பெற்ற கலாநிதி மோகனதாஸ்
சுவாமிகள் பணிகள் வாழியவே.

-ஜெய. கேமலதா-



## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒக்டோபர் | 07 | புரட்டாதி | 21 | ஞாயிறு | அருணந்தி சிவாச்சாரியார் |
| ஒக்டோபர் | 10 | புரட்டாதி | 24 | புதன் | சங்கரபண்டிதர் |
| ஒக்டோபர் | 24 | ஐப்பசி | 07 | புதன் | திருமூலர் |
| நவம்பர் | 07 | ஐப்பசி | 21 | புதன் | மெய்கண்டதேவர் |
| நவம்பர் | 28 | கார்த்திகை | 12 | புதன் | ஆறுமுகநாவலர் |

*அகந்தையை விட்டுவிடுபவனுக்கு கருணை வந்துவிடும்.*

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## ஒன்பதாம் அதிகாரம்

### ஐந்தெழுத்தருள் நிலை

இவ்வதிகாரத்தில், திருவைந்தெழுத்தினைக் குறித்து உபதேச முறையில் உணர்தற் குரிய உண்மைகள் பல நுட்பமாக உணர்த்தப் பெற்றுள்ளன.

முதல் நூலாகிய சிவஞானபோதத்தில் ஒன்பதாம் நூற்பாவில் திருவைந்தெழுத்தைக் கணித்தல் விதிக்கப்பட்டுள்ளது. அதனை நினைந்தே நம் ஆசிரியர் உமாபதிசிவமும் ஐந்தெழுத்தருள் நிலையாகிய இதனை ஒன்பதாம் அதிகாரமாக அமைத்துக் கொண்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அருள் நிலையாகிய உயிர் விளக்கத்தை அடைந்தோர் அதன்பின் நிட்டை கூடலாகிய இன்புறு நிலையை எய்தமாட்டாதபோது அதனை எய்துதற்குத் துணையாயிருப்பது ஐந்து எழுத்து மந்திரமாகும். அது கருதியே இன்புறு நிலையை அடுத்து ஐந்தெழுத்தினை வைத்து உணர்த்துகிறார் ஆசிரியர்.

ஐந்தெழுத்து அருள்நிலை என்பதன் பொருள் என்ன? ஐந்தெழுத்து தன்னை உணர் வார்க்கு அருளும் முறைமை எனப் பொருள் கூறலாம். ஐந்தெழுத்து அருளுதலாவது, திருவருளைப் பற்றச்செய்து முத்திக்கு வழி காட்டுதல். பக்குவம் எய்திய உணர்வினால் திருவைந்தெழுத்தின் பொருளை உணர உணரத் திருவருள் வியாபகத்தில் ஒடுங்கியிருக்கும் நிட்டை கூடுவதாகும்.

**ஐந்தெழுத்தின் புணை:**

திருவைந்தெழுத்து உயிர்களைப் பிறவிக் கடலினின்றும் கரையேற்றுகின்ற புணையாகும். ஒருவன் நடுக் கடலில் தனியே விழுந்து தவிக்கிறான். கை சளைக்க நீந்தியும் கரை காணவில்லை. பேரலைகள் மாறி மாறி எழுந்து அவனை அலைக்கழிக்கின்றன. கடுங்காற்று வேறு சுழன்றடிக்கின்றது. அச் சூறாவளியில் அகப்பட்டு அவன் நிலை தடுமாறுகிறான். அங்கே ஆளையே விழுங்கக்கூடிய சுறாமீன் பசியோடு திரிகின்றது. அவற்றின் வாய்ப்படும் நிலையில் இருக்கிறான். பிழைக்கும் வழியே தெரியவில்லை. அந்த இக்கட்டான வேளையில் எங்கிருந்தோ ஒரு படகு வந்து சேர்கிறது. அவனுக்கு எப்படியிருக்கும் அந்த நிலையிலே தான் இருந்ததாக மணிவாசகர் கூறுகிறார். பிறவிதான் கடல். துன்பங்களே

அலைகள். மகளிர் மயக்கமே சுழன்றடிக்கும் சூறாவளி. காமமே சுறாமீன். இவற்றிடையே அகப்பட்ட தன்னைக் கரையேற்றும் புணையாகத் திருவைந்தெழுத்து அமைந்தது என்றும், அதனைத் துணையாகப் பற்றிக்கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

உயிர்கள் பிறவிக் கடலில் வீழ்ந்துள்ளன. அவை ஆணவ மலமாகிய வலிய கல்லோடு சேர்த்துக் கட்டப்பட்டு அக்கடலில் தள்ளப்பட்டுள்ளன. அவற்றைக் கல்லோடு பிணித்துக்கட்டிய கயிறு எது? இருவினைகளே அக் கயிறு. இந்நிலையில் அவ்வுயிர்கள் ஆழ்வதன்றி, நீந்திக் கரைசேர்வது எங்கே? இப்படிப்பட்ட உயிர்களைக் காப்பாற்றிக் கரை சேர்க்கவல்ல தோணியாக இருப்பது திருவைந்தெழுத்து என்கிறார் பெரியபுராண ஆசிரியர். "இரு வினைப்பாசம் மும்மலக்கல் ஆர்த்திட, வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட அருளும் மெய் அஞ்செழுத்து" என்பது அவரது வாக்கு.

**எழுத்தை அழுத்தும் எழுத்து:**

ஐந்தெழுத்தை "எழுத்தை அழுத்தும் எழுத்து" என்று குறிப்பிடுகிறார் திருமூலர். முதலில் உள்ள எழுத்து என்பது ஊழ்வினையைக் குறிக்கும். உலக வழக்கில் அதனைத் தலையெழுத்து என்பர். ஐந்தெழுத்து அயன் எழுதிய தலையெழுத்தையே அடக்கி விடுமாம்; அஃதாவது, ஊழ்வினை உயிரை வருத்தாது வந்து போம்படி செய்யுமாம். நம் ஆசிரியர் உமாபதி சிவமும், ஊழ்வினை திருவைந்தெழுத்தை ஓதுவாரை நலியா என்று சிவப்பிரகாச நூலில் கூறியுள்ளமை காணலாம். "அஞ்செழுத்து அருளினாலே வந்தவாறு உரை செய்வாரை வாதியா பேதியாவே" (செ.90) என்பது அவர் கூற்று. தேவார அருளாசிரியர்மார் அஞ்செழுத்தின் சிறப்பினைப் பலவாறாகக் கூறியுள்ளனர்.

ஐந்தெழுத்தில் ஒவ்வொரெழுத்தும் ஒரு நுண்பொருளைக் குறித்து நிற்கும். அப் பொருளாவன.

சி - சிவன்
வா - சிவனது அருட்சக்தி
ய - உயிர்
ந - திரோதான சக்தி (மாயை, கன்மங்கள் இதனுள் அடங்கும்)
ம - ஆணவ மலம்.

சிவ என்பது பதியையும், ய என்பது பசுவையும், நம என்பது பாசத்தையும் குறிக்கும் நடுவில் உள்ள பசு இரு பக்கமும் சென்று பாசத்தோடும், பதியோடும் சாரும் தன்மையுடையது.

இனி, வேறொரு வகையிலும் கூறலாம்.

ந - உயிர் மாயையில் அழுந்தி நிற்கும் சகலநிலை.
ம - உயிர் ஆணவ மலமாகிய அறியாமையில் அழுந்தி நிற்கும் கேவல நிலை.
வா- உயிர் திருவருளில் அழுந்தி நிற்கும் துரிய அருள் நிலை.
சி - உயிர் சிவத்தில் அழுந்தி நிற்கும் துரியாதீத ஆனந்த நிலை.

எனவே, உயிர் பாசத்தைச் சார்ந்து சகல கேவலங்களையும், பதியைச் சார்ந்து அருள் நிலை, ஆனந்த நிலைகளையும் அடைவது என்பது விளங்கும்.

*அழகோடு ஆணவம் கூடிநின்றால், அந்த ஆணவமே அழகை அழித்துவிடும்.*

**ஐந்தெழுத்தின் வகைகள்:**

ஐந்தெழுத்து வடமொழியில் பஞ்சாக்கரம் எனப்படும். அது தூலம், சூக்குமம், அதிசூக்குமம், காரணம், மகாகாரணம் என ஐந்து வகையாகக் கூறப்படும்.

1) தூல பஞ்சாக்கரம் - நமசிவாய
2) சூக்கும பஞ்சாக்கரம் - சிவாயநம
3) அதிசூக்கும பஞ்சாக்கரம் - சிவாய
4) காரண பஞ்சாக்கரம் - சிவ
5) மகா காரண பஞ்சாக்கரம் - சி

**தூலம்:**

நம என்பதை முதலாக உடையது தூல பஞ்சாக்கரம். ந என்பது திரோதானம், மாயை கன்மங்களையும், ம என்பது ஆணவ மலத்தையும் குறித்தலால், நம என்பவை பாச எழுத்துக்கள் எனப்படும். பாசத்தை முதலாக உடைய தூல பஞ்சாக்கரம் யாருக்கு உரியது? பாசப்பற்றை விட விரும்பாதவருக்கு அஃது உரியது. எனவே, உலகியலில் நின்று உலக இன்பத்தை நாடி நிற்போர் அஞ்செழுத்து மந்திரத்தைத் தூலமாக வைத்துக் கணித்தற்கு உரியர் என்பது விளங்கும். தூல பஞ்சாக்கரம் சமய தீக்கையில் உபதேசிக் கப்படும். அதனைப் பெற்றோர் உலகியலில் நின்று சரியையினை மேற்கொள்வர்.

**சூக்குமம்:**

தூல பஞ்சாக்கரத்தில் முன்னே நின்ற நகார மகாரங்களாகிய பாசங்கள் சூக்கும பஞ்சாக்கரத்தில் யகாரமாகிய உயிருக்குப் பின்னே செல்ல, உயிர் வகாரமாகிய திருவருளைத் தனக்கு முற்படக் கொண்டு அதன் வழிப்பட்டு நிற்கிறது. எனவே, உயிர் பாசங்களின் நீங்கித் திருவருள் வழியாகச் சிவத்தை அடைதல் வேண்டும் என்னும் பொருளைச் சூக்கும பஞ்சாக்கரம் குறித்து நிற்றல் காணலாம். சூக்கும பஞ்சாக்கரம் விசேட தீக்கையில் உப தேசிக்கப்படும். விசேட தீக்கை பெறுவோர் உலகியலில் ஓரளவேனும் பற்று நீங்கியவராய் இருத்தல் வேண்டும். இவர்கள் முன்னர் கிரியையிலும், பின்னர் யோகத்திலும் நிற்பர்.

இதுவரை கூறியவற்றால், பற்றுக்களை விட விரும்பாதவர் அஞ்செழுத்தைத் தூலமாக வைத்தும், பற்றுக்களை விட விரும்பினோர் அதனைச் சூக்குமமாக வைத்தும் ஓதுதற்கு உரியர் என்பது விளங்கும்.

மேல் சொல்லப்பட்ட தூலமும் சூக்குமமும் ஆகிய ஐந்தெழுத்துக்களில் திரோதான சக்தியைக் குறிக்கும் நகாரமும், ஆணவத்தைக் குறிக்கும் மகாரமும் ஆகிய பாச எழுத்துக்கள் முறையே முன்னேயும் பின்னேயும் நிற்பதை அறிந்தோம். பாச எழுத்துக்களை விடாது ஓதுவதால் பாசப்பற்று அறாத நிலையே உளதாகும். பாசம் அறாதபோது பதி ஞானமாகிய திருவருள் எங்ஙனம் விளங்கித் தோன்றும்?

பஞ்சாக்கரத்தைத் தூலமாகக் கணித்தலை விடுத்து, சிவாயநம எனச் சூக்குமமாகக் கொண்டு கணித்தாலும் யகாரம் வகாரத்திற்கும் நகாரத்திற்கும் இடைப்பட்டே நிற்றலால் பாசம் நீங்காது என்று சொல்லப்படும்.

**அதிசூக்குமம்:**

சூக்கும பஞ்சாக்கரத்தைக் கணித்து வரவர, உள்ளம் உலகியலின் நீங்கிச் சிவன்பாற் செல்லும்; ஞானத்தில் வேட்கை உண்டாகும். அத்தகையவர் ஞானாசிரியரை அடைந்து அவரது உபதேசத்தைப் பெறுவர். ஞானகுரு அவர்க்கு நிருவாண தீக்கை எனப்படும் ஞான தீக்கையினைச் செய்து பாச எழுத்துக்களை நீக்கி ஐந்தெழுத்தை மூன்றெழுத்தாக வைத்து உபதேசிப்பார். இம் மூன்றெழுத்து மந்திரமே அதிசூக்கும பஞ்சாக்கரம் எனப்படும். முத்தி பஞ்சாக்கரம் என்பதும் இதுவே.

ஞானாசிரியர் உபதேசித்தபடி சிகாரம் முதலிய மூன்றெழுத்துக்களை (சிவாய சிவாய என) திரும்பத் திரும்பக் கணிக்கும்போது யகாரம் வகாரத்திற்கும் சிகாரத்திற்கும் இடைப்பட்டதாகிவிடும். அந்நிலையில், அருளுக்கும் சிவத்திற்கும் நடுப்பட்டதாகிய ஆன்மாவைப் பாசங்கள் எவ்வாறு பற்றும்?

இவ்வாறு மூன்றெழுத்தை மட்டுமே மந்திரமாகக் கொண்டு உணர்ந்து உணர்ந்து நிற்கப் பாசம் நீங்கும்; பதி ஞானம் இனிது விளங்கித் தோன்றும். இங்ஙனம் விளங்கிய பதி ஞானத்தால் உயிர் பதியைக் கண்டு இன்புறும். இங்ஙனம் முத்திக்கு வழியாக இருத்தலின் இம்மூன்றெழுத்து மந்திரம் முத்திபஞ்சாக்கரம் எனப்படுவதாயிற்று.

**காரணம்:**

இவ் அதி சூக்கும பஞ்சாக்கரத்தினும் சூக்குமமாய் நிற்பது காரண பஞ்சாக்கரம் எனப்படும். முற்கூறிய மூன்றெழுத்துக்களுள் ஈற்றில் உள்ள ஆன்ம எழுத்தாகிய யகாரத்தையும் நீக்கி, எஞ்சிய இரண்டெழுத்துக்களை (சிவ) மட்டுமே மந்திரமாகக் கொள்வது காரண பஞ்சாக்கரமாம். ''சிவசிவ'' என்பது இரண்டெழுத்து மந்திரத்தைத் தொடர்ந்து சொல்லும் முறையாகும்.

பாச எழுத்துக்களை நீக்கிய அதி சூக்கும பஞ்சாக்கரத்தை ஓதி உணர்ந்து, பாசம் நீங்கி ஆன்ம சுத்தி பெற்ற நிலையில் அவ்வான்மா தன்னறிவைத் திருவருளுக்குள் அடங்கக் கொடுத்துத் தன்னை இழந்து நிற்கும். தன்னை இழந்து நிற்பதாகிய இந்நிலை சிவயோகம் என்னும் அருள் நிலையாகும். ஆன்மா தன்னை உணர்தல் இன்றிச் சிவனை மட்டுமே உணர்ந்து நிற்கும் நிலையாகும். ஆகவே இங்கு ஆன்ம எழுத்தாகிய யகாரம் நீக்கப்படுகிறது.

**மகா காரணம்:**

இக் காரண பஞ்சாக்கரத்தினும் சூக்குமமானது மகா காரண பஞ்சாக்கரமாகும். ஆன்மா சிவத்தை அணைந்து ஆனந்தத்தில் மூழ்கும் நிட்டை நிலையில் ஆன்மா அருளையும் நினையாது ஆனந்தமாகவே நிற்றலால், அவ்விடத்து அருள் எழுத்தாகிய வகாரமும் நீங்கச் சிகாரம் ஒன்றுமே நிற்கும். ''சி'' என்னும் இந்த ஓரெழுத்து மந்திரம் மகாகாரண பஞ்சாக்கரம் எனப்படும்.

இவ்வாறு ஐந்தெழுத்தாய் இருந்த மந்திரம் பின்பு மூன்றெழுத்தாய், பின்பு இரண்டு எழுத்தாய், இறுதியில் ஓரெழுத்தே ஆகிவிடுகிறது.

*எந்த ஊசியும் இரு பக்கங்களிலும் கூர்மையாய் இராது. அறிவும் அப்படித்தான்.*

**பட்டினத்து அடிகள் பாடல்:**

நிட்டை நிலையை விளக்க வந்த பட்டினத்து அடிகள் அதி சூக்குமம், காரணம், மகா காரணம் ஆகிய பஞ்சாக்கரங்களைக் குறிப்பாக அமைத்து உணர்த்தியிருத்தலைக் காணலாம். அச் செய்யுள் வருமாறு:

"மாய நட்டோரையும் மாயா மலமெனும் மாதரையும்
வீய விட்டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாம்
தாயுடன் சென்று பின் தாதையைக் கூடிப் பின் தாயை மறந்து
ஏயும் அதே நிட்டையென்றான் எழிற்கச்சி ஏகம்பனே"

நண்பரையும், மனைவியையும் விட்டு விலகி வெளியே புறப்படுதலை முன்னே குறிப்பிடுகிறார். நட்டோர் என்பவர் நண்பர். இங்கே ஆன்மாவுக்கு நண்பராக இருப்பவை திரோதான சத்தியும் அதனால் கூட்டுவிக்கப் படுகின்ற மாயை, கன்மங்களும் ஆகும். ஐந்தெழுத்தில் இவை நகாரத்தால் குறிக்கப் படுகின்றன.

மாதர் என்ற சொல் இங்கு மனைவியைக் குறிக்கும். ஆன்மாவுக்கு மனைவியாகச் சொல்லப்படுவது ஆணவமலம். ஆணவத்தை மனைவியாகக் கூறும் வழக்கினைத் திருவருட்பயனிலும் அறிந்துள்ளோம். (செ.25) பட்டினத்தார் அதனை "மாயா மலம் எனும் மாதர் என்கிறார். ஆணவம் என்றுமே அழியாமல் நிற்கின்ற மலம். ஆதலின் அதனை மாயாத மலம் எனக் குறிக்கின்றார். ஐந்தெழுத்தில் இம்மலம் மகாரத்தால் குறிக்கப்படுகின்றது.

திரோதான சத்தி முதலிய நண்பரையும், ஆணவ மலமாகிய மனைவியையும் நீக்குதலை "வீய விட்டு ஓட்டுதல்" என்கிறார். இது ஐந்தெழுத்தில் நகார மகாரங்களை நீக்குதலைக் குறிக்கும்.

நண்பரையும் மனைவியையும் விட்டுப் பிரிந்து தாயை வந்து அடைய வேண்டும் என்கிறார். தாயாக இருப்பது திருவருள். ஐந்தெழுத்தில் திருவருள் வகாரத் தால் குறிக்கப்படுகிறது. அதனோடு கூடுதலாவது, முன்புபோல நகார மகாரங்களோடு கூடாது வகாரத்தோடு இணைந்து நிற்றல். இது "சிவாய" என்னும் அதிசூக்கும பஞ்சாக்கரமாகும்.

தாயுடன் செல்லுதலாவது, யகாரத்தையும் நீக்கி இரண்டெழுத்தாகக் கணித்தல். இது காரண பஞ்சாக்கரமாகும். தாதையைக் கூடிப் பின் தாயை மறந்து விடுதலாவது, வகாரத்தையும் நீக்கிச் சிகாரத்தோடு மட்டும் இருந்து விடுதல். இது மகா காரண பஞ்சாக்கரமாகும்.

இங்ஙனம், தாயாகிய அருட்சக்தி வழியாகத் தந்தையாகிய சிவனைப் பெற்றுப் பேரின்பத்தில் திளைக்கும் நிட்டை நிலையை நயம்பட விளக்கிக் காட்டுகிறது இச்செய்யுள்.

இனி, தூலமும் சூக்குமமும் ஆகிய பஞ்சாக்கரங்களை ஓதுதல் சகல நிலையே என்பதும், அதிசூக்குமம் முதலாக உள்ளனவே சுத்த நிலைக்கு உரியன என்பதும் அறியத் தகும்.

இதனால், அதிசூக்குமம் முதலிய பஞ்சாக்கரங்கள் உலகப் பற்றற்று, ஞான வேட்கை கொண்டு, ஞானாசிரியரை அடைந்து அவரது உபதேசத்தைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடுவார்க்கே உரியன என்பதும், ஏனையோர்க்குத் தூலமும் சூக்குமமும் ஆகிய பஞ்சாக்கரங்களே உரியன என்பதும் விளங்கும். மேலும் அவரவர் நிற்கும் அநுபவ நிலைக்கு ஏற்பவே அவரவர்

*பயன்கருதி அன்பு காட்டுவதைவிட அன்பு காட்டாமலிருப்பது மேல்.*

ஓதும் முறையும் அமையும் என்பதும் தெளிவாகும். தூலம் சூக்குமம் ஆகிய இருவகை பஞ்சாக்கரங்களும் ஓம் என்னும் பிரணவத்தோடு கூட்டியும் கூட்டாமலும் ஆசிரியர் உபதேசித்த முறையில் ஓதப்படும். அதிசூக்குமம் முதலிய மூவகை பஞ்சாக்கரங்களும் பிரணவம் இன்றியே ஓதப்படும் என்பது அறிதற்குரியது.

இந்த ஐந்து வகையான பஞ்சாக்கரங்களும் நிலையால் வேறுபட்டன அன்றிப் பொருளால் வேறுபட்டன அல்ல என்பது உளங்கொள்ளுதற்குரியது.

ஆன்மா நிற்கும் முறையையும், அதற்கேற்பத் திருவைந்தெழுத்தை ஓதும் முறையையும், அதனால் விளையும் பயனையும் பின்வருமாறு வகைப்படுத்தி அமைத்துக் காட்டலாம்.

| தீக்கைப் பேறு | நிற்கும் நெறி | ஓதும்முறை | பயன் |
|---|---|---|---|
| சமயம் | சரியை | தூலம் | உலக இன்பம் |
| விசேடம் | கிரியை | சூக்குமம் | உள்ளம் உலகியலின் |
| | யோகம் | | நீங்கிச் சிவன்பாற் செல்லுதல் |
| நிருவாணம் | ஞானம் - கேட்டல் | அதிசூக்குமம் | பாச ஞானம் நீங்குதல் |
| | -சிந்தித்தல் | | |
| | -தெளிதல் | காரணம் | பசு ஞானம் நீங்கித் திருவருளைப் பெறுதல் |
| | -நிட்டை | மகாகாரணம் | சிவானந்தத்தில் மூழ்குதல் |

**அதிகாரப் பொருள்நிலை:**

இனி, இவ்வதிகாரத்தின் பொருள் நிலையைப் பின்வருமாறு தொகுத்து அமைத்துக் கொள்ளலாம்.

ஐந்தெழுத்து எல்லா நூற்பொருளையும் தன்னிடத்தே அடங்கக் கொண்டிருப்பது. வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய நூல்களெல்லாம் ஐந்தெழுத்தின் பொருளை விளக்குவனவேயாம்.

ஐந்தெழுத்துக் குறிக்கும் பொருளாவன இறை, அதன் சத்தி, தளையாகிய ஆணவம், எழில் மிக்க மாயை, உயிர் என்பன.

"சிவாயநம" என்னும் ஐந்தெழுத்தில் சிவா என்னும் எழுத்துக்கள் முத்தி நிலையில் இறைவன் செய்யும் ஞான நடனத்தைக் குறிப்பன. நம என்னும் எழுத்துக்கள் பெத்த நிலையில் நிகழும் ஊன நடனத்தைக் குறிப்பன. அந்நடனங்களால் பயன் அடைகின்ற ய வாகிய உயிர் அவ்விரண்டிற்கும் நடுவே உள்ளது.

ம வால் குறிக்கப்படும் ஆணவ மலமும், ந வால் குறிக்கப்படும் திரோதான சத்தியும், அதனால் செயற்படுகின்ற மாயை கன்மங்களும் ஆகியவை ய வாகிய உயிரை அழுத்தமாகப் பற்றி நின்று தம்மினின்றும் மீண்டுபோக விடமாட்டா. இஃது ஊன நடனத்தால் விளைவது. உயிரினது மிக்க வினையும், வினைக்குக் காரணமாகிய ஆணவமலமும் நீங்குமாயின் ய வாகிய உயிர் சி ஆகிய சிவத்தை அடையும். இது ஞான நடனத்தால் விளைவது.

*ஒருவன் செய்த குற்றத்தையே மறந்து விடுவதுதான் உண்மையான முழு மன்னிப்பாகும்.*

திருவைந்தெழுத்தில் நகார மகாரங்களாகிய பாச எழுத்துக்கள் முன் நிற்க, யகாரமாகிய உயிர் அவற்றின் பின் நிற்குமாயின் பிறப்பு நிலை நீங்காது. அது நீங்க வேண்டுமாயின் திருவைந்தெழுத்தைச் சிகாரம் முதலாக வைத்தே ஓத வேண்டும்.

நகாரம் முதலாக ஓதுவார்க்கு உலக இன்பமே கிட்டும். அவ்வாறு ஓதி உலகப் பயனை அடைந்து வருபவர் சிகாரம் முதலாக ஓத முயலார். ந,ம வையே முற்படக் கொண்டு ஓதி வருவதற்குக் காரணமாகிய உலகப் பற்று இரங்குதற்கு உரியது.

திருவைந்தெழுத்தில் சி,வ என்னும் எழுத்துக்களே முன் நிற்கும் முறையில் ஓதுவதே பிறவி நீங்குவதற்கு வழியாகும். சிவ முதலாக ஓதினால், வகாரம் ஆகிய அருள் சிகாரம் ஆகிய சிவத்தை அடைவித்து யகாரம் ஆகிய ஆன்மாவைச் சிவமாம் தன்மைப் பெருவாழ்வில் வாழச் செய்யும்.

இனி, திருவைந்தெழுத்தைச் சிகாரம் முதலாக ஓதினால் யகாரம் நகார வகாரங்களுக்கு இடையே நிற்கிறது. அஃதாவது, உயிர் திரோதானத்திற்கும் அருளுக்கும் இடையில் நிற்பதாகிறது. இவ்வாறு நிற்பதும் முத்தி முறைமை அன்று. அருளுக்கும் சிவத்திற்கும் இடையில் நிற்பதே முத்தி முறைமையாகும். எனவே ய வாகிய உயிர் வா சி இடை நிற்க ஓதுவதே முத்தி பஞ்சாக்கரம் ஆகும். "சிவாய" என்னும் மூன்றெழுத்து மந்திரத்தை திரும்பத் திரும்ப உச்சரிக்கும் போது ய வானது வா, சி ஆகிய இவற்றின் இடையே நிற்பதைக் காணலாம். இம் முத்தி பஞ்சாக்கரம் உபதேச முறையில் பெற்று ஓதுதற்கு உரியது.

ஆகமங்கள் திருவைந்தெழுத்தினை ஒரு வகையாகக் கூறாமல் பல வகையாகக் கூறுகின்றனவே. அதற்கு என்ன காரணம்? என்று கேட்கலாம். ஆன்மாக்களது பக்குவ நிலையில் உள்ள படிமுறையே அதற்குக் காரணம் எனலாம். அவைபடி முறையானே பாசத்தினின்றும் நீங்கும் இயல்புடையன. எனவே அப்படி முறையானே ஐந்தெழுத்தினைப் பெற்று அதனை ஓதிப் பயன்பெறுதல் வேண்டும்.

(தொடரும்...

## யாருக்கு மந்தபுத்தி?

இளவரசனுக்கு மந்தபுத்தி என்பதால் அரசர் அவனுக்குப் பாடம் கற்பிக்க ஆசிரியர் ஒருவரை நியமித்தார். ஆசிரியர் பலவிதமான கோட்பாடுகளை விளக்கத் தொடங்கினார்.

ஒவ்வொரு முறையும், "இளவரசே! புரிகிறதா? என்று ஆசிரியர் கேட்டார். "இல்லை" என்றே பதில் வந்தது.

மறுபடியும் ஒருமுறை கற்பித்தார். "இப்போது தெளிவாயிற்றா?" என்று கேட்டார். மீண்டும் அதே பதில். பலமுறை முயன்றும் ஒரு பயனும் இல்லை. ஆசிரியர் அழுகையுடன், "இதை இப்படித்தான் நிருபிக்க முடியும்; நம்புங்கள்! என்றார்.

இதைக்கேட்ட இளவரசன் எழுந்து வணங்கி, ஐயா, 'இது இப்படித்தான்; இதுதான் உண்மை' என்று நீங்கள் உறுதியாக முன்பே கூறியிருந்தால், இத்தனைமுறை விளக்கியிருக்கத் தேவையில்லை. அப்போதே இரண்டாவது கோட்பாட்டினைப் பார்த்திருக்கலாமே; காலத்தை வீணாக்கி இருக்க வேண்டாமே" என்றான்.

*கடவுளுக்கு அடுத்தபடியாக நேரத்தை மதித்தல் ஒழுக்க முறையில் உயர்ந்த விதியாகும்.*

# மனிதனுக்கு சமயவாழ்வு அவசியம்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

மனிதன் மனிதப் பண்புடன் வாழ சமயம் மிகவும் அவசியம். சமயம் மனிதனுக்கு நெறிப்பட்ட வாழ்க்கையைக் காட்டிக் கொடுக்கின்றது. எனவே சமயத்தின் கருப்பொருளை உய்த்துணர வேண்டும். ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை முதலாகக் கொண்ட சமயம் சைவ சமயம். மந்திர வடிவமான ஓம் என்னும் மந்திரத்தின் பொருளை எடுத்துக் கூற முடியாது. எல்லோருக்கும் அம் மந்திரப் பொருளைக் கூறமுடியாமையினாற் றான் முருகன், தந்தை சிவனின் காதில் ஓதினான். மனிதன் நாவில் எந்நேரமும் தவழ வேண்டிய மந்திரம் (நமசிவாய) பஞ்சாட்சரம் ஆகும். எனவே மனித வாழ்க்கைக்கு மிக மிக அவசியம் சமயம் என்பதை யாவரும் உணர்வர்.

எமது சைவ சமயம் வேதம், ஆகமம் என்னும் இரண்டையும் முதன் நூலாகக் கொண்டது. இதனால் பிராமணர்கள் வேதங்களை ஓதி மெய்ப்பொருளுக்கு பூசை செய்கின்றார். ஆகம நெறியைப் பின்பற்றியே ஆலயக் கட்டடம் அமைக்கப்படுகின்றது. ஆகம விதிப் படி பூசையும் நடைபெறுகின்றது. இவற்றின் பயனாக நாட்டில் மக்கள் சுகவாழ்வு வாழ்கின்றனர். கோயிலுக்குச் செல்லும் மனிதன் தோய்ந்து, தோய்த்துலர்ந்த ஆடை தரித்து அர்ச்சனைப் பொருட்களுடன் பஞ்சாக்கிரத்தை ஓதிக்கொண்டு செல்வான். சுந்தரமூர்த்தி நாயனாரும் கொடுமுடி நாதரை வணங்கி, மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன், ....நற்றவாவுனை நான் மறக்கினுஞ் சொல்லும் நா நமச்சிவாயவே" எனப் பாடியருளினார். அதுபோல திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் நல்லூர்ப்பெருமணத் திருக்கோவிலில் சிவஜோதியில் கலக்கும்பொழுது "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி.... நாதன் நாம நமச்சிவாயவே" என்னும் பாடலைப் பாடிக்கொண்டு இறைவனுடன் கலந்தார். இதுபோல் மாணிக்கவாசகரும் சிவனுக்கு "நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க! என்னும் சிவபுராணத்தை ஓதிப் பூசை செய்தார். "நமசிவாய" என்னும் மந்திரத்தை தினமும் ஓதி வந்தால் நோய் அகலும், தீவினை நீங்கும், நல்வாழ்வு வாழலாம் என்பது இறை வாக்காகும்.

அரிய பிறவியையும், ஆறறிவையும் கொண்ட மனிதன் திருவருட்சக்தியை அறியாது, உணராது வாழ்வதினால் பஞ்சமா பாதகங்கள் நாட்டில் தலைவிரித்தாடுகின்றன. வள்ளுவன் மொழிபோல் மனிதன் "கொல்லான் புலாலை மறுத்தானை கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என்பதற்கிணங்க, கொலை செய்யாதும், புலாலை உண்ணாதும் வாழ்ந்தால் எல்லோரும் அவனைப் போற்றுவர். அது மட்டுமன்றி நிம்மதியான வாழ்வும் வளமும் பெற்று வாழ்வானென்பது வள்ளுவன் கருத்தாகும். கைலாயக் காட்சியைக் கண்ட அப்பர்

"நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே"

என்னும் பாடல்மூலம் திருவைந்தெழுத்தின் பெருமையைக் காட்டுகின்றார். எனவே மனித வாழ்வுக்கு மூலாதார மந்திரமாக உள்ளது திருவைந்தெழுத்தேயாகும். மனிதன் இப்படித்தான் வாழவேண்டும் என்னும்

*வலிமை, துணிவு, உண்மை, மரியாதை, தன்னடக்கம் கொண்டவனே உண்மையான வீரன்.*

நன்னெறியைக் காட்டுகின்றது சமயம். பஞ்சமா பாதகங்களை ஒழிக்கச் சொல்லு கின்றது. மனிதன் சுகமாக வாழ்வதற்கேற்ற நல்லொழுங்கை சமய அனுட்டானம் மூலம் வெளிப்படுத்துகின்றது. அறுசுவை தாவர உணவுகளை உண்பதினால் நோய்கள் அவன் உடம்பை எட்டியும் பார்க்க முடியாது. வினையை ஒழிப்பதற்குத் தான தருமங்களைச் செய்யவேண்டுமென்று அறிவுறுத்துகின்றது. சமய நெறிகளை நன்கு உணர்ந்து நடப்பவ னுக்கு தீய செயலாகிய கொலை களவு போன்ற எண்ணங்கள் ஏற்படாதென்று உரைக் கின்றது. அகத்தூய்மை, புறத்தூய்மை இரண்டையும் வலியுறுத்தி நிற்கின்றது. எனவே எமது சமய நெறியைக் கடைப்பிடித்து நடப் பவன், வினையை ஒழித்து இறைவனடி சேர்வானென்பது திண்ணம்.

எமது சைவ சமயத்தின் நிலைக்கள மாக விளங்குவது தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலயம் என்பது யாவரும் அறிந்த உண்மை. முருகன் கலியுகக் கடவு ளாகவும் அடியார் இடர்களை நீக்கும் கடவு ளாகவும் விளங்குகின்றான். துட்டனாக விளங்கிய அருணகிரிக்கு அருள் கொடுத்து பாடவைத்தவன் முருகனன்றோ? முருகன் திருப்புராணத்தில் தன்னுடன் போரிட்ட சூரனுக்கும் வரம்பிலா அருள்புரிந்து வாழ வைத்தவன் முருகனன்றோ என்பதை "அடு சமர் இன்நாட் செய்த மாயையின் மகனு மன்றோ வரம்பிலா அருள் பெற்று உய்ந் தான்" என்று பாடப்பெற்றுள்ளது. மானுடப் பிறவி எடுத்த நாமும், எவ்வினை செய்தா லும், எம்மை ஆட்கொள்வார் என்று எண்ணி, சமயநெறியுடன் ஆலயம் செல்வோம். கரு ணைக் கடலாகிய முருகன் தன்னை நாடி வருபவர்களுக்கு எந்நிதியும் கொடுப்பான் என்பது திண்ணம். சமயநெறி வாழ்வை நடத்தி செல்வச்சந்நிதியான் ஆலயம் செல் லுங்கள். அங்கு இவன் நாமத்தைக் கொண்டு அன்னம் பாலிக்கும் ஆச்சிரமத்திற்கும் சென்று பசியாறி வாருங்கள். என்றும் சுக மாக வாழ்வீர்கள் என்பது இறை வாக்காகும்.

மிகச் சிறிய கல்லையும் கண்ணுக்கு அருகே பிடித்தால் அது மாபெரும் சூரியனையும் மறைத்துவிடும். அதனால் சூரியனைவிட அந்தக் கல் பெரியது என்று சொல்லிவிட முடியாது. நமக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளும் தடைகளும் அதுபோலத்தான். பிரச்சினைகளையும் தடைகளையும் மிக நெருங்கிப் பார்ப்பதையே நாம் பழக்கமாகக் கொண்டிருக்கிறோம். அதனால்த்தான் அவையெல்லாம் பூதாகாரமாகத் தோன்றி நம்மைப் பயமுறுத்துகின்றன. "ஆகாய விமானம் பெரிதாக இருக்கின்றதே, அதற்கு எப்படி வர்ணம் தீட்டுவார்கள் என்று ஒருவர் கேட்டதற்கு, அது வானத்தில் பறக்கும்போது சிறியதாகிவிடும். அப்போ வர்ணம் தீட்டுவார்கள்" என்று மற்றவர் கூறியதாக ஒரு வேடிக்கைக் கதை கூறுவார்கள். அதைக்கேட்டு நாமும் சிரித்திருக்கிறோம். ஆனால் அதில் ஒரு தத்துவம் அடங்கியிருப்பதை நாம் ஒருபோதும் சிந்தித்ததில்லை. ஆம்! பிரச்சினைகள் பெரும் தடையாக விஷ்வரூபம் எடுத்து நம்முன் காட்சி தரும்போது மனதில் போட்டு பிசைந்து அலட்டிக் கொள்ளாமல் சற்று விலகி நின்று பார்த்தால் அது மிகச் சிறியதாக எமக்குத் தெரியும். அப்போது அதனை எளிதாகத் தீர்த்துவிடலாம். இது எல்லோராலும் முடியுமா என்று கருதுகிறீர்களா? அப்படித் தள்ளி நின்று பார்க்க முடியாவிட்டால், அதற்குக் காரணம் நம்மைப்பற்றி நம்முடைய மனதில் நாம் திணித்து வைத்திருக்கின்ற எதிர்மறையான தாழ்வு மனப்பாங்கான எண்ணங்கள்தான்.

*அதிகாரத்தினால் சாதிப்பதைவிட அன்பினால் எளிதில் சாதித்து விடலாம்.*

# நாம் இழந்த உரிமைகளைப் பெற்று வாழ நவராத்திரி விரதத்தை அனுசரிப்போம்

– திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள் –

லலிதா சகஷ்ர நாமத்தில் முதல் நாமமே ஶ்ரீ மாத்ரே நம என்பதாகும். அன்னையை வணங்குவது, போற்றுவது, ஆராதிப்பது ஜீவனுடைய கடமையாகும். தாய்மையை உணராத ஜீவன் எங்குமில்லை. மாத்ருதேவா பவ, தாயைத் தெய்வமாக எண்ணவேண்டும்.

மானுடர்கள் இந்த பிறவிக்குக் கிடைத்த தாயைத் தெய்வமாக வணங்கவேண்டும் என்றால், எல்லா ஜென்மத்துக்கும் எல்லா உலகங்களுக்கும் தாயாகிய பராசக்தியைத் தாயாக வணங்கவேண்டியது நமது கடமையல்லவா? அம்பிகையைத் தாயாக எண்ணி வணங்குவதால் இறைவனை நெருக்கத்துடனும் உரிமையுடனும் கொண்டாட இயலுகிறது.

மானிடப் பிறவியிலுள்ள தாய் கருணையோடும், அன்போடும், பொறுமையோடும் சகிப்புத்தன்மையோடும் இருப்பவளாக இருக்கையில் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியான அன்னை பராசக்தி எப்படி இருக்க வேண்டும் என்பதை நாம் கற்பனை செய்து கொள்ளவேண்டும்.

தாயைக் காண உருகும் பிள்ளையைப்போல் அன்னை பராசக்தியின் அனுக்கிரகத்தை நாம் எப்பொழுது பெறுவோம் என்று மனங்கனிந்து உருகிப் பிரார்த்திக்க வேண்டும்.

உலகமானது சக்தி, செல்வம், அறிவு என்று மூன்றுவித சக்திகளின் அடிப்படையில் இயங்கிவருகிறது. இந்த மூன்றையும் தரும் தெய்வங்களாக (மலைமகள், அலைமகள், கலைமகள்) அதாவது துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதியாக நாம் வழிபடுகிறோம்.

அன்னை பராசக்தியை அணிமா, மஹிமா முதலிய எட்டுவித அம்சங்களாகப் பிரித்து அவைகளை அட்டமா சக்திகள் என்று குறிப்பிடுவார்கள். அதைப்போல், திருமகளுக்கு எட்டுவகை சக்திகள் உண்டு. அவைகள், தனலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி, கஜலக்ஷ்மி, தைரியலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, ஐஸ்வரியலக்ஷ்மி, ஆதிலக்ஷ்மி என்று பெயர் பெறுகின்றனர். ஒவ்வொரு லக்ஷ்மியும் ஒவ்வொரு சக்தியை நமக்கு அளிக்கிறாள். தேவி உபாசகர்கள் பராசக்தியை ஆறு அம்சங்களாகப் பாகுபாடு செய்து வழிபடுகிறார்கள். பிரபஞ்ச இயக்கத்துக்கு இவை ஆதார சக்தியாக விளங்குகின்றன. இவை முறையே பராசக்தி, ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, குண்டலினிசக்தி, மாத்ருசக்தி என்பனவாகும்.

தேவி மகாமியத்தில் வேதம் சக்தியை "வாக்" என்று குறிப்பிடுகிறது. காண்பது, கேட்பது, முகருவது எல்லாமே சக்தியின் இயக்கங்கள் தாம் என்று பராசக்தியே கூறுகிறாள்.

ஒவ்வொரு வருடத்திலும் ஆறு ருதுக்களின் ஆரம்பத்தை நவராத்திரியாக வழிபடுவது வழக்கம். இவைகளில் வசந்த நவராத்திரியும் சாரதா நவராத்திரியும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

புரட்டாதி மாதம் சுக்ல பட்சத்தில் வருவதுதான் சாரதா நவராத்திரி. இந்நாட்களில்

*தூய்மை, பொறுமை, விடாமுயற்சி, அன்பு இவையே வெற்றிக்கு வழி.*


முதல் மூன்று தினங்கள் துர்க்கைக்கும், மத்தியிலுள்ள மூன்று தினங்கள் லக்ஷ்மிக்கும், முடிவிலுள்ள மூன்று தினங்கள் சரஸ்வதிக்கும் வழிபாட்டை மேற்கொள்கின்றோம்.

இந்த ஒன்பது நாள்களும் முறையே மகேஸ்வரி, கௌமாரி, வராஹி, மகாலக்ஷ்மி, வைஷ்ணவி, இந்திராணி, மஹாசரஸ்வதி, சாமுண்டி ஆகிய வடிவில் ஆராதிக்கப்படுகிறார்கள்.

நவராத்திரி விரதத்தை அனுசரித்த பின்பே ஸ்ரீ ராமபிரான் சீதையையும், அரசாட்சியையும் பெற்று வாழ்ந்ததாக இராமாயணம் கூறுகிறது. நவராத்திரி ஒன்பது தினங்களும் அம்பிகையை வழிபட இயலாவிட்டாலும் பத்திரகாளி தோன்றிய எட்டாம் நாளான அஷ்டமியன்று தேவியை வழிபட்டாலும் போதுமானது. அன்னையின் அனுக்கிரகம் கிடைத்து விடுகின்றது.

நவராத்திரியில் ஒன்பது தினங்களும் குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, மோஹினி, காளிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்ரா என்ற பெயர்களில் பத்துவயதுக்குட்பட்ட அழகிய கன்னிப்பெண்களை துர்க்கையின் வடிவமாகப் பாவித்து வழிபடுவார்கள்.

ஒன்பது நாள்களுக்குப் பின்னர் ஸ்ரீ அம்பிகையின் வெற்றியைக் குறிக்கும் வண்ணம் விஜயதசமியாகக் கொண்டாடுகிறோம். இந்த நாட்களில் வித்தியாரம்பமும், புதுத் தொழில்கள் துவங்குவதும் நடைபெறும். இந்த நவராத்திரியானது சக்தி வழிபாட்டில் முக்கியமாகக் கருதப்படுகிறது. தத்துவார்த்த சிந்தனைகளைத் தரும் இவ்விரதம் சகல ஐஸ்வரியச் சிறப்புக்களையும் பெருக்குகின்றது. இத்தகு நவராத்திரியை பேணி வழிபட்டு அம்பிகையின் அருளுக்குப் பாத்திரமாவோம்.



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள குடும்பத்திற்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டபோது...

*பொறுமை என்பது தன்நிலையில் தாழ்வு வராது பாதுகாத்துக்கொள்வதே ஆகும்.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சரவணமுத்து பாலசுப்பிரமணியம் | சுவிஸ் | 12மூடை அரிசி, மரக்கறி |
| மாகோ களஞ்சியம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| மகேஸ்வரி ஸ்ரீனிவாசன் | U.S.A | 100000. 00 |
| K. நிஷானி | கொழும்பு | 4மூடை அரிசி, 2புட்டி பருப்பு |
| தி அசோகன் | இடைக்காடு | 25000. 00 |
| பொ. நல்லையா | கோண்டாவில் | 50000. 00 |
| மயில்வாகனம் சண்முகதாசன் | வரணி | 150000. 00 |
| சின்னன்ணா (வயரிங்) | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ஸ்ரீ நதியா நகைமாடம் | யாழ்ப்பாணம் | 6மூடை அரசி |
| பொ. சந்திரமோகன் (ஓசன் ரேடேர்ஸ்) | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சாரங்கா நகைமாடம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| புதிய நதியா நகைமாடம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| நந்தலாலா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| சாந்தி புடவையகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| அம்பிகாபதி பான்ஸிகூட்ஸ் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| பெற்றா ஏசென்ஸ் | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| வெங்கடேஸ்வரா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| சிவாஞ்சனா நகைமாடம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| V.S.P. பாலா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| நந்தினி என்ரபிறைஸ் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி 10k பருப்பு |
| ஞானம் ஸ்ரோர்ஸ் | திருநெல்வேலி | 2மூடை அரிசி 1புட்டி பருப்பு |
| மகாராணி மூலம் | | |
| வியாவில் ஐயனார் தேவஸ்தானம் | காரைநகர் | 5மூடை அரிசி |
| S. சிவஞானம் | யாழ்ப்பாணம் | 10 மூடை அரிசி |
| E.S.P. நாகரட்ணம் | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| திரு அருள்ராஜா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| சபா ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| த. விக்னேஸ்வரன் | கன்னாதிட்டி | 1000. 00 |
| தனம் ரெக்ஸ் | யாழ்ப்பாணம் | 50000. 00 |
| சுந்தரம் ஸ்ரோர்ஸ் | அப்புத்தளை | 1மூடை அரிசி |
| வைரமாளிகை | யாழ்ப்பாணம் | 5மூடை அரிசி |
| Dr. பாக்கியநாதன் | திருநெல்வேலி | 2000. 00 |

*இறைவனுக்குச் சொந்தமான எதையும் பணம் கொடுத்துப் பெறமுடியாது.*

| | | |
|---|---|---|
| கணேஸ் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ஜெகா மோட்டோர்ஸ் | வல்வெட்டி | 3மூடை அரிசி |
| நா. தெய்வேந்திரம் (இந்திரா கபே) | நெல்லியடி | 10000. 00 |
| செல்லமுத்து புடவையகம் | நெல்லியடி | 10000. 00 |
| ச. லலீசன் | அச்சுவேலி | 3மூடை அரிசி, 1புட்டி பருப்பு, 2புட்டி உருளைக்கிழங்கு, 1புட்டி வெங்காயம் |
| அ. சண்முகராசா | லண்டன் | 30000. 00 |
| பேராசிரியர் சிவசாமி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| இ. அன்பழகன் | கனடா (பொருட்கள் வகையில்) | 75000. 00 |
| இ. கதிர்காமத்தம்பி | வல்வெட்டி | 1மூடை அரிசி |
| கண்ணாடிக் களஞ்சியம் | நெல்லியடி | 2மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி, 6பெரல் தயிர் |
| நா. பரமானந்தமூர்த்தி | கனடா | 25000. 00 |
| வி. சந்திரன் | மல்லாகம் | 1000. 00 |
| கி. ஜெகதேவன் | இடைக்காடு | 20000. 00 |
| சி. சிவசந்திரராஜா | கைதடி 1புட்டி அரிசி, மரக்கறி | 1000. 00 |
| த. பர்னிக் | ஜேர்மன் | 5000. 00 |
| பொ. குகனேஸ்வரன் | கோண்டாவில் | 2000. 00 |
| கா. கேதீஸ்வரன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| கு. சயந்தன் | அச்சுவேலி | 5000. 00 |
| S.P. பாலச்சந்திரா | கோண்டாவில் | 1000. 00 |
| ஆ. ஒப்பிலாமணி | லண்டன் | 5000. 00 |
| S. ஈஸ்வரன் | சித்தங்கேணி | 5000. 00 |
| வே. திருநீலகண்டன் (லக்சுமி அச்சகம்) | கொழும்பு | 10000. 00 |
| கோ. கனகரஞ்சிதம் | பத்தமேனி | 2000. 00 |
| கமலா குணரட்ணம் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| ச. வினோதினி | கரவெட்டி | 5000. 00 |
| கி. குலசேகரம் மூலம் மயூரி நடராஜா | கனடா | 10000. 00 |
| பா. பாலச்சந்திரன் | சுன்னாகம் | 2000. 00 |
| திருமதி ப. சிவனொளிபாதம் | கிளிநொச்சி | 1000. 00 |
| கு. ரோகிணி | இணுவில் | 1000. 00 |
| மா. இரத்தினவடிவேல் | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| V. குசேந்திரன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| டே. சுரேகா | நியூஸ்லன்ட் | 10000. 00 |
| வ. குமரன் | நியூஸ்லன்ட் | 10000. 00 |
| கு. திவ்யா | நியூஸ்லன்ட் | 10000. 00 |
| ச. கதிர்காமத்தம்பி | அல்வாய் | 500. 00 |

(தொடரும்...

*உங்கள் செல்வச் செழிப்பு உங்கள் பெருந்தன்மையை அழித்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.*

# ஸ்ரீமத் கணேசானந்தா மகாதேவ சுவாமிகளின் சமாதிக்கோயில் மகா கும்பாபிஷேகம் 12.09.2018

– திரு ஆ. சிவநாதன் அவர்கள் –

மனித வாழ்வு வளம் பெறுவதற்கு மாதா, பிதா, குரு, தெய்வ வழிபாடு அவசியம் என்பதை ஆன்றோர் உணர்த்தியுள்ளனர். முதலில் போற்றப்பட வேண்டிய மாதா பிதா வழிபாடே எம்மத்தியில் குன்றிவருகின்றமை மனித அழிவு நெருங்கி வருகின்றது என்பதை உணர்த்தி நிற்கின்றது. எனவே மனித அழிவிலிருந்து நம்மைப் பாதுகாக்க நமக்குக் கிடைத்த அருமருந்தே வழிபாடு ஆகும். வழிபாட்டினாலேயே வாழ்க்கை வளம் பெறும். வாழ்க்கை வளம்பெற நல் வழிகாட்டிகளை அணுகவேண்டும் என நவீன சிந்தனையாளர்கள் வழிப்படுத்துவர். இவ் வகையில் பழமை தொட்டு புதுயுகம் இன்றுவரை மாதா, பிதா, குரு, தெய்வத்தின் வழிப்படுத்தலே மனித வாழ்வை வளப்படுத்தும் என பறை சாற்றி நிற்கின்றது.

இந்துக் கல்விப் பாரம்பரியத்தில் "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்று குரு தெய்வீக நிலையில் வைத்துப் போற்றப்பட்டார். கு என்பது அஞ்ஞானமாகிய இருள், ரு- என்பது அவ்விருளை நீக்குவது ஆகும். ஆகவே அஞ்ஞானமாகிய இருளை தனது தீட்ஷையினால் நீக்குபவரே குரு என்ற பெயரைப் பெறுகிறார். குரு அறியாமையை அகற்றி அறிவைப் பெருக்குபவர். குருபக்தியுடன் குருவை வழிபட்டு கல்வியைக் கற்கும் மாணவனிடம் அறிவு, வீரியம், கீர்த்தி, வலிமை என்பன நாடோறும் விருத்தியாகும் என்னும் குருவை அவமதித்து துரோகம் செய்தால் ஒளி, வலிமை, கல்வி முதலியன நாடோறும் தேய்ந்து குறைந்து துன்பமுண்டாகும் என்னும் ஆலாஸ்ய மகாத்மியம் என்ற நூல் கூறுகிறது.

மாணவனின் உயர்விற்குக் குருவின் அருட்பார்வை அவசியம். குருவின் கோபத்திற்கு ஆளானவருக்கு விமோசனமே கிடையாது. அன்பை ஊட்டுபவள் தாய், உடலைப் போஷிப்பவர் தந்தை, அறிவை ஊட்டுபவர் குரு, அன்னம் அளித்தாலும் மீண்டும் பசி எடுக்கும். பொன் அளித்தாலும் மீண்டும் வறுமை காட்டும். ஆனால் குருநாதன் அளிக்கும் ஞானம் அழியாது, குறையாது.

இத்தகைய குரு பரம்பரை இலங்கையிலும் வாழ்ந்துள்ளார்கள். சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த ஞானச் செல்வர்களாக வாழ்ந்த சித்த புருஷர்களின் சமாதிக் கோவில்கள் ஈழத்தின் நான்கு திசைகளிலும் காணப்படுகின்றன. வடக்கே யாழ்ப்பாணத்தில் நீராவியடியில் கடையிற்சுவாமிகளின் சமாதியும், வேதாந்த மடத்தில் கனகரத்தினம் சுவாமிகளின் பரம்பரையில் வந்தவர்களின் சமாதியும், கிளிநொச்சியில் மகாதேவ சுவாமிகள் பரம்பரையில் வந்த வடிவேற் சுவாமிகளினதும், கணேசானந்த மஹாதேவ சுவாமிகளின் சமாதியும், கிழக்குத் திசையில் காரைதீவில் சித்தானைக் குட்டிகளின் சமாதியும், கொழும்பு முகத்துவாரத்தில் பெரியானைக்குட்டி சுவாமிகளின் சமாதியும் தெற்கே மலையகத்தில் நாவலப்பிட்டி குயில்ஸ்பரியில் நவநாதச்

சித்தரின் சமாதியும் காணப்படுகின்றன. இவ் வகையில் கிளிநொச்சி மகாதேவ ஆசிர மத்தை அமைத்து குருவின் பணியையும் அதேவேளை கிளிநொச்சி குடியேற்றம் ஆரம் பிக்கப்பட்ட காலத்தில் மக்களை நல்வழிப் படுத்தவும் இளைஞர்கள் மத்தியில் சைவசித் தாந்த வேதாந்தக் கருத்துக்களை வேரூன்றச் செய்யவும் மக்களைச் சமயத்தின்பால் வழிப் படுத்தவும் வாழ்க்கைக்கு வேண்டிய கல்வி யைப் பெற்றுக்கொள்வதற்கும் ஆலயங்களை அமைத்தல், கல்விச் சாலைகளை அமைத் தல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு பணியாற்றிய வடிவேற் சுவாமிகள் பணி சிந் திக்கப்பட வேண்டியதொன்றாகும். சுவாமி களிடத்தில் நிறைந்த தமிழறிவும் சமய அறிவும் காணப்பட்டமையால் எல்லோரையும் உள்ளீர்க்கும் ஆற்றல் பெற்றிருந்தார். அத் துடன் அவரது இசை ஞானமும் கதாப்பிர சங்க ஆற்றலும் பேச்சுவன்மையும் அவரது கருத்துக்கள் இலகுவாக மக்களைச் சென் றடைந்தது. சுவாமிகளை அணுகி பலர் தமது மனக்குறைகளைக் களைந்து கொண்டனர். உலகியல் வாழ்க்கையில் ஈடுபட்டோரும் சுவாமிகளின் உறவால் இல்லறத்தில் ஆன் மீக வாழ்க்கையை வாழக் கற்றுக்கொண் டனர். இவ்வகையில் சுவாமிகளுடன் நீண்ட காலமாக பழகி சுவாமிக்கே தன்னை அடிமை யாக்கி இறுதிவரை தனது கொள்கையைக் கடைப்பிடித்த தலை மாணாக்கரே ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் ஆவார்கள்.

கணேசபிள்ளை என்ற இயற்பெய ரைக் கொண்ட அவர் இளமையில் கடின உழைப்பாளி.

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின் செல்பவர்"**

என்ற பொய்யாமொழி வாக்கிற்கு அமைய உழவுத் தொழிலை தலையாயத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தபோதும் சுவாமிகளிடம் சமய சாஸ்திரங்களைக் கற்றுக் கொள்ளத் தவறவில்லை. தோத்திரங்களின் பாராயணம் அவரது நாளாந்த அனுஷ்டான மாகும். அவர் நைஷ்டிக பிரம்மச்சாரியாகவே வாழ்ந்து கர்மயோகியாகவும் ஞானயோகி யாகவும் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டார். அவர் குருநாதனின் வேண்டு தலுக்கமைய உருத்திரபுரம் சிவன்கோவில் புனருத்தாரணப் பணியில் தன்னை இணைத் துக்கொண்டு கோவிலுக்குரிய காணிகள் முறையே கிடைக்க வேண்டும் என்பதற்காக தனது சொந்தப் பணத்தைச் செலவு செய்தே கோவிலுக்குரிய காணிக் காடுகளை அழிக் கும் நடவடிக்கையில் ஈடுபட்டார். அதற்குரிய பணத்தை நிர்வாகத்தினர் கொடுக்கமுடியாத நிலையில் தன்னிடம் இருந்த காரை விற்றே கடனை ஈடுசெய்தார். இவ்வாறு இளமையில் துடிப்பும் வேகமும் கொண்டு கிளிநொச்சிப் பகுதியில் சைவசமயம் வளர்ச்சி அடைய வேண்டுமென்பதற்காக தன்னை அர்ப்பணித்த திரு ப. கணேசபிள்ளை சைவசமயத்தவர்



எல்லோருக்கும் சமய தீட்சை வழங்கவேண்டு மென்பதில் முழுமையாகத் தன்னை அர்ப் பணித்துச் செயற்பட்டார். தீட்சை வழங்கு வதற்கான முழுச் செலவையும் தானே வழங்கி

சைவசமயத்தவர்கள் சமயதீட்சை பெற்று இருக்க வேண்டும் என்ற கொள்கைக்கு செயல் வடிவம் கொடுத்தார்.

இவ்வாறு பணியாற்றிய திரு ப. கணேச பிள்ளை அவர்களுக்கு குருவாக அமர்ந்த வடிவேல் சுவாமிகள் தனது இறுதிக்காலத்தில் சந்நியாசம் வழங்கி ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் என்ற தீட்ஷா நாமத்தையும் சூடி தனக்குப் பின் ஆசிரமத்தை நடாத்தும் பொறுப்பையும் வழங்கினார்.

வடிவேல் சுவாமியின் சமாதியின் பின் ஆச்சிரமத் தலைவராக பொறுப்பேற்ற ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் உலக கால மாற்றங்களால் பெரும் நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. புலப்பெயர்வுகள் ஏற்பட்டபோதும் மனம் தளராது குருவின் பணியையும் சமயப் பணியையும் சிறப்புடன் ஆற்றினார். அச்சமயத்தில் அநாதரவான குழந்தைகளுக்கு வாழ்வு கொடுப்பதற்கு தன்னாலான முழு முயற்சியையும் பணிகளையும் தவறின்றி செய்து முடித்தார். போர்க் காலச் சூழலினால் ஆச்சிரமக் கட்டிடங்கள் நிலைதளர்ந்த போதும் அயராத முயற்சியினால் மீண்டும் குருநாதனின் சமாதிக் கோவிலை புதுப்பொலிவுறச் செய்தார். மக்கள் மனங்களில் அழியா இடம்பெற்று கடமைகளைக் கண்ணியமாக நிறைவேற்றி 2017ம் ஆண்டு ஆவணி உத்தர நட்சத்திரத்தன்று மகாசமாதி அடைந்தார். அவரது சமாதி குருநாதன் சமாதிக்கருகில் வைக்கப்பட்டு ஒரு வருடப்பூர்த்தி நாளாகிய 12.09.2018 விசாலாட்சி அம்மன் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது நாம் செய்த புண்ணியமேயாகும்.

கவலை அல்லது மகிழ்ச்சி என்பன வெளியே இருந்து நமது மனதினுள் புகுபவை அல்ல. ஒரு விடயத்தைக் கவலையாகவும் மகிழ்ச்சியாகவும் நமது மனம்தான் அமைத்துக் கொள்கிறது. எப்படி? என்று கேட்கிறீர்களா? நமது கழுத்தில் இருக்கும் தங்கச் சங்கிலி நாம் தூக்கத்தில் இருக்கும்போது நமது முதுகுப் பக்கமாகத் தள்ளப்பட்டுவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். தூக்கத்திலிருந்து எழுந்தவுடன் மார்பைத் தொட்டுப் பார்த்துவிட்டு, "ஐயோ சங்கிலியைக் காணவில்லையே!" என்று நமது மனம் தவிக்கும், கவலைகொள்ளும். பின்னர் சற்று நிதானமாகக் கழுத்தைத் தொட்டுப் பார்த்ததும் "அடடா முதுகுப் பக்கம் தொங்குகின்றதே" என்று மகிழ்ச்சி கொள்ளும். இப்போ புரிகிறதா வெளியே எந்த மாற்றமும் நிகழவில்லை. அதாவது கவலைப்படுவதற்கு நாம் எதையும் இழக்கவில்லை, மகிழ்ச்சி கொள்வதற்கு எதுவும் கிடைக்கவுமில்லை. (சங்கிலி கழுத்திலேதான் இருக்கிறது.) ஆனால் அதையிட்டு நம்மைக் கவலையில் ஆழ்த்தியதும் நமது மனம்தான். பின்னர் மகிழ்ச்சி கொடுத்ததும் நமது மனம்தான். நுகர் பொருட்களின் தாக்கம் நமது புலன்களின் வழியாக மனதை அடைந்து இன்ப துன்பங்களைத் தர வைக்கிறது. நாம் பிறக்கும்போதே முற்பிறவியின் கர்ம வாசனையோடு இணைந்த மனம், தெளிவில்லாமல் இருப்பதால் தனக்குப் பிடித்தமானவைகளுக்கு மகிழ்ச்சியையும் பிடிக்காதவைகளுக்கு துன்பத்தையும் உள்வாங்கிக் கொள்வதால் நமது உடலையும் சேர்த்து வருத்திக்கொள்கிறது.

புலன்கள்மூலம் மனதில் வந்து குவிந்த பல தகவல்களை ஆராய்ந்து, குறிப்பிட்டதில் மட்டும் ருசிகண்ட மனம், திரும்பத் திரும்ப அந்தச் சுவை மட்டுமே மகிழ்ச்சியென்று ஏற்றுக்கொள்கிறது.

*தான் விரும்புவதையெல்லாம் செய்பவன் வல்லவன், தான் செய்வதை விரும்புபவன் அறிவாளி.*

# வழித்துணை 14

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 வேதனையால் இங்கொருவர் வெதும்புகின்ற வேளைதனில்
சாதனைகள் பற்றியாரும் பேசிடுதல் நன்றன்று
போதனைபோல் அவர்துயரைப் பொறுமையுடன் கேட்டிட்டால்
சோதனைகள் முடிந்தவர்போல் சோகம்விட்டே அவரெழுவர்.

02 துன்பியலில் பங்குகொள்ளும் பண்பியல் இல்லையெனில்
அன்பியலும் பொய்யாகும் நண்பியலும் பொய்யாகும்
இன்பியலே நிலையென்று தன்னியல்பை வகுப்பவர்கள்
தென்பியல் ஏதுமின்றிப்பின் துய்பியலில் தான்வீழ்வர்.

03 கோபத்தைக் குரோதத்தைக் குழிதோண்டிப் புதைப்பவர்கள்
ஆபத்தே இல்லாத அரும்பேற்றைப் பெற்றிடுவர்
சாபத்தைப் பாவத்தைச் சுமந்திடவே விரும்புபவர்
தூபத்தைப் போட்டென்றும் துவேசத்தை வளர்த்திடுவர்.

04 ஆவேசம் கொள்ளாமல் அடக்கமாய் வாழ்பவர்கள்
சாவேதும் நெருங்காத சகவாழ்வைப் பெற்றிடுவர்
பூவேந்தர் ஆனாலும் பாவேந்தர் ஆனாலும்
நாவேந்தராய் நடந்தால் அவர் மூவேந்தராகிடுவர்.

05 பகுத்தறிவு என்பது பதுக்கிவைக்கும் ஒன்றன்று
புகுத்திடப் புகுத்திடப் புத்தொளி தருவது
வகுத்துத் தொகுத்ததை வையத்தோர் வளர்த்திட்டால்
வெகுத்திடும் துயரோடும் இன்பமே சூழும்.

06 அறிவொளியும் இறையன்பும் எளிமையான வாழ்வும்
குறிதவறா வாழ்விற்கு வழித்துணைகள் ஆகும்
பிறிதிங்கு இருப்பவைகள் வழிதவறிப் போய்ப்பின்னர்
வறியோராய் சிறியோராய் ஆக்கிவிடும் அறிவீர்.

*உன் எண்ணம்தான் உனது வாழ்க்கை, உன் வாழ்க்கைதான் உனது எண்ணம்.*

07 மனிதனும் இறைவனும் வடிவத்தால் ஒன்றுதான்
புனிதராய் வாழ்ந்திட்டால் குணத்தாலும் ஒன்றுதான்
கனிவோடு பேசினாலும் இனிதோடு பழகினாலும்
தனிநலம் ஓங்கிடில் மனிதமே கேள்விதான்.

08 நிம்மதி என்பதோர் ஆத்மீக உறக்கமாம்
என்பதை அறிந்துநீர் நடந்திடல் நன்றாகும்
தன்செயல் தன்னதால் நின்மதி பிறர்கெடில்
பின்னவர் ஆத்மீக சாபத்தால் அழுந்துவர்.

09 பிறர்க்கிடஞ்சல் இல்லாமல் இங்குநாம் வாழ்ந்திடில்
இறக்கின்ற போதுசிலர் இரங்கிடவும் வந்திருப்பர்
உறக்கத்தில் கூடநாம் பிறர்க்கிடஞ்சலாயிருப்பின்
மறக்காமல் எமதுறவைத் துறந்திடவே அவர்துடிப்பர்.

10 அணுகுமுறை நன்றாக இருந்திட்டால் போதும்
மனுவுலகில் மற்றவைகள் சிறிதளவேயாகும்
அனுங்குதலும் சிணுங்குதலும் கூடாது என்பதிலும்
அணுகியவர் குறைகேட்டு நிவர்த்தித்தல் மேலாம்.

எமது சமய கலாசார நிகழ்வுகளில் நாம் உபயோகப்படுத்தும் பொருட்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் நமது வாழ்க்கையின் தத்துவங்களை நமக்குப் போதிக்கின்றன. அந்த வகையில் தைப்பொங்கல் என்றால் கரும்பும் அதில் முக்கிய பங்கு வகிக்கிறது. அந்தக் கரும்பு என்றால் தித்திப்பு என்பதுதான் நமக்குத் தெரியும். அதைப்பற்றி பட்டினத்தார் என்ன சொல்கிறார்.

ஒரு சமயம் கிராமத்துத் தெருவழியே சென்று கொண்டிருந்தோம். பசி அதிகமாக இருந்தது. அவ்வழியே வந்த கரும்புத் தோட்டக்காரர் இரண்டு கரும்புகளை பரதேசியாகிய எங்களிடம் கொடுத்தார். கரும்பைக் கடித்தபோது அடிக்கரும்பு இனித்தது. நுனிக்கரும்பு கசந்தது. "ஏன் இப்படி" என்று அந்தத் தோட்டக்காரரைக் கேட்டேன். அதற்கு அவரும் "வாழ்க்கையின் தொடக்கம் இனிமை, முடிவு அவலம்" என்று பதில் கூறிக்கொண்டே போய்விட்டார். சிவபெருமானே அவர் உருவில் வந்து கூறியதாகக் கருதி நான் இந்தக் கரும்பைச் சுமந்துகொண்டிருக்கிறேன். அந்தத் தத்துவத்தைக் குறிக்கவே என் கையில் எப்போதும் கரும்பு இருக்கின்றது. இதை உணராமல் செல்வம் செல்வம் என்று பேயாக அலைந்த என் தமக்கையும் அவள் கணவனும் எனக்கு இழைத்த தீமையினால் பெரு நோய்வாய்ப்பட்டு மாண்டனர். சம்சார சாகரத்தில் உழன்றாலும் இறைஞானத்தை அடைய முயற்சியுங்கள். எல்லாம் வல்லவன் இறைவன்தான். பிறப்புக்கு முன்பும் இறப்புக்குப் பின்பும் நம்மைப் பொறுப்பேற்றுள்ளவன் அவனே. தாயின் வயிறும் சுடுகாடுமே அவனது அரசாங்கங்கள்.

-பட்டினத்தடிகளார்-

*பிறருக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கின்ற கையே தன் சேமிப்பிலும் அக்கறை காட்டும்.*

(தொடர்ச்சி...

# மண்டூர்க் கந்தசுவாமி கோயில்

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

## மண்டூர் கந்தசுவாமி கோயிலின் பெருவிழாக்கள்

சைவ ஆலயங்களில் ஆகம விதிப்படி நாளாந்தம் நடைபெறும் பூசைகளில் ஏற்படும் தவறுகள் சாதாரண விழாக்களால் நிவர்த்தியாகும். சாதாரண விழாக்களில் ஏற்படும் தவறுகள் வருடாந்தப் பெருவிழாக்களால் நிறைவு செய்யப்படுவது நியதியாகும்.

மண்டூர்க் கந்தசுவாமி கோயில் ஆகம விதிகளுக்கப்பால் அமைந்தது. இவ்வாலயப் பூசைமுறை வழிபடும் முறை கட்டட அமைப்புகள் யாவும் ஆகம விதிகளுக்குள் அமையாதன வாகும். ஆனால் பொதுவான ஆகம விதியை நோக்காது மந்திரதந்திரமேதுமின்றி சீலையால் மூடிக்கட்டி வாய் திறக்காது பக்திபூர்வமாக உள்ளன்புடன் செய்யும் பூசையை இறைவன் அகமகிழ்ந்து ஏற்கிறார். வேண்டியவாறு அருள்பாலிக்கிறார். இதனால் இவ்வாலயத்தின் அருட்சிறப்பால் கவரப்படும் அடியார்களும் தூய சிந்தனையுடன் வழிபடுவதுடன் தமது துன்பங்களை நீக்கவேண்டி இறைவனுக்கு நேர்த்தி செய்து உயர் பெறுமதியான காணிக்கை களைச் செலுத்தி நன்மையுடன் மனநிறைவையும் அடைகின்றனர். பக்தர்கள் நேர்த்திக்காக வழங்கும் காணிக்கை இவ்வாலயத்தின் அருட்பெருமைபோல பல இலட்சரூபாவை வழங்கு கின்றனர்.

குற்றமற்ற நெஞ்சினரை அரவணைக்கும் பெருமான் தமதாலயத்தில் குறையேதும் இல்லை என்பதனை வெளிப்படுத்துவதே இவ்வாலயத்தில் நடைபெறும் விழாக்களின் சிறப் பிற்கு அணிகலனாகிறது. இவ்வாலயத்தில் வருடாந்தப் பெருவிழா கந்தசஷ்டி, திருக்கார்த் திகை, பிள்ளையார் விரத விழா, திருவாதிரை விழா, தைப்பொங்கல், மகாசிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு ஆகிய விசேட விழாக்களாகவும் அமைந்துள்ளமையை விபரமாக அறிவோம்.

## வருடாந்தப் பெருவிழா

மண்டூர்க் கந்தசுவாமி கோயில் கதிர்காமத்துக் கோயிலின் அமைப்பு, ஆலய விதிமுறைகள் பூசைகள் யாவற்றையும் பின்பற்றிச் செயற்படுவதால் "சின்னக் கதிர்காமம்" என்றே அழைக்கப்படுகிறது. இதனால் கதிர்காமப் பெருவிழாவின் தீர்த்தம் நடைபெற்ற இருபதாம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆவணிப் பூரணை நாள்வரை 21 பெரு விழாக்கள் வருடந்தோறும் நடைபெறுகிறது.

பண்டைக்காலத்தில் மானியம் வழங்கி நெறிப்படுத்திய காலத்தில் அரசர்களால் நியமிக்கப்பெற்ற "வன்னிமை"யின் தலைமையில் இவ்வாலய நிர்வாகிகள் பெரிய கப்புகனார் இவ்வூர் அயலூர் பிரமுகர்கள் வண்ணக்கர் ஓலைச்சுவடியில் எழுதி அனுப்பும் அழைப்பை ஏற்று இவ்வாலய வெளி மண்டபத்தில் மகாசபையாக அமைத்து பெருவிழாவிற்கான கடமைகளை நிரலிட்டு அனைவரும் ஒரு மனதாக நிறைவேற்றுவர்.

*பிறர்மீது கருணைகாட்டும் குணம், கடவுள் உங்களுக்கு அளித்திருக்கும் மிகப்பெரிய பரிசு.*

காலங்களும் ஆட்சி முறையும் மாறியதால் இன்றைய மாவட்ட ஆட்சித் தலைவர், பிரதேச செயலர்களுக்கு அரசவர்த்தமானியில் பிரசுரிப்பதன் பேரில் முதலில் அறிவித்தல் செய்யப்படும். கதிர்காமப் பெருவிழா நிறைவு நாளின் பத்தாம் நாள் இவ்வாலயத்தின் பெருவிழாவுக்கான "சீட்டு எழுதுதல்" என்னும் நிகழ்வு நடைபெறும். இந்நிகழ்வு இவ்வாலய முன்றலிலமைந்த வன்னி மரநிழலில் இடம்பெறும் பெருவிழா உபயகாரர் உள்ளூர் வெளியூர் பிரமுகர்கள் யாவருக்கும் ஆலய வண்ணக்கர் மூலம் எழுதி அனுப்பும் தகவல் ஆகும். இச்சீட்டெழுதுதல் முறை முன்னர் பனையோலைச் சுவடியில் எழுத்தாணியால் எழுதி அனுப்பப்பட்டது. இப்போது கடிதத் தலைப்பில் எழுதி அனுப்பப்படுகிறது.

இப்போது அரச அதிகாரிகளின் நேரம், இடவசதி போன்ற சிலவற்றைக் கருத்திற் கொண்டு இக்கூட்டம் பிரதேச செயலகத்தில் நடைபெறுகிறது. முன்னர் ஆலயத்தில் நடைபெற்றபோது வண்ணக்கரின் தலைமையில் கணக்கப்பிள்ளைமார், பெரிய கப்புகனார், மற்றும் ஆலயப் பணியாளர்கள் பிரமுகர்கள் சீட்டு எழுதும் வைபவத்திற் கலந்து கொள்வர். அன்றைய மதிய உணவு பெரிய கப்புகனாரின் இல்லத்தில் வழங்கப்படுவது பாரம்பரிய (எழுதாத) மரபாகும்.

பெருவிழாக் காலத்தில் இவ்வாலயத்தை நாடும் வழிபடுவோரின் நன்மை கருதி (அன்று தேசத்து வன்னிமை தலைமை) இன்று பிரதேச செயலர், சுகாதாரம், போக்குவரத்து, வீதி அபிவிருத்தி, மின்சாரம், காவல்துறை, அரசசிவில் அதிகாரிகள், இந்து கலாசார அமைச்சின் பிரதான சகல துறையினரும் மற்றும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் உள்ளூர் சமய சமூகத் தொண்டர்கள் பலரும் இவ்வாலயத்தில் கூடிப் பற்பல வசதிகளையும் செய்வதற்கு ஒருமுகமாக ஆமோதித்து முடிவு செய்வர். (யுத்த காலத்துடன் இக்கூட்டம் பிரதேச செயலகத்தில் நடைபெறுகிறது.)

## மண்டூர் கந்தசுவாமி கோயிலின் கொடியேற்றம்

### மண்டூர் கந்தசுவாமி கோயில் கொடியேற்ற ஒழுங்குகள்

இவ்வாலயத்தில் கொடித்தம்பம் அமைவதில்லை. கொடியேற்றத்திற்கான தடியை "கொங்கு" மரத்திலும் வெளிக்கொடிகளான ஆறுபடை வீடுகளை நினைவுகூர ஆறு இடங்களில் "நாகை" மரத்திலும் நடுக்காட்டில் சென்று நேரிய நெடிய கம்புகளாக வெட்டிவருவது வழக்கம். கொடியேற்றத்திற்கு மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு முன் உரிய கம்புகள் வெட்டிவந்து ஆலயத்துள் வைக்கப்பட்டிருக்கும்.

கொடியேற்றத் தினத்தன்று மதியவேளைப் பூசை முடிந்ததும் வண்ணக்கர் பெரிய கப்புகனார் இதர ஆலயப் பணியாளர்கள் சூழ்ந்து வர ஆலயத்தில் ஏற்கனவே வைக்கப் பட்டிருந்த கொடிமரங்களுக்குப் பொங்கலிட்டு மடைபரவி தடிகளை உரிய அளவுக்கு வெட்டிச் சீவி மஞ்சள் நீரால் கழுவி வெள்ளைத் துணியால் மூடிவரக் கொடிமரம் பிள்ளையார் சந்நிதியில் வைக்கப்படும்.

### கொடியேற்றக் கூட்டம்

அன்றுமாலைப் பூசை முடிந்ததும் இரவு எட்டுமணியளவில் ஆலய முகப்பு மண்டபத்தில் வண்ணக்கரின் தலைமையில் பிரதேச செயலர், இதர ஆலய நிர்வாகிகள்

கப்புகனார் பணியாளர்கள், மகாசனங்கள் முன்னிலையில் இறைவணக்கத்துடன் கூட்டம் ஆரம்பமாகும் பெருவிழாவுக்கான ஏற்பாடுகள் இதர விடயங்கள், நடைமுறைகள் பற்றி ஆராய்ந்ததும் "தடைப்பிசகு இல்லை" என ஏகமனதாகக் கூறி இறைவணக்கத்துடன் கூட்டம் நிறைவடையும்.

**கொடியேற்ற வைபவம்**

ஆலயத்தின் சந்தன மண்டபம் (கருவறைக்கு முன்பாக திரையிட்ட முன் மண்டபம் திரைக்கு சற்றுக் கிழக்கே சுவரருகில் வழமையாகச் சோடனை செய்யப்பட்ட புனித இடத்தில் கொடிமரம் நாட்ட அமைத்த இடத்தில் பிள்ளையார் எழுந்தருளும் கோலத்தில் சிறிய தேரில் மூடித் திரையிடப்பட்டிருக்கும். அதன் பின் வண்ணக்கரும் பெரிய கப்புகனாரும் பிள்ளையார் சந்நிதிக்குச் சென்று முன்னர் ஆயத்த நிலையிலிருந்த கொடிக்கம்பத்தைத் தோளில் சுமந்துவர மேலிடப்பட்ட வெள்ளைத்துணி அலங்காரத்துடன் சந்தன மண்டபத்தை வந்தடைவர்.

கொண்டுவரப்பட்ட புனிதமான கொடிக்கம்பத்திற்குச் சாந்து சவ்வாது முதலான வாசனைத் திரவியங்கள் வீபூதி, சந்தனம், குங்குமம் பூசி வெள்ளைத் துணியால் சுற்றி தடியின் மேற் பகுதியில் நெற்கதிர்கள் கட்டியதும் மணியோசையுடன் கொடிக்கம்பம் நிறுத்தி உரிய இடத்தில் நாட்டப்படும். பின்னர் பிள்ளையாருக்கும் கொடிமரத்திற்கும் முன்னர் பொங்கலிட்டுப் பரவிய மடைகளுக்கும் பூசைகள் நடைபெறும்.

வழமையான சம்பிரதாயப்படி ஆறுபடை வீடாகக் கருதி வள்ளி தெய்வயானை சந்நிதியிலும் நான்கு வீதிகளிலும் என ஆறு இடங்களில் வெளிக் கொடிமரம் நாட்டப்படும். இப்பணிக்காக ஏற்கனவே அலங்கரிக்கப்பட்ட பிள்ளையார் தேரை உரியவர்கள் காவிவர ஆறுதடி நாட்ட வெளிவருவர். முதலில் தெற்கு வீதிக்கான கொடிக்கம்பு வைரவர் கோயிலின் முன் நாட்டியதும் பிள்ளையார் ஊர்வலத்துடன் வள்ளி தெய்வயானை சந்நிதிகள், ஆலய வெளிவீதியில் மேற்கு, வடக்கு, கிழக்கு வீதிகளின் சுவரோரம் கொடித்தடிகள் நாட்டிப் பூக்கள் மடைகள் வைத்துப் பூசைகள் செய்து நிறைவு கண்டதும் யாவரும் ஆலயத்துட் செல்வர். அன்று விநாயகரே வீதியுலா வருவார்.

தொடர்ந்து தேசத்தார், குருக்கள், பிரதேச செயலாளர், துறைநீலாவணை, கோட்டைக் கல்லாறு, பெரிய கல்லாறு, குறுமண்வெளி பிரமுகர்களுக்கும் பெரு மதிப்பளிப்பதன் பேரில் பூசைப் பிரசாதம் முதலில் வழங்கப்படும்.

இன்றைய விழாவில் பிள்ளையாரின் வீதியுலாவுடன் முதலாம் திருவிழா நிறை வடையும்.

(தொடரும்...

**உப்பாக இருந்துகொண்டு குடிப்பதற்கும், குளிப்பதற்கும்கூடப் பயன்படாதிருக்கும். விரிந்த கடல்நீரை, மேகங்கள் கொண்டுவந்து, உலகத்தில் மழையாகப் பெய்து கொடுத்து உதவுகின்றன. அதுபோல, பிறருக்கு உதவாமல் செல்வத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கும் கருமியின் பணம் அவன் மறைந்த பின்பு நல்லவர் ஒருவர் கைக்கு மாறிவிடுகிறது. அவர் அதை வேண்டியவருக்குக் கொடுத்து வாழ வைக்கிறார். அவரும் புகழோடு வாழ்கிறார்.**

*செலவுகள் எல்லாவற்றிலும் முதன்மையானது காலத்தை வீணாக்குவது.*

# பாராட்டு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

– வல்வையூர் அப்பாண்ணா –

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு ஆண்டுதோறும் வழங்கிவரும் "**யாழ் விருது**" இம்முறை சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளுக்கு வழங்கப்பட்டது. இந்த யாழ் விருதினை வழங்கிய யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினரை கௌரவிக்கும் நிகழ்வும், விருதுபெற்ற ஆச்சிரம சுவாமிகளைப் பாராட்டும் நிகழ்வும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில்- சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் ஏற்பாட்டில் 31.08.2018 வெள்ளியன்று சிறப்பாக நடந்தேறியது.



யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினர் நல்லைக் கந்தன் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் வெளியிட்டுவரும் "**நல்லைக் கந்தன்**" 26ஆவது மலர் வெளியீடு நல்லைக் கந்தன் மகோற்சவத்தின் 6ம் திருவிழாவன்று (21.08.2018 செவ்வாய்) காலையில் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடந்தது. இக் குழுவினர் கடந்த ஏழு வருடங்களாக சைவ சமய, சமூக, மருத்துவப் பணிகள் ஆற்றிவரும் தகுதியான ஒருவரைத் தெரிவுசெய்து "**யாழ் விருது**" வழங்கிவருவது அனைவரும் அறிந்ததொன்று. மலர் வெளியீட்டுடன் "யாழ் விருது" வழங்கும் நிகழ்வினையும் ஒன்றுசேர நடாத்துவது இவர்களது வருடாந்த நிகழ்ச்சி நிரலில் உள்ளடங்கியது. முதல் "யாழ் விருது" பெற்ற Dr தெய்வேந்திரன் அவர்களில் தொடங்கி 2018இல் "ஆச்சிரம சுவாமிகள்" என பட்டியல் நீண்டு வருகிறது.

21.08.2018 செவ்வாயன்று காலைப் பொழுதினில் யாழ். நாவலர் கலாசார மண்டபம் கலகலப்பாகக் காணப்பட்டது. மேடையில் ஆச்சிரம சுவாமிகள் தூய மஞ்சள் நிற வேட்டி சால்வையில்- நெற்றி நிறைந்த திருநீறு, சந்தன திலகத்துடன்- வழமைபோல வலது காதில் வெள்ளை நிற அசோக மலர் ஜொலிக்க (நரைத்த தாடியும்- காதில் உள்ள வெண்ணிறப் பூவுமே சுவாமிகளின் அடையாளம்) நிறைந்த பூரிப்புடன் அமர்ந்திருந்தார். யாழ். மாநகராட்சி மன்ற முதல்வரும் - சைவசமய விவகாரக் குழுவின் போஷகருமான திரு இம்மானுவேல் ஆனல்ட் அவர்களுடன், நல்லை ஆதீனம், திரு ஆறு. திருமுருகன், சின்மயாமிஷன் சிதாகாசானந்த சுவாமிகள், சிவஸ்ரீ வாசுதேவக் குருக்கள் ஆகியோர் ஆச்சிரம சுவாமிகளுடன்



*இடைவிடாத முயற்சியும் எப்போதும் மலர்ந்த முகமும் அறிவின் அறிகுறிகள்.*

கூடவே மேடையில் அமர்ந்திருந்தனர். உரிய வேளை வந்ததும், "ஓம் வேலவனே போற்றி- ஓம் வேலாயுதனே போற்றி - ஓம் பாலகுமாரா போற்றி - ஓம் மால்மருகா போற்றி என



மென்மையான குரலில் உணர்வுபூர்வமாக முருகன் திருநாமம் பின்னணியில் ஒலிக்க, யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர் ஆச்சிரம சுவாமிகளுக்கு "**யாழ் விருது**" வழங்கிக் கௌரவித்தார். அத்துடன் சுவாமிகளிடம் பொற்கிழியும் வழங்கப்பட்டது. 31.08.2018இல் ஆச்சிரமத்தில் நடந்த விழாவில் திரு ச. லலீசன் அவர்கள் குறிப்பிட்டதுபோல, "**அலங்காரக் கந்தன் அன்னதானக் கந்தனுக்கு விருது வழங்கிய**" காட்சியினைக் கண்டு சபையோர் அனைவரும் மனமொன்றி மெய்சிலிர்த்து நின்றனர்.



விருது பெறுபவருக்குப் பாராட்டுவிழா நிகழ்வுகளைப் பார்த்திருக்கிறோம். விருது கொடுப்பவருக்கு கௌரவிப்பு நிகழ்ந்ததை எங்காவது பார்த்ததுண்டா? பார்த்தோம்.... சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் 31.08.2018இல், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை

*எளிமையும் கட்டுப்பாடும் நற்பண்பும் சேர்ந்தால் அவற்றை யாராலும் வெல்ல முடியாது.*

பண்பாட்டுப் பேரவையினரால் முன்னெடுக்கப்பட்ட ஆச்சிரம சுவாமிகளுக்கான பாராட்டு விழாவினையும், பாராட்டு வழங்கிய யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினருக்கான கௌரவிப்பு நிகழ்வினையும் ஒன்றுசேர நடாத்தி, பெறுபவருக்கும் - கொடுப்பவருக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர். இந்நிகழ்வுடன் ஆச்சிரம சுவாமிகளின் 69ஆவது பிறந்தநாள் விழாவும் இணைந்து கொண்டமை யினால் வாழ்த்துக்களாலும்- வாழ்த்துப் பாக்களாலும்- நடன நிகழ்வினாலும் விழா களைகட்டி நின்றது.

யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினர் அனைவரும் விசேட பேருந்துமூலம் செல்வச்சந்நிதி வாசலுக்கு வந்து சேர, அவர்களது வரவினை எதிர்பார்த்துக் காத்திருந்த ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் அவர்களை வரவேற்று, அனைவருமாக கோவிலில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஊர்வலமாக ஆச்சிரம வாசலை வந்தடைந்தனர். வாழை தோரணங்களாலும்- நீக்கமற நிறைந்திருந்த நந்திக் கொடிகளினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த பூவரச மரத்தடியும் - மண்டபமும் பொலிவுடன் காணப்பட்டது. மண்டப வாசலில் வைக்கப்பட்டிருந்த நிறைகுட வரவேற்பிடத்தில் மங்கல விளக்கேற்றலின் பின், பெண்கள் இருவர் ஆராத்தி எடுத்து பொட்டிட்டு அனைவரையும் வரவேற்றனர்.



யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு உறுப்பினர்கள் மொத்தம் 15 பேர்களில், யாழ் மாநகர முதல்வர் - யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளரும் வெவ்வேறு முக்கிய அரசாங்க நிகழ்வுகள் காரணமாக வருகை தராதபோதும் ஏனைய 13 உறுப்பினர்களும்

*கல்வி என்பது முக்கியமானது மட்டுமல்ல, வியத்தகு மாற்றங்களையும் ஏற்படுத்துவது.*

ஆச்சிரம மண்டபத்தின் இடதுபக்கமாகப் போடப்பட்டிருந்த விசேட இருக்கைகளில் வரிசையாக அமர்ந்துகொள்ள, ஏனைய அனைவரும் தரையில் அமர்ந்துகொண்டனர். மண்டபத்தில் முதல் நிகழ்வாக திரு அ. தங்கராசா அவர்களினால் பஞ்சபுராணம் ஓதப்பட்ட போது, ஒலிவாங்கியில் கணீரென ஒலித்த அவரது குரலில் கட்டுண்டு கண்மூடித் தியானித்து நின்றனர் சபையோர்.






சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர் திரு கு. அருணகிரிநாதன் அவர்களின் வரவேற்புரையினைத் தொடர்ந்து, செல்வி தி. ஜென்சிகா அவர்களின் வரவேற்பு நடனம் ஆரம்பமாயிற்று. முழுமையான பரதநாட்டிய உடை அலங்காரத்துடன், "வசந்தகால மலர்கள் தூவி வரவேற்போம்", "வண்ண வண்ணப் பூக்கள் தூவி வரவேற்போம்" எனும் பொருள் பொதிந்த பாடல் பின்னணியில் ஒலிக்க, நிறைந்த புன்சிரிப்புடன்- செல்வி தி. ஜென்சிகாவின் அற்புத நடனங்கண்டு சபையோர் கரகோஷம் செய்து தம் மகிழ்வினை வெளிக்காட்டினர். நிகழ்வின் இறுதியில் மீண்டும் ஒருமுறை நடன நிகழ்ச்சி இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.



அருளுரை நிகழ்த்திய பேரவையின் போஷகர் சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் அவர்கள், விருது கொடுத்த யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு உறுப்பினர்களையும், யாழ் விருது பெற்ற சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளையும் வாழ்த்தி அருளாசி வழங்கியதுடன் சுவாமிகளின் 69ஆவது பிறந்தநாளுக்கான வாழ்த்தினையும் தெரிவித்து தமது அருளுரையினை நிறைவு செய்தார்.



யாழ்ப்பாணக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு அ. குமாரவேல் அவர்கள் தலைமையுரையில் பல அம்சங்களையும் கோடிட்டுக் காட்டினார். ஆச்சிரமம் ஆற்றிவரும் சமய - சமூகப் பணிகள், ஆச்சிரமத்தின் ஆரம்பகால

*வாழ்க்கையில் முன்னேறுவதற்கு நம்பிக்கையும் திறமையும்தான் தேவை.*

சிரமமான காலகட்டம், படிப்படியாக ஏற்பட்ட ஆச்சிரம வளர்ச்சி, அதனால் நடைமுறைப்படுத்த முடிந்த சமூக, சமயப் பணிகள், சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் தோற்றம், மலையகம் வரை விரிந்த ஆச்சிரம உதவிப் பணிகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான



மாதாந்தக் கொடுப்பனவுகள், பள்ளி மாணவர்களுக்கான சீருடைகள் - சைக்கிள் வழங்கல் உட்பட்ட கல்வி சார்ந்த உதவிகள், வறுமைக்கோட்டுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள், வாராந்த மருத்துவ சேவையும்- இலவச மருந்துகள் விநியோகமும் எனப் பல்வேறு ஆச்சிரமப் பணிகளையும் தெளிவாக எடுத்துரைத்தார். "**இன்று சுவாமிகளுக்குக் கிடைக்கும் பாராட்டானது, ஆச்சிரம சமய சமூகப் பணிகளில் சுவாமிகளுடன் தோள்கொடுத்துதவிய எல்லா ஆச்சிரம ஆர்வலர்களுக்கும் கிடைத்த வெகுமதியாகும்**" என்றும், யாழ் விருது வழங்கிய மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினருக்கு வழங்கும் கௌரவமும் அவசியமான ஒரு முன்மாதிரி நிகழ்வே என்றும் தமது நீண்ட தலைமையுரையினை நிறைவு செய்தார் ஆசிரியர் திரு அ. குமாரவேல் அவர்கள்.

யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினரைக் கௌரவிக்கும் வேளை வந்தது. ஆச்சிரம செயற்பாடுகளில் அதீதமான அக்கறை காண்பிக்கின்ற 26 பேர்களின் பெயர்களை (4 பெண்கள் உட்பட) ஆச்சிரம சுவாமிகள் வாசிக்க, அவர்கள் அனைவரும் மேடையருகே குழுமினர். திரு ஆ. சிவநாதன் அவர்கள் யாழ். மாநகராட்சி சைவசமய விவகாரக் குழுவினர் 13பேரது பெயர்களையும் ஒவ்வொன்றாக வாசிக்க- அவர்கள் மேடைக்கு வர- ஏற்கனவே குழுமியவர்களில் ஒருவர் பொன்னாடை போர்த்த, மற்றவர் மாலை சூட்ட, ஆச்சிரம சுவாமிகள் அனைவருக்கும் பதக்கம் அணிவித்துக் கௌரவப்படுத்த, கௌரவிப்பு



விழா கோலாகலமாக நிறைவேறியது. சைவசமய விவகாரக் குழுவின் இரு பெண் உறுப்பினர்களுக்கும், அழைக்கப்பட்ட ஏனைய பெண்கள் கௌரவம் வழங்கினர். விவகாரக்குழு

*பரந்த மனப்பான்மை உள்ளவர்களுக்கு உலகம் முழுவதுமே தன் குடும்பம்.*

உறுப்பினர்கள் அனைவரும் ஆச்சிரம சுவாமிகளுடன் கூட்டாகவும்- தனித்தனியாகவும் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர். சைவசமய விவகாரக்குழு சார்பாக யாழ். மாநகராட்சி மன்றச் செயலாளர் திரு அ. சீராளன் அவர்கள் ஏற்புரை வழங்கினார்.



கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி பிரதி அதிபர் திரு ச. லலீசன் அவர்கள் தமது அழகு தமிழில் வாழ்த்துரை நிகழ்த்தினார். இந்த யாழ் விருதினைப் பெறுவதில் சுவாமிகள் காட்டிய தயக்கம்- பின்னர் கடும் பிரயத்தனத்தின் பின்னர் சுவாமிகளை சம் மதிக்க வைத்த விபரங்களை விரிவாக எடுத்துரைத்தார். "யாழ் விருது" சுவாமிகளுக் குக் கிடைத்தமையால் விருது பெருமைபெற்றது எனவும், தம் பணியினை நிறைவாகச் செய்துள்ள யாழ் மாநக ராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினருக்கு இன்று கிடைத்த கௌரவமும் மிக நியாயமானதும்- அவசிய மானதும்" எனக் கூறினார் திரு ச. லலீசன் அவர்கள். **"அலங்காரக் கந்தன் அன்னதானக் கந்தனுக்கு விருது வழங்கியுள்ளான்"** என தமது வாழ்த் துரையின் இறுதியில் தெரிவித்த கூற்றினை, ஏற்றுக்கொண்ட சபையினர் நீண்ட கரகோஷம் செய்து தம் மகிழ்வினை வெளிப்படுத்தினர்.



கொழும்பு தொழில்நுட்பக் கல்விப் பயிற்சி தலைமைச் செயலகப் பணிப்பாளர் பேராசிரியர் யோகராஜன் அவர்கள் ஆச்சிரம சுவாமிகளுக்குப் பொன்னாடை போர்த்தி- வாழ்த்துப் பத்திரமும் வாசித் தளித்து, சுவாமிகள் விருது பெற்றமைக்கான பாராட்டினை யும்- 69ஆவது பிறந்த நாளுக் கான வாழ்த்துக்களையும் தெரி வித்துக்கொண்டார்.





2017இல் யாழ் விருதினைப் பெற்ற, சிவபூமி அறக்கட்டளை யின் ஸ்தாபகர் திரு ஆறு. திரு முருகன் அவர்களது வாழ்த் துரை அடுத்து இடம்பெற்றது. **"சீவன்களோடு சீவிக்கின்ற ஒரு ஆத்மா ஆச்சிரம சுவாமிகள்"** என்றும், விருதின் பெறுமதிக்கப்பால் மக்கள் மனங்களை வென்ற சுவாமிகளின் ஆளுமை அளப்பரியது" என்றும் தமது வாழ்த்துரையில் புகழாரம் சூட்டினார்.

*நம் மனம்தான் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கின்றது.*

மலையக மக்களின் சார்பாக வாழ்த்துரை வழங்கிய அப்புத்தளையைச் சேர்ந்த இலங்கை வங்கியின் இளைப்பாறிய முகாமையாளர் திரு கி. குலசேகரன் அவர்கள்,



''மலையக மண்சரிவினைத் தொடர்ந்து- மலையகத்தில் சமுதாயப் பணியினை மேற்கொண்டுவரும் சுவாமிகள் இன்றுவரை தம் பணியினைத் தொடருவது நாம் செய்த தவப்பயனே'' என்றும் சுவாமிகளின் இப்பணி என்றும் தொடரவேண்டும் எனும் வேண்டுகோளினையும் முன் வைத்தார்.

ஆச்சிரம சுவாமிகள் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளுக்கு ''யாழ் விருது'' வழங்கப்பட்டமையைப் பாராட்டி, விழாவிற்கு வருகை தந்த ஆச்சிரம ஆர்வலர்கள், சைவ கலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள் எனப் பலரும் வரிசையில் நின்று சுவாமிகளுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி- வாழ்த்துப் பாக்களை வாசித்தளித்து தமது உள்ளன்பை வெளிப்படுத்தினர். சுவாமிகளுக்கான பாராட்டு நிகழ்வுகள் நிறைவுபெற நீண்டநேரம் ஆயிற்று.



யாழ் விருது பெற்றமையைப் பாராட்டியதும், தமது பிறந்த நாளுக்கு வாழ்த்தும் தெரிவித்த அனைவருக்கும் சுவாமிகள் நன்றி கூறினார். ''விருதுகள் தமக்கு ஏற்புடையதல்ல'' என்பதை வலியுறுத்திய சுவாமிகள், நல்லைக் கந்தன் காலடியில் இயங்கிவரும் யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு உறுப்பினர்கள் ஒருமனதாக வழங்கிய இந்த ''யாழ் விருதினை'' ஆச்சிரமத்தின் அனைத்துப் பணிகளுடனும் இணைந்து பணியாற்றி- பல வழிகளிலும் உதவிகள் புரிந்துவரும் நல் இதயங்கள் அத்தனைக்கும் காணிக்கை ஆக்குகிறேன்'' எனத் தெரிவித்த ஆச்சிரம சுவாமிகள், விருதினை வழங்கிய சைவ சமய விவகாரக் குழுவினருக்குத் தமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.



திரு ஆ. சிவநாதன் அவர்களின் நன்றியுரையுடன் பாராட்டு விழாவும்- கௌரவிப்பு நிகழ்வும் நிறைவுக்கு வர, ஆச்சிரம மைய மண்டபத்தில் உள்ள முருகன் கருவறையில் ஆரம்பமான பூசை நிகழ்வுகளில் அனைவரும் கலந்துகொள்ள விரைந்தனர்.

*பணிவுடனும் அன்புடனும் இருப்பது எந்தக்காலத்திலும் நன்று.*

# சந்நிதியின் வரம்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –



மாநகர சபையீந்த மாபெரும் விருதான
யாழ்விருது பெற்றவரே மோகன தாஸர்
தேமதுரத் தமிழோடு சிவநெறி அறங்காக்கும்
தொண்டைமானாறு சந்நிதியின் வரமிதுவாகும்.

கடமையைச் செய்து பலனை எதிர்பாராத
காலம் உவந்தளித்த கர்மவீரரே சுவாமிகள்
விடமுண்ட கண்டன் சிவனுக்குமிது தெரியும்
விடியும் வரை வற்றாத பாத்திரம் இவரிடமுண்டு.

அன்னம் பொலியும் கை அமுது விளையும் மெய்
இன்ன(மு)ம் பாலிக்கும் சுவை ஈதலினால் வரும் கலை
முன்னம் பெருகிய அலை மயில்வாகனகுரு நிலை
தன்னம்பிக்கையின் தலை தர்மத்தின் சோலையே.

கல்விப்பணி கலைப்பணி கடவுளின் அன்னப்பணி
கருத்துப்பணி உரைநடைப்பணி உயரிய சுடர்ப்பணி
பல்கலைப்பணி பரவும்பணி பெறுமதியாம் மருத்துவப்பணி
பேரனர்த்தப்பணி யாவற்றையும் உபகரிப்பவர் சுவாமிகளே.

ஞானமுகில் ஞானசுரபி ஞானதானவள்ளல் என
வானளாவும் வகைசொல்ல வல்லதோர் கலாநிதியாய்
தானமதில் தேசமான்ய லங்கா ரத்தின ஜோதியாய்
தாற்பரிய வாழ்வில் சமாதான நீதிபதியாய் வென்றார்.


ஆலயநிதியில் அறப்பணி செய்வது பெரியவிடயமாயினும்
அதைவிட ஆச்சிரமம் செய்வது நூறுமடங்கு பெரிதே
சாலவும் இது மலைநாடுவரை நீளநெடிதுயர்வதனால்
ஞாலமுள்ளவரை இவருக்கிணை இங்குயாருமில்லையே.

புகழை விரும்பாத பொதுநலத்தொண்டன் எவனோ அவனே உத்தமன்.

இந்தியா உணர்ந்து போற்றிய பேறதனால் நம்
இலங்கை இவரைப் படிக்க இன்னும் பலகாலமாகும்
பந்தியையும் கவனிப்பார் பசிப்போரையும் வரவழைப்பார்
பைந்தமிழைச் சிரமேற்கொண்டு பரவுசிவ நெறியைச் சுரப்பவர்

முருகனார் மயில்வாகனர் முருகேசர் வழிபாட்டுடன்
மூர்த்தி தல தீர்த்தமதன் தித்திப்பு ஆட்சியுடன்
திருவினார் யாழ்ப்பாண மக்களின் மாட்சியுடன்
தேஜஸ் வரமுட்டி ஷேத்திரமாய் நீடு வாழ்வீர்.







படம் 01: கற்சிலைமடு- ஒட்டுசுட்டான் ஆலய கட்டிட நிர்மாணத்திற்காக ஒரு தொகைப் பணம் வழங்கப்பட்டபோது...

படம் 02,03,04: கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்திற்கு பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டபோது...

*கோபத்தை நயத்தால் வெல்லவேண்டும், தீமையை நன்மையால் வெல்ல வேண்டும்.*

(தொடர் -11)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

இறைவனை உணர்கின்ற ஞானம் ஆன்மீக ஞானம் என்று அழைக்கப்பட்டது. வேதகாலத்திலிருந்து இந்தக் காலம்வரை இந்துமதத்தின் பல்வேறு ஞானிகள் தோன்றி பேரின்பத்தை அனுபவிக்கும் வழிகளைப் பற்றி எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்கள். பேரின்பத்தை அனுபவித்த ஞானிகளும் பெரியவர்களும் தங்களின் அனுபவங்களை உள்ளம் உருகும் பாடல்களாக உருவாக்கினார்கள்.

இன்னும் சில மகான்கள் சிற்றின்பத்தை முறையாக அநுபவிப்பதன் மூலமாகத்தான் பேரின்பத்தை உணரமுடியும் என்று விளக்கினார்கள். சிறிய இன்பத்தை உணராமல் பெரிய இன்பத்தை உணர்வது சாத்தியமில்லை என்பது இவர்களின் கருத்தாகும். ரிஷிகள் தங்கள் பத்தினிகளுடன் வாழ்ந்த இரகசியமும் இதுதான். ஆக இந்து மதம் இன்பத்தை அனுபவிக்க சொல்லுகிறதே தவிர, வெறுக்கச் சொல்லவில்லை. அனுபவம் எதுவாகவிருப்பினும், அது ஆக்க பூர்வமானதாக இருக்கவேண்டும் என்பதும், நல்லதை நோக்கியே செல்ல வேண்டும் என்பதும் இந்துக்களின் கோட்பாடாகும்.

இந்து ஆலயங்கள் கலைக்கோயில்களாக விளங்குகின்றன. சிற்பக்கலையும் இசைக்கலையும் இந்து ஆலயங்களில்தான் செழித்து வளர்ந்தன. வாழ்க்கையை ரசிக்காமல் கலைகள் உருவாவது சாத்தியம் இல்லை. இந்து சமயத்தில் கலையும் தெய்வீகமும் பிரிக்க முடியாமல் பின்னிப் பிணைந்தே வந்திருக்கின்றன. வாழ்க்கையை ரசிக்கத் தெரிந்தவன் மட்டும்தான் ஒரு நல்ல இந்துவாக இருக்கமுடியும்.

இந்துமதம் எதிர்மறைக் கோட்பாடுகளை உள்ளடக்கிய மதம் என்பது போலியான வாதம். வாழ்க்கைக்கு வழிகாட்டிய மதம் இந்துமதம்.

அறம் பற்றியும் பொருள் பற்றியும் இன்பம் பற்றியும் சொன்ன இந்துமதம் வீடு பற்றியும் பேசுகிறது. வீடு என்றால் மோட்சம் என்று அர்த்தம். அது எங்கே இருக்கிறது? மோட்சம் என்பது கற்பனையா, அல்லது நிஜமாகவே அப்படி ஏதாவது இருக்கிறதா?

இந்துசமய தத்துவங்களில் மோட்சம், நரகம் என்கிற சொற்கள் இருக்கின்றன என்பது உண்மை அவற்றைப் பற்றி விதவிதமான கற்பனைகள் எழுதப்பட்டிருப்பதும் உண்மை. "புண்ணியம் செய்தால் மோட்சத்துக்குப் போவாய், பாவம் செய்தால் நரகத்துக்குப் போவாய்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

"மோட்சத்தில் கற்பகதரு இருக்கும், காமதேனுப்பசு இருக்கும். நீ விரும்புகின்றவற்றையெல்லாம் அவை உனக்குத் தரும்" என்றெல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள். அங்கே அப்ஷரசுக்கள் என்கிற அழகிய கன்னிகள் இருப்பார்கள். அவர்கள் மோட்சத்திற்கு வருகிறவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பார்கள்.

மோட்சத்தின் நிலை இதுவென்றால் நரகம் இதற்கு முற்றிலும் மாறுபட்டது. பாவம் செய்தவர்கள் அங்கே செல்லுகிறார்கள். அவர்களுக்கு அங்கே பலவிதமான

*மனதில் சாந்தமும் அமைதியும் உள்ளவரே அஞ்சாமல் இருக்கமுடியும்.*

கொடுமைகள் நடைபெறும். ஆற்றில் நீந்த வேண்டும். கொதிக்கின்ற எண்ணெயில் போட்டு வறுத்து எடுப்பார்கள். இப்படியெல் லாம் மோட்சம், நரகம் என்பவை பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்து மதத்தில் மட்டுமல்ல, மதங் கள் பலவற்றிலும் மோட்சம், நரகம் என்பதைப் பற்றி இப்படியான கற்பனைகள் உண்டு.

மக்களை மிரட்டி புண்ணியம் செய்ய வைப்பதற்காகவும், பாவச் செயல்களிலிருந்து அவர்களைத் தடுப்பதற்காகவும் இந்தக் கற் பனைகள் தோன்றியிருக்க வேண்டும்.

இந்து மதத்தின் முக்கிய நம்பிக்கை மறு பிறப்பாகும். "ஒவ்வொருவரும் ஒரு பிறப் பால் தான் செய்கின்ற காரியங்களின் கர்ம பலன்களை அடுத்த ஜென்மத்தில் அனுபவிக் கிறான்" என்பது இந்துக்களின் அழுத்தமான நம்பிக்கை. அதாவது ஒருவன் முதற்பிறப்பில் செய்கின்ற பாவ புண்ணியங்களின் பலன் களை ஒட்டியே இந்தப் பிறவியில் அவனுடைய வாழ்க்கை அமைகிறது. இதை சரியென்று ஏற்றுக்கொண்டால், மோட்சம், நரகம் என்கிற கற்பனைகளுக்கு அர்த்தம் இல்லாமல் போய் விடுகிறது.

இந்துக்களின் நம்பிக்கைப்படி பிறப்பு என்பது ஒரு விபத்து. நாம் செய்கின்ற கர்ம பலன்களின் விளைவாக, பிறப்புக்கள் தொடர் கின்றன. இந்தப் பிறப்பிலிருந்து விடுபட்டு பேரின்பநிலையினை அடைவதுதான் மனி தனின் நோக்கமாக இருக்கவேண்டும். அதற் காகத்தான் மனிதன் முயற்சியும் செய்ய வேண்டும்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"

என்பது குறள். இறைவனது திருவடி களைச் சேர்ந்தவர் மட்டுமே பிறவியாகிய கட லைக் கடக்க முடியும். ஏனையோரால் கடக்க இயலாது என்பது இந்தக் குறளின் கருத்து.

நாயன்மார்களின் பாடல்கள் அனைத் தும் பிறவி அறுத்து பேரின்பநிலையை அடைவதைப் பற்றியே பேசுகின்றன.

மனித உடலில் உறையும் "ஆத்மா" அதிலிருந்து விடுபட்டு பரமாத்மாவுடன் ஐக் கியப்படும் நிலையே பேரின்பநிலை என்று மதப்பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இவர்களின் கருத்துப்படி வீடு அல்லது மோட் சம் என்பது இந்தப் பேரின்பப் பெரு நிலையே ஆகும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்று சொன்னார்கள். பொருளை நல்ல வழியில் ஈட்டி அறத்தை முறையாகச் செய்து, இன்பத் தைச் சரியான வழிகளில் அனுபவிக்கின்றவர் கள் வீட்டை அடைவார்கள் என்பது உறுதி.

திருவள்ளுவர் அறத்துப்பால், பொருட் பால், காமத்துப்பால் என்று மூன்று பால்களை மட்டுமே தன்னுடைய நூலில் எழுதினார். வீடுபற்றிய பிரிவை அவர் தொடவே இல்லை. ஏனைய மூன்று நிலைகளிலும் சிறப்பான வாழ்க்கை நடத்துகின்றவர்கள் மோட்சநிலை பெறுவது திண்ணம் என்பதால் அதைப்பற்றிப் பேசாமல் விட்டிருக்கக்கூடும். ஆனால் பல்வேறு இடங்களில் வள்ளுவர் மறுபிறப்பைப் பற்றிக் குறிப்பிடுகிறார். எழுமை ஏழ்பிறப்பு என்றெல் லாம் ஆங்காங்கே சுட்டிக்காட்டிச் செல்லு கிறார்.

விடு என்கிற சொல்லின் அடிப்படை யில்தான், வீடு என்கிற சொல் தோன்றி இருக்கவேண்டும். பந்தங்களிலிருந்து விடுபடு கின்றபோது வீடு சாத்தியமாகி விடுகிறது. ஆகவே மோட்சம் என்கிற நிலை, பிறப்பு நீக்கிய நிலை எனக் கொள்வதே பொருத்த மானதாக இருக்கும். மற்றப்படி மோட்சம் என்றும், நரகம் என்றும் தனித்தனி இடங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பதை வெறும் கற்பனையாகத்தான் எடுத்துக்கொள்ள முடியும்.

*ஏராளமான வாய்ப்புகள் வரும்போது எச்சரிக்கையாக இரு.*

தாகூர் போன்ற தத்துவச் சிந்தனையாளர்கள் மோட்சம் நமக்கு வெளியில் இல்லை என்றும், நமக்குள்ளேதான் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஒருவர் நல்ல காரியங்களைச் செய்கின்றபோது மிகுந்த மன நிறைவைப் பெறுகிறான். இந்த மனநிறைவே அவனுடைய இதயத்தை மோட்ச சாம்ராஜ்ஜியம் ஆக்கிவிடுகிறது.

தத்துவங்கள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஒன்று மட்டும் உறுதியாகிறது. ஒருவன் நல்லதைச் செய்து, நிறைவான வாழ்க்கை வாழ்வானேயானால், அவன் மோட்ச இன்பத்தை அனுபவிக்கிறான்.

ஆக இந்துக்கள் உருவாக்கிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய வரிசை அற்புதமான வளர்ச்சி வரிசை என்பதில் சந்தேகம் இல்லை.

மனிதர்களாகப் பிறந்துவிட்டோம். நம்முடைய பிறப்பு நம் கையில் இல்லை. பிறந்த பிறகு கிடைத்துள்ள வாய்ப்பை பயன் உள்ள முறையில் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வது நம்முடைய கடமை. வாழ்க்கையில் நமக்கு அளிக்கப்பட்டு இருக்கின்ற எந்த வாய்ப்பினையும் நாம் கை நழுவ விடக்கூடாது. நம்முடைய குடும்பத்துக்கும் சமுதாயத்திற்கும் பயனுள்ள வகையில் நம்முடைய வாழ்க்கை அமைய வேண்டும். அப்படி அமைத்துக்கொள்வதன்மூலம் வீடு பேற்றை நாம் பெறமுடியும். மற்றும்படி மோட்சம், நரகம் என்கின்ற வார்த்தைகளை வைத்துக்கொண்டு நாம் குழம்பவேண்டிய அவசியம் இல்லை.

இந்துமதச் சிந்தனைகள் விழுமியவை. அவற்றைப் பற்றிய விமர்சனக் கண்ணோட்டங்கள் மாறுபடக்கூடும். சாரம்தான் நமக்கு முக்கியம். அதுதான் நமது வாழ்க்கைக்கு வழிகாட்ட முடியும்.

பிரம்மசரியம் - கிரஹஸ்தம் - வானப்பிரஸ்தம் - சந்நியாசம். சாதாரண மனித வாழ்க்கையை இப்படிப்பட்ட நான்கு நிலைகளாக இந்து மதம் பாகுபடுத்திக் காட்டி இருக்கிறது.

இதில் பிரம்மசரியம் முதல் நிலை ஆகும். வேதகாலத்தில் பிராமணர்கள் மட்டுமே கடைப்பிடிக்கவேண்டிய நிலைகளாக இந்த நான்கு நிலைகளும் கருதப்பட்டன. ஆனால் இந்து மதம் வாழ்க்கைகளில் விமோசனம் பெற விரும்புகின்ற அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய நிலைகளாகத்தான் இதைச் சொல்லியிருக்கிறது.

வர்ணாஸ்ரம் முறைப்படி நான்கு வர்ணங்களாகப் பிரிக்கப்பட்டன. சமுதாய தேவைக்காக இவை உருவாக்கப்பட்டன.

ஆன்மீக விடயங்களின் பொறுப்பை பிராமணர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஆட்சி முறை, போர்த்தொழில் ஆகியவற்றைக் கவனித்து சமுதாயத்தைக் காக்கின்ற பொறுப்பை சத்திரியர்கள் ஏற்றுக்கொண்டார்கள். வாழ்க்கைக்குத் தேவையான வாணிபம், விவசாயம் ஆகிய பொறுப்பை கவனித்தவர்கள் வைசியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இவை தவிர உடல் உழைப்பு சம்பந்தமான காரியங்களைக் கவனித்தவர்கள் சூத்திரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இது சாதிப் பாகுபாடு அல்ல, தொழில் ஈடுபாடு மட்டுமே ஆகும்.

பிரம்மசரியம் என்பது இளமைப் பருவத்தைக் குறிக்கும். கல்வி கற்கின்ற பருவம் இது. வாழ்க்கை பற்றிய உண்மைகள் இந்தப் பருவத்தில் தான் மனதில் ஆழமாகப் பதிய முடியும். எனவே இந்தப் பருவத்தில் பெறுகின்ற பயிற்சி வாழ்க்கை முழுவதற்கும் முக்கியமான பயிற்சியாகக் கருதப்பட்டது.

பிரமச்சரியத்தின்போது ஒருவன் மிகுந்த கட்டுப்பாடுகளுடன் வாழ்வது அவசியம்.

*வாழ்க வளமுடன் என வாழ்த்துவது மிக உயர்ந்த பலன்களை அளிக்கும்.*

அந்தக் காலத்தில் அவன் குருகுலவாசம் செய்தான். ஒரு குருவினிடம் வாழ்க்கைக்குத் தேவையான பாடங்களைப் பயின்றான். குரு வின் இல்லத்திலேயே வாழ்ந்தான். குருவுக்கு தேவையான பணிவிடைகளைச் செய்தான்.

குருவைத் தந்தையாகவும் குருவின் மனைவியைத் தாயாகவும் மதித்து வணங் கினான். குருவுக்கு பெண்கள் இருந்தால் அவர்களைச் சகோதரியாகக் கருதினான். இந்த குருகுலவாசத்தின்போது அவன் கடுமையான நெறிகளைக் கடைப்பிடித்தான். பிரம்மசரியத்தின்போது பெறுகின்ற பயிற்சி தான் வாழ்க்கைக்கு ஒருவனைத் தயார்ப் படுத்துகின்ற பயிற்சியாக இருந்தது.

இன்றைய சமுதாயத்தில் பிரம்மசரி யத்தின் நோக்கம் வேருடன் பிடுங்கப்பட்டு விட்டது. பிரம்மசரியப் பருவம் என்பது இன் றைய சமுதாயத்தில் திருமணம் செய்யாத வரை உள்ள இளமைக்காலம் எனப் பொருள் கொள்ளப்படுவதையும், திருமணம் செய்யாதவர்களை "பிரம்மசாரிகள்" என்று கருதும் நிலையும் இருப்பதைக் காணலாம்.

அன்றைய குருகுலவாசம் நல்ல மனிதர்களை உருவாக்கிறது. ஒற்றுமை, வேற்றுமையற்ற நேசம், கட்டுப்பாடு, பணிவு போன்ற உயர்விழுமியங்களை உருவாக் கியது. கவியரசு கண்ணதாசன் தனது வாழ்க்கை வரலாற்றில் "குருகுலக் காற்று என்மீது படாமல் போனது எனது துரதிஷ் டமே" எனக் குறிப்பிட்டிருக்கிறார். இதன் பொருள் திசைமாறிய வாழ்க்கை வாழாமல் முறையான வாழ்விற்கு குருகுலவாசம் சிறந்தமுறை என்பதுதான்.

இன்றைய கல்விமுறை பற்றிப்பல குறைபாடுகள் கூறப்படுகின்றன. சமயம் தாய்மொழி வரலாறு என்பவை மாணவர் களுக்குச் சரியான முறையில் கற்பிக்கப்பட வேண்டும் என்பது அடியேனின் கருத்தாகும். இன்று சமயக்கல்வி என்பது வடிவம் மாறி, "பண்டிகைகள்" பற்றிய கல்வியாகிவிட்டது. எந்தப்பாட அலகும் முழுமையானதாக இல்லை. வரலாறு என்பது நமது நாட்டைப் பற்றிய சரியான வரலாறாக அமைய வேண்டும். இன்றும் பிரித்தானியார் வரலாற் றைப் படிப்பதனால் என்னபயன் விளையப் போகிறது. ஒவ்வொரு பிரதேசங்கள் பற்றிய வரலாறு கற்பிக்கப்பட வேண்டும். தனது சமயம் பற்றியும், தேசம் பற்றியும் முழுமை யாகத் தெரிந்து கொள்வது அவசியம்.

கணிதம் விஞ்ஞானம், இரண்டாம் மொழி என்பவை உத்தியோக வாய்ப்பு நோக்கிய நகர்வுக்காக கற்கப்படும் கல்வி யாகும். மனிதனை உயர். சிந்தனையுடைய வனாக நிலை நிறுத்துவதற்கு சமயம், மொழி, வரலாறு அவசியத் தேவையாகும்.

வாழ்க்கைக்கு ஒருவன் தயாரிப்புக் களை செய்துகொண்ட பிறகுதான் கிரஹஸ்த நிலைக்குத் தகுந்தவனாக ஆகிறான்.

(தொடரும்...

**ஆற்றங் கரையோரம் நடந்து பாரும்**

ஆற்றங் கரையோ ரத்தில்
ஆனந் தமாக நடந்தால்
காற்று வந்து வீசும்
கவலைகள் பறந்தோ டிவிடும்
கூற்றுவன் கூட வாரான்
குமரனின் அடியார் என்று
ஆற்று நீர்வந் துகால் தொட
ஆனந் தமாகும் மனசு

-வ. யோகானந்தசிவம்-

கண்ணியம் இல்லாத அறிவு ஆபத்தானது, அஞ்சத்தக்கது.

யாழ் மாநகர சபையால் "யாழ் விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்ட "ஞானதான வள்ளல்" லங்கா இரத்தின ஜோதி, கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளை வாழ்த்தி பண்டாரவளை இந்து மத அமைப்புக்களால் சந்நிதியான் ஆச்சிரமத்தில் 31.08.2018 வெள்ளி அன்று நடைபெற்ற கௌரவிப்பு விழாவின்போது வாசித்து வழங்கப்பட்ட வாழ்த்து மடல்.

# சிந்தை மகிழ்ந்தே இங்கு நீடு வாழி!

– திரு கி. குலசேகரன் அவர்கள் –



செந்தமிழும் சிவ நெறியும் தளைத்தே ஓங்கும்
சீர்மிகு நற்பதி வடமராட்சி தன்னில்
வந்து பிறந்தவரே! மோகனதாஸ் சுவாமிகளே!
வாழுகின்றவரை பிறர்க்குச் சேவை செய்யும்
சிந்தனையால், செயல்களினால் சிறப்புற் றுயர்ந்தவரே!
சீர்பெறு நற்சந்நிதியான் ஆச்சிரமத் தலைமகனே!
உந்தனை யாம் மலையகத்தார் சார்பினிலே வாழ்த்துகிறோம்!
உள மகிழ்ந்து பல்லாண்டு காலம் வாழி!

பணி மனையை சந்நிதியில் கொண்ட போதும்
பல மைல்கள் கடந்துவந்து மலையகத்தில்
பணி புரியும் எங்களது குறைகளினைக் கேட்டறிந்து
பற்றோடு எமக்குதவும் பான்மை கொண்டு
அணி அணியாய் தொண்டருடன் வந்து செய்த
அரும் பணிகளை நாமும் மறப்போமில்லை!
துணிவுடனே சேவைகளைச் செய்யும் உங்கள்
தூய பணி தொடர்ந்திடவே வாழ்த்துகின்றோம்!

மண்சரிவால் "மீரியபெத்த" தோட்டத்து மக்கள் பலர்
மண்ணோடு மண்ணாகப் புதைந்திட்ட செய்தியன்று
உண்மையிலும் உலகெங்கும் வாழ்வோர் மனங்களினை
உறுத்தியுமே நின்றிட்ட அந்த வேளை
கண்கள் குளமாக நின்றோம்! எங்களுக்கு உதவ வந்த
கடவுளாய் உமையங்கு நாங்கள் கண்டோம்!
பண்புடனே துயர் துடைக்கும் பணிகள் செய்த
பாசம் மிகும் பெரியவரே நீடுவாழி!

*உன்னால் முடிந்ததையெல்லாம் செய்துவிட்டு இறைவனிடம் உதவிகேள.*

ஆண்டொன்று சென்ற பின்பும் மண்சரிவால் மாண்டோர்க்கு
அஞ்சலி நிகழ்வொன்றை அற்புதமாய் ஒழுங்கமைத்து,
மாண்டவர்கள் நினைவாக மலரொன்றைப் பிரசுரித்து
மலையகத்தின் வரலாற்றுப் படிவமாய் வடிவமைக்க
வேண்டும் எனும் முனைப்போடு செயற்பட்டு எங்களது
வேதனையை உலகறியச் செய்ய வைத்தீர்!
ஆண்டவனின் அருளோடு இன்னும் பல்லாண்டுகளாய்
அறப் பணிகள் செய்திங்கு நீடு வாழி!!

மலையகத்து மாணவரும் வடக்கில் வந்து
மகிழ்வுடனே கல்விகற்றுத் தேறுதற்கு
நிலையான வழிமுறைகள் செய்து வைத்தே எங்கள்
நெஞ்சங்கள் கொள்ளை கொண்டீர்! என்றும் அங்கு
விலைமதிப்பே இல்லாத கல்விச் செல்வம்
விளங்கிடவே வேணும் எனும் எண்ணத்தோடு
கலைகளையும் வளர்ப்பதற்காய் ஆர்வம் கொண்டீர்! எங்கள்
கண்மணியே நீடுழி வாழி! வாழி!

அறநெறியை வளர்ப்பதற்கும் அங்கே உள்ள
ஆலயங்கள் புனரமைப்புப் பெறுவதற்கும்
வறியவர்க்கு உதவுதற்கும், அங்கு வாழும்
வலுவிழந்தோர், நோயுற்றோர் தமக்குங்கூட
மறவாது மருத்துவ நற்சேவைகளையும் செய்ய
மனங்கொண்டெம் மலையகத்தில் உழைத்தீர் ஐயா!
சிறப்பான சேவை செய்யும் உங்கள் வாழ்வு, மேலும்
சிறந்திடவே வாழ்த்துகிறோம்! நீடு வாழி!

பார் புகழும் வண்ணம் பல பட்டங்கள் பெற்றவுமை
பாராட்டி யாழ் விருதும் வழங்கிவைத்தார் வாழ்த்துகிறோம்
பேர் பெற்ற உங்களது பிறந்த பொன்நாளிதனில்
பிரியமுடன் மலையகத்தில் வாழும் நாங்கள்
நேரினிலே வந்தும்மை வாழ்த்தியுமே நின்றோம்!
நீல மயில் வாகனனின் அருளினோடு
சீரிய நற் பணிகள் பல மேலும் ஆற்றி
சிந்தை மகிழ்ந்தே இங்கு நீடு வாழி!

*வாழ்க்கை அனுபவம் இல்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது.*

(கட்டுரைத்தொடர் - 45)

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## காரைநகர் தந்த ஞானதீபம் - சுவாமி முருகேசப் பெருமான்

### 01) காரைநகர் பதியின் சிறப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்குக் கரையோரப் பகுதியில் தீவுக்கூட்டங்கள் அமைந்துள்ளன. ஷப்த தீவுகளில் ஒன்றாக இருந்த காரைதீவு காலப்போக்கில் காரைநகராக மாற்றம் பெற்றுவிட்டது. முதன்முதல் யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் தரைத் தொடர்பை ஏற்படுத்திய தீவு காரைதீவாகும். காரைச் செடிகள் நிறைந்து விளங்கியதால் இத் தீவுக்கு இப்பெயர் ஏற்பட்டது. சிவபூமி எனத் தவயோகி திருமூலநாயனரால் போற்றப்பட்ட ஈழமணித் திருநாட்டைத் தரிசிக்க விரும்பிய அகத்திய முனிவர் இங்கு வருகை தந்து காரைதீபத்தில் பர்ணசாலை அமைத்து தங்கியிருந்தார் என்பது ஐதீகம். தன்னைத் தரிசிக்க வந்த இந்திரனுக்கு காரைச்செடியின் இலைகளைச் சேர்த்துக் களி கிண்டிக் கொடுத்தார் என்பது செவிவழிச் செய்தியாகும்.

சைவமும் தமிழும் சைவசமயப் பண்பாடும் தழைத்தோங்கி வளர்ந்த பிரதேசமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் காரைநகர் மிளிர்கிறது. ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படுகின்ற திண்ணபுரம் சிவன்கோயில் உட்பட பல சைவாலயங்கள் காரைநகர் முழுவதும் வியாபித்துக் காணப்படுகின்றன. தெய்வ வாசகமாகிய திருவாசகத்திற்கு உரை எழுதிய பண்டிதர் அருளம்பலவனார் உட்பட சைவாசிரிய கலாசாலையின் தோற்றத்திற்கு மூல விசையாக இருந்து செயற்பட்ட ஆசிரியர் அருணாசலம் போன்ற பல அறிஞர் பெருமக்கள் வாழ்ந்து சிவப்பணியாற்றிய பூமியாக காரைநகர் மிளிர்கிறது. இத்தகைய புனித பூமியில்தான் மகா ஞானியாகிய முருகேசப் பெருமானும் தோன்றினார்.

### 02) முருகேசப் பெருமானின் இளமைக் காலம்:

இளைமைக் காலத்திலே கல்வியிலே மிகவும் நாட்டம் கொண்டிருந்தார். தாய்மொழியாகிய தமிழோடு சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்திலும் மிகவும் புலமை பெற்றிருந்தார். சமஸ்கிருத மொழியிலும் புலமை பெற்றிருந்தார். பிரபலமான ஆங்கிலப் பத்திரிகையாகிய ரைம்ஸ் ஒவ் சிலோனின் உப பத்திராதிபர்களில் ஒருவராகக் கடமையாற்றினார். இதனால் இவரைப் "பேப்பர் சாமியார்" என்றே பலரும் அழைப்பார்கள். பாரத நாட்டின் தேசபிதாவாகிய மகாத்மா காந்தி, சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு, ஜனாதிபதியாக இருந்த டாக்டர் இராஜேந்திர பிரஷாத் போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். சிறிய வயதிலிருந்தே ஞான நூல்களைத் தேடிக் கற்பதில் ஆர்வமாக இருந்தார். தத்துவ விசாரணையில் ஈடுபாடு கொண்டிருந்த இவர் சைவ சித்தாந்த தத்துவத்தை நுணுகி ஆராய்ந்தார். "தன்னை அறிந்தவன் தத்துவஞானி" என்ற திருமூலரின் வாக்கிற்கு அமையத் தனக்குள்ளே சிவத்தைக்

*தவறு செய்யாதவன் என்று தன்னை எவரும் கூறிக்கொள்ள முடியாது.*

கண்டார். சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த ஞானச் செம்மலாக மிளிர்ந்தார்.

சுவாமிஜி முதலில் இல்லற வாழ்வை மேற்கொண்டிருந்தார். மனைவி இறந்தபின்பு துறவறத்தை மேற்கொண்டார். காரைநகரின் கோவளக் கடற்கரையில் உள்ள கலங்கரை விளக்கத்தின் அயற்பகுதியில் பர்ணசாலை அமைத்துத் தன்னை நாடிவரும் அடியவர்களின் உள்ளத்தில் ஞானதீபத்தை ஏற்றி வைத்தார். வெளிச்சவீட்டுப் பர்ணசாலையில் சுவாமிஜி இருந்த காலத்தில் தன்னை நாடி வந்த ஆண் பிள்ளைகளுக்கு ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பித்தார். முதலில் ஆண் பிள்ளைகளையே தனது ஆச்சிரமத்தில் சீடர்களாக வைத்திருந்த சுவாமிகள் பிற்காலத்தில் பெண்களையும் சீடர்களாக ஏற்றுக்கொண்டார். அந்தச் சிஷ்யைகளில் ஒருவராகிய மேருபுத்திரி அம்மையார் துறவியாக வாழ்ந்து சுவாமிகளின் சிந்தனைகளை ஆதாரமாகக் கொண்டு பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவர் உடைய நூல்களைப் பற்றிய ஆய்வு மாநாடு அண்மையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சுவாமிகளின் சிஷ்யர்களும் பல்கலைக்கழகத்தின் இந்துநாகரிகத் துறையினரும் சேர்ந்து விழாவினை மிகச் சிறப்பாகச் செய்திருந்தார்கள். இலைமறை காயாக இருந்த சுவாமிகளின் அருளனுபவங்கள் எல்லாம் இந்நிகழ்வின் பின்பு வெளியுலகுக்குத் தெரிய வந்தது.

சுவாமிகள் தெய்வத் தமிழாக இருக்கின்ற பன்னிரு திருமுறைகளையும் ஞான நூல்களாக இருக்கின்ற மெய்கண்ட சாஸ்திர நூல்களையும் நன்றாகக் கற்றறிந்திருந்தார். மணிவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இரண்டையும் பருகிச் சுவைத்தவர். இவர் அருளிய வள்ளிக்கும்மி என்னும் நூல் திருவாசகம், திருக்கோவையார், சைவசித்தாந்த சாஸ்திர நூல்கள் ஆகியவற்றைப் பிழிந்தெடுத்த சாறாகவே காணப்படுகிறது. வள்ளிக்கும்மி நூலை சைவ சித்தாந்த சாகரம் என்று கூறினால் மிகையாகாது. இந்நூலில் முப்பொருள் விளக்கம் சைவ நாற்பாத நெறிகள், குருதத்துவம் ஆலய வழிபாட்டின் முக்கியத்துவம் ஆகிய அனைத்தும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. சொக்கலிங்க மாலை, மீனாட்சி பிள்ளைத் தமிழ் ஆகிய நூல்களில் பதி பசு பாச இலக்கணங்கள், தவமகிமை, ஞானநெறி, திருநீற்றின் பெருமை, பஞ்சாட்சர மந்திரத்தைச் செபிப்பதால் ஏற்படும் பயன், திருத்தொண்டு நெறி ஆகிய விடயங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கு தூய்மையான மனமும், களங்கமிலா பக்தியும் தேவையென்பதைத் தனது நூல்களில் வலியுறுத்திக் கூறியுள்ளார். நாயன்மார்கள் நால்வரையும் புகழ்ந்து பல பாடல்களைப் பாடி உள்ளார். சைவத்தின் காவலர்களாகவும், திசைகாட்டிகளாகவும் திகழ்ந்தவர்கள் நால்வர் பெருமக்கள் என்பதை "நால்வரில்லையேல் சைவசமயமில்லை" என்று சிறப்பித்துக் கூறியுள்ளார். ஆங்கிலத்திலும் பல நூல்களை எழுதியுள்ளார். சுவாமிஜி தனது சரித்திரத்தை ஆங்கிலத்தில் எழுதி வைத்துள்ளார்.

கிறிஸ்தவ மிஷனரிமார் கிராமங்கள் தோறும் பாடசாலைகளை நிறுவிக் கல்வி வழங்குகின்றோம் என்ற போர்வையில் மாணவர்களை மதமாற்றம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வந்தார்கள். இதனைத் தடுப்பதற்கு ஊர்கள்தோறும் சைவப் பாடசாலைகளை நிறுவ வேண்டும் என்ற நாவலர் பெருமானின் சிந்தனையைச் செயற்படுத்தும் முகமாக சுவாமிகள் காரைநகரில் சுந்தரமூர்த்தி வித்தியாலயம் என்ற சைவப் பாடசாலையை நிறுவினார். வறிய மாணவர்கள் பலருக்குத்

*உழைப்பே ஓய்வுக்குத் திறவுகோல், சுறுசுறுப்பே செல்வத்துக்குத் திறவுகோல்.*

தனது ஆச்சிரமத்தில் வைத்துச் சுவாமிகள் கணிதம் ஆங்கிலம் ஆகிய இரு பாடங்களையும் இலவசமாகக் கற்பித்து வந்தார். கிறிஸ்தவ பாடசாலைக்குச் செல்ல விரும்பாமல் மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்களைத் தனது ஆச்சிரமத்திற்கு அழைத்துக் கல்வியை வழங்கினார். சில மாணவர்கள் ஆங்கில உச்சரிப்பே வராமல் கஷ்டப்பட்டார்கள் என்றும் கணித பாட விளக்கம் மிகவும் குறைந்தவர்களாகவே காணப்பட்டார்கள் என்றும் சுவாமிகள் கூறியிருக்கிறார். மனிதன் செம்மையுற வாழ்வதற்கு வழிகாட்டும் ஞானத் திருநூலாகிய திருக்குறளை எல்லா மாணவர்களும் கற்கவேண்டும் என்பதில் சுவாமிகள் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். ஆச்சிரமத்தில் தொண்டு செய்யும் சிறுவர்களுக்கும், அங்கு வந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கும் திருக்குறள் பாடல்களை விளக்கிக் கூறி அவற்றை மனனம் செய்ய வேண்டும் என்று கூறினார். மனனம் செய்து அப்பாடல்களைச் சுவாமிகள் முன்னிலையில் ஒப்புவிக்கும் மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கி ஊக்குவித்தார்.

பாரதநாட்டின் சுதந்திரத்திற்காக அகிம்சை வழியில் போராடிய மகாத்மா காந்தியுடன் சுவாமிகள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். பிரித்தானிய நாட்டின் மகாராணி பாரத நாட்டின் பிரச்சினைகளைப் பற்றிக் கதைப்பதற்காக காந்தி அடிகளைத் தனது நாட்டிற்கு அழைத்திருந்தார். மகாத்மா காந்தி பாரத நாட்டிற்குப் புறப்படுவதற்கு முன்பு சுவாமிஜி அவர்களைச் சந்தித்தார். சுவாமிஜிகள் காந்தி மகானுக்கு தன் கையினால் திருநீற்றை நெற்றியிலே பூசி வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். திருநீற்றுக் காப்புடன் மகாராணியைச் சந்தித்துப் பேசிய காந்தி அடிகள் பேச்சுவார்த்தையில் வெற்றி பெற்று பாரத நாட்டிற்குச் சுதந்திரத்தினை வாங்கிக் கொடுத்தார். காந்தியடிகள் மரணமடைவதற்கு சில நாட்களுக்கு முன்பு காந்தியின் நண்பராகிய குமரப்பாவிற்கு கடிதம் ஒன்று எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில் காந்திக்கு இப்போது காலம் நன்றாயில்லை கவனம்! கவனம்! கவனம்! என்று மூன்று முறை குறிப்பிட்டிருந்தார். அந்தக் கடிதம் குமரப்பாவிற்குச் சென்று சில நாட்களின்பின் விநாயகராம் கோட்சே என்பவனின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி காந்தியடிகள் இறந்து விட்டார். காந்தியின் இறுதிக் கிரியைகளில் சுவாமிகளும் கலந்துகொண்டார். காந்தியின் அஸ்தியில் ஒரு பகுதியை சுவாமிகள் இலங்கைக்கு எடுத்து வந்தார். பாரத நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய J.C. குமரப்பா, ப.ப. கிரி ஆகியோர் சுவாமிகளின் ஆச்சிரமத்திற்கு விஜயம் செய்து அவருடைய ஆசியைப் பெற்றிருந்தார்கள்.

உடற்பிணியால் வருந்தியவர்களின் நோய்களை நீக்கிய மருத்துவராகவும் சுவாமிகள் திகழ்ந்தார். இவர் கொடுக்கும் திருநீற்றை அணிந்து நோய் நீங்கப்பெற்றவர்கள் பலர் காரைநகரில் வாழ்ந்த மக்கள் மாத்திரமல்லாது வேறு பல ஊர்களிலிருந்தும் வந்து சுவாமிகளிடம் திருநீறு பெற்றுப் பலர் தமது உடற்பிணியைப் போக்கிக் கொண்டார்கள். நோய் வீச்சின் தன்மையை அறிந்து தன்னை நாடி வருபவர்களுக்கு வேறுபல சிகிச்சைகளையும் அளித்து அவர்களுடைய நோய்களை நீக்கினார். முதலில் சமுத்திர தீர்த்தம் ஆடுதல், திருநீறு போடுதல், வேப்பங்குழையினால் பார்வை பார்த்தல், பிரசாதங் கொடுத்துச் சாப்பிடச் செய்தல் போன்ற பல்வேறு முறைகளையும் கையாண்டு நோய்களை நீக்கினார். இரத்த அழுத்த நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த டாக்டர் J.C. குமரப்பா சுவாமிகள் ஆச்சிரமத்தில் வந்து தங்கியிருந்து சுவாமிகளிடம் மருத்துவ சிகிச்சை பெற்று

*நாம் கடவுளுக்கு அஞ்சினால் மனிதனுக்கு அஞ்சுவதை நிறுத்தி விடுவோம்.*

நோய் நீங்கப் பெற்று சுகதேகியாக மாறினார். சிறு குழந்தைகளுக்கு வரும் பேதி நோய் உட்பட பல நோய்களினால் வருந்தும் மக்களுக்கு திருநீற்றைக் கொடுத்து நோய்கள் நீக்கியுள்ளார். சுவாமிகளின் ஆச்சிரமத்தில் பெண்கள் அதிலும் பிள்ளைகளில்லாத தாய்மார்கள் விரதம் நோற்றுப் பயன் அடைந்து உள்ளார்கள். தீர்த்தமாடி சுவாமிஜியின் கரங்களினால் திருநீறு வாங்கிப் பூசிக்கொள்வார்கள். சில பெற்றோர், தங்கள் பிள்ளைகளுக்கு சுவாமிகளைக் கொண்டே பெயரிட்டுக் கொள்வார்கள். இறைவனின் நாமங்களையும் அருளாளர்களின் நாமங்களையுமே பிள்ளைகளுக்கு பெயர்களாக வழங்குவார். சாம்பார் பிரசாதம், குழம்பு பிரசாதம் என்பன நோயாளிகளுக்குக் கொடுக்கப்படும். பெண்களின் பிரத்தியேக நோய்களுக்கு குழம்பும், உழுத்தங்களியும் கொடுக்கப்படுவதுண்டு. சுவாமிகளின் ஆச்சிரமம் ஆன்ம விடுதலைக்கு வழிகாட்டும் நிலையமாக இருந்ததோடு உடற்பிணி போக்கும் தெய்வீக வைத்தியாலயமாகவும் திகழ்ந்தது.

காரைநகர் கோவளக் கடற்கரையில் வெளிச்சவீட்டிற்கு அருகில் பர்ணசாலை அமைத்து 1940ஆம் ஆண்டுமுதல் சுவாமிகள் நிலையாகத் தங்கினார். கோவளத்துறை சிவப்பெருந்துறையாக மாறியது. மீனாட்சி அம்பாள் சமேதராக ஆலவாய்ப்பெருமான் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் தனக்கு இடம் தருமாறு கேட்டுத் தானே வந்து வீற்றிருந்தார். தனது தவவாழ்வின் முற்பகுதியில் வெளிச்ச வீட்டு பங்களாவில் அன்னதானம், பூசை முதலியவற்றை நடாத்தி வந்தார். ஒவ்வொரு மாதமும் வரும் பூரணை தினத்தில் சமுத்திர தீர்த்தமாடி வந்து யந்திர பூசையை விஷேட பூசையாக நடாத்துவார். வடை, பாயாசம் என்பன நைவேத்தியமாக வைக்கப்படும். காரைதீபத்து மக்களில் பலர் இந்த யந்திர பூசையில் கலந்துகொள்வார்கள். நாயன்மார்களின் குருபூசை, சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை, தைப்பொங்கல், புதுவருடப்பிறப்பு போன்ற திருநாட்களும் ஆச்சிரமத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. இத் திருநாட்களில் பலர் கோவளக் கடற்கரைக்கு வந்து சமுத்திர தீர்த்தத்தில் தீர்த்தமாடுவார்கள். குழந்தைகளுடன் வரும் தாய்மார்கள் எல்லோரும் குழந்தைகளைச் சுவாமிகளின் திருக்கரத்தில் கொடுத்து விடுவர். சுவாமிகளே சமுத்திர தீர்த்தத்தில் குழந்தையைத் தீர்த்தமாடச் செய்து தாயின் கையில் கொடுப்பார்.

பல அடியார்கள் விசேட தினங்களில் ஆச்சிரமத்திற்கு வருகை தந்து சுவாமிகளுடன் இணைந்து சென்று சமுத்திர தீர்த்தத்தில் தீர்த்தமாடி வருவார்கள். நோயாளிகளின் பிணிகளை நீக்கும் தீர்த்தமாகவும், விரதியர்களுக்கு விரத பலன்களைக் கொடுக்கும் விசேட தீர்த்தமாகவும், ஆன்மீக நாட்டம் உள்ளவர்களுக்கு அவர்களின் மலங்களைக் கழுவும் விசேட தீர்த்தமாகவும் இப் புனித தீர்த்தம் அமைந்திருந்தது. கன்னியாகுமரியில் இருக்கும் சமுத்திர தீர்த்தம் விசேட தீர்த்தம் என்றும் அதற்கு ஒப்பானது இந்தத் தீர்த்தம் என்றும், முழு நம்பிக்கையுடன் தீர்த்தமாடினால் முழுப் பலனும் கிடைக்கும் என்றும் சுவாமிகள் கூறுவார்.

கோவளக் கடற்கரையில் கடலை நம்பி வாழும் மீனவர்கள் பலர் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் மாலையில் தரையில் இருந்து தொழிலுக்காக நடுக்கடலை நோக்கி நகர்வது வழக்கம். சுவாமிகளின் ஆச்சிரமத்தில் சாயங்காலப் பூசைக்காகச் சங்கு ஊதும்

*கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.*

பொழுது கடற்தொழிலாளர்களும் படகில் ஏறி கோயிலுக்கு நேரே வருவார்கள். சங்குச் சத்தம் கேட்டதும் "அரோகரா அரோகரா" என்று ஒலி எழுப்பி அம்பாளை வணங்கிவிட்டே தொழிலுக்குச் செல்வார்கள். சுவாமிகள் ஆண் அடியார்களை அழைத்துக்கொண்டு கட்டுமரத்திலேயே நயினாதீவுக்குச் சென்று நாகபூஷணி அம்பாளை வணங்கிவருவார்.

வெளிச்சவீட்டுப் பங்களாவில் அன்ன தானம் நடக்கும் காலத்தில் இறைபூசையுடன் கோபூசையும் தவறாது இடம்பெறும். அடியார்கள் அனைவரும் உணவருந்துவதற்கு முன்பு இலையிலிருந்து ஒருபிடி அன்னம் பசுவிற்கு வழங்கிவிட்டே உணவருந்துவார்கள். பட்டிப் பொங்கல் தினத்தில் எல்லாப் பசுக்களுக்கும் அர்ச்சனை, தூபதீப ஆராதனை என்பன சிறப்பாக நடாத்தப்படும். ஆச்சிரமத்துப் பசுக்களுக்கு மீனாட்சி, சிவகாமி, காமாட்சி, புனிதம், திலகம், மனோன்மணி, பவானி, உமா, பார்வதி, பகவதி என அம்பாளின் பெயர்களையே சுவாமிகள் சூட்டியிருந்தார். காளைக் கன்றுகளுக்கு சுந்தரன், மாணிக்கன், வாகீசன், சம்பந்தன், நந்தன் என்ற பெயர்களே வைக்கப்பட்டன.

சுவாமிகள் சமாதிகூடிய காலமாகிய 1976ஆம் ஆண்டிற்கு முன்பே சில வருட காலம் பேசா அநுபூதியாகிய மோன நிலையிலிருக்கத் தொடங்கிவிட்டார். தேவையான பொழுதில் ஒரு சில வசனங்கள் மாத்திரம் பேசுவார். 1976ஆம் ஆண்டு வைகாசி மாதம் பரணி நட்சத்திரத்தில் பிரதோஷ காலத்தில் சுவாமிஜி பூரண சமாதி நிலையை அடைந்தார். சமாதிக் கிரியைகளைப் பொன்னாலை பிள்ளையார் கோயில் பிரதமகுரு தியாக ராஜா பொறுப்பேற்றுச் சைவசமய விதிப்படி ஒழுங்காக நடைமுறைப்படுத்தினார். சமாதிக் கருவறையில் வைக்கப்பட்ட அவருடைய திருத்தேகம் திருநீற்றினால் மூடப்பட்டது. இதன்மேல் உப்புமூட்டை கொட்டப்பட்டது. சமாதி மூடப்பட்டதும் சமாதியின்மேல் அபிஷேகம் செய்யப்பட்டு, நைவேத்தியம், அர்ச்சனை, கற்பூரதீபம் என்பன காட்டப்பட்டு கிரியைகள் யாவும் நிறைவடைந்தன.

(முற்றும்)

**நிறைவுரை:**

சந்நிதி வேலவனின் திருவருள் துணையால் "சித்தர்களின் ஞானம்" என்ற தலைப்பில் நாற்பத்தைந்து (45) கட்டுரைகளை ஞானச்சுடர் பத்திரிகையில் எழுதும் வாய்ப்பு அடியேனுக்கு கிடைத்திருந்தது. எமது சமயத்தில் பக்தர்கள், ஞானிகளைப் போலச் சித்தர்களும் சிறப்பிடம் பெற்றுள்ளார்கள். இவர்களுடைய சிந்தனை தெய்வீகமானது, சமூகப் பண்பாடு உடையது. அறிவியல் ரீதியில் அமைந்தது. புதுமையானது, புரட்சிகரமானது அகத்திலே சிவத்தைக் காண வைப்பது. இத்தொடரில் சித்தர்களின் பொது இயல்புகள் பற்றி முதல் பத்துக் கட்டுரைகளும் அமைந்திருந்தன. தொடர்ந்து பதினெண் சித்தர்கள், ஈழத்துச் சித்தர்கள் பற்றிய கட்டுரைகள் காணப்படுகின்றன. பேசும் தெய்வமாக நின்று பேரருள் செய்கின்ற ஆற்றங்கரை வேலவனின் திருவருள் துணையால்த்தான் இக்கட்டுரைகள் எழுதப்பட்டன. சந்நிதி வேலவனை நாடிவரும் அடியார்களுக்கு அன்னதானத்தோடு, ஞான தானத்தையும் இணைத்து வழங்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் குரு முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளின் வழிகாட்டலுடனும் எனது பணியை நிறைவு செய்துள்ளேன்.

# பொறுமை என்னும் அணி

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

பொறுமை என்னும் நகை அணிந்து பெருமை கொள்ள வேண்டும் பெண்கள் என்கின்றது ஒரு வாசகம். ஏன் பெண்களுக்கு மட்டும்தான் பொறுமை வேண்டுமா? ஆண் பாலாருக்கு வேண்டாமா? ஆண்களுக்கும் பொறுமை அவசியம்தானே? ஆண்களிடமும் மிகப் பெரிய பொறுமை இருக்குமேயானால், பின்னர் பெண்கள் காட்டிலே மழைதான் சந் தேகமேயில்லை.

பொறுமை நற்பண்புகளுக்கெல்லாம் சிகரம் போன்றது. மணிமுடிபோன்றது. பொறு மையால் எத்தனை எத்தனை சாதனைகளைப் படைத்துள்ளனர் எமது முன்னோர்கள். அதே நேரம் பொறுமையை இழந்ததால் எத்தனை சாம்ராஜ்யங்களை இழந்துள்ளனர் சில வல்ல வர்கள். எனவே எச்சந்தர்ப்பத்திலும் பொறு மையை இழக்கக் கூடாது. இஃது எமக்கு வேண்டியதோர் உயர் பண்பாகும். அது என் றும் எவர்க்கும் மிகுந்த நன்மையையே தந்து உள்ளது.

உயர் குணங்களுள் நற்பண்புகளுள் தேவசம்பத்துக்களுள் மிகச் சிறந்தது பொறுமை. பொறுமை இல்லையேல் வாழ்க்கையில் எதை யும் சாதிக்கமுடியாது. நூற்றுக்கணக்கான தர்மங்களைவிட, ஆயிரக்கணக்கான யாகங் களைவிட பொறுமை சிறந்தது, உயர்ந்தது. பொறுமையை அவ்வப்போது கடைப் பிடித்துத்தான் ஆக வேண்டும்.

குட்டிக் குரங்கொன்று தோட்டம் செய்ததாம். விதை விதைத்து வெகு நாளாகி யும் விதைகள் முளைக்கவில்லை. குரங்குக் குக் கவலை வந்துவிட்டது. தனது அப்பாக் குரங்கிடம் போய் இதுபற்றி முறையிட்டது. அப்பாக் குரங்கு சொன்னது, நீ போதிய அளவு நீர் ஊற்றியிருக்க மாட்டாய் அதுதான் விதைகள் முளைக்காமல் போய்விட்டன. இது அப்பாக் குரங்கு சொன்ன காரணம்.

குட்டிக் குரங்குக்குக் கோபம் வந்து விட்டது. ஒரு விதைக்குப் 10 வாளி வீதம் நீர் தினமும் ஊற்றிவருகிறேன். விதைதான் முளைக்கவில்லை, கத்தியது குட்டிக்குரங்கு.

ஐயையோ! நீ அளவுக்குமீறி நீர் ஊற்றிவிட்டாய்! விதைகள் அழுகிப்போய் விட்டனபோலும் என்றது அப்பாக்குரங்கு. இல்லை! இல்லை! விதைகள் அழுகவில்லை. நான் அடித்துச் சொல்லுவேன். இது குட்டிக் குரங்கின் பதில். அது எப்படி உனக்குத் தெரியும்? கேட்டது அப்பாக்குரங்கு. குட்டிக் குரங்கு சொன்னது "நான்தான் தினமும் மண் ணைக் கிண்டி விதைகள் முளைத்துள்ளனவா என்று பார்க்கிறேனே அப்போது தெரியும் தானே எனக்கு" என்றது குட்டிக் குரங்கு. எப்படி இருக்கின்றது?

எனவே பொறுமை எமக்கு அவசியம் வேண்டும். எதற்கும் காலம் வரும்வரை பொறுத்திருக்க வேண்டும். ஆனால் முயற்சி யைக் கைவிடக்கூடாது.

விதிவிலக்குகளும் உண்டு. பொறுமை கூடிவிட்டால் ஆசிரியரால் மாணவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. பெற்றோர்க்கு வீட் டில் பிள்ளைகளைக் கட்டுப்படுத்த முடியாது. குழந்தைகள் அளவுக்கு மிஞ்சிப்போய் "அப்பா வுக்கு ரோஷம் மானம் இல்லை கோபமே அவருக்கு வராது. சுத்த எருமைமாடுபோல"

*இளமையில் வறுமையும் முதுமையில் தனிமையும் கொடுமையானது.*

என்றே சொல்லி விடுவார்கள். பொறுமை இழந்து கோபித்து விட்டாலோ "அதுக்கு பிளட் பிரஷ்ஷர். அதுதான் தாம்தோம் என்று குதிக்கின்றது" என்பார்கள்.

அப்போ என்னதான் செய்வது! சினம் பொறுமைக்கு எதிரி. கோபம் வந்துவிட்டால் "நான் மனுஷனாய் இருக்க மாட்டேன்" என்று பலர் சொல்வதைக் கேட்டிருக்கின்றேன். பார்த்தீர்களா? உண்மையைத் தாமே ஒப்புக் கொள்கிறார்கள். இவர்கள் கோபம் வந்து விட்டால் நாம் மனுஷரேயல்ல. மிருகமே தான். எனவே விஷப்பரீட்சை வேண்டவே வேண்டாம். பொறுமையைக் கடைப்பிடிப் போம். வாழ்வில் சாதனைகள் புரிவோம். தோல்வியைத் தோற்கடிப்போம்.

## முக்திக்கு அவசரப்படாதே!

ஒரு துறவி இருந்தார். பலர் அவரிடம் உபதேசம் கேட்பது வழக்கம். வருகின்ற எல்லோருக்கும் அவர் அறிவுரை, ஆறுதல் சொல்வார். அந்தத் துறவியிடம் அறிவுரைகேட்க ஒருநாள் ஓர் ஆசாமி வந்தான். வந்தவன் எப்படி தெரியுமா? வடிகட்டின கஞ்சன். மற்றவர்களுக்கு எதையும் கொடுத்துப் பழக்கப்படாதவன். அப்படி இருந்தும் அவனுக்கு ஓர் ஆசை. முக்தி கிடைக்க வேண்டும். அதற்கு என்ன வழி என்று தெரிந்து கொள்வதற்குத்தான் துறவியைத் தேடி வந்தான். அவர் முன்பு வந்து, "சுவாமி! நான் முக்தியடைவதற்கு என்ன வழி என்று சொல்லுங்களேன்" என்றான்! துறவி, "இதோ பாரப்பா! நீ முக்தியடைய மகான்களும் சாஸ்திரங்களும் கூறும் தார்மிக நெறிகளைப் பின்பற்று. ஏழை எளியவர்கள், யாருமற்றவர்கள் இவர்களுக்கு உதவு!" என்றார்.

அவன் யோசித்தான், "இந்தத் துறவி கூறும்படி நடந்தால்தான் நமக்கு முக்தி கிடைக்கும்போல் உள்ளது. ஆனால் அதற்கு நிறையச் செலவு ஆகும்போல் இருக்கிறதே! செலவு செய்தால் என்னிடம் இருக்கும் செல்வம் எல்லாம் கரைந்துபோய்விடுமே! என்ன செய்யலாம்? "சரி இவர் உபதேசத்தை எடுத்துக்கொள்ள முடியவில்லை என்றாலும் குறைந்தபட்சம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பின்பற்றுவோம். அந்த அளவுக்கு முக்தி கிடைத்தால் போதும்" என்று முடிவு செய்தான். அதன்படி, தினம் தன் கையில் ஒருபிடி அரிசியைக் கணக்காக எடுத்துக்கொள்வான். இதை யாருக்காவது தானம் தருவான். அவ்வளவுதான்.

இப்படிச் செய்துகொண்டே இருந்தான். சில நாட்கள் கழித்து மீண்டும் துறவியைப் பார்க்கலாம் என்று புறப்பட்டான். சென்று பார்த்தான். "என்ன நான் சொன்னது மாதிரி தானம் செய்துகொண்டு வருகிறாயா?" என்று கேட்டார் துறவி. "ஆமாம் சுவாமி! தினமும் தவறாமல் ஒரு கைப்பிடி அரிசியைத் தானம் செய்து வருகிறேன்" என்றான் மிகவும் பெருமையாக!

துறவி இதைக்கேட்டு மிகவும் பாராட்டுவார் என எதிர்பார்த்தான். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை! மௌனமாக இருந்தார். அப்போது அவர் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தார். மரத்தின் அடிப்பாகத்தைத் தமது நகத்தால் கீற ஆரம்பித்தார். இந்த ஆசாமி, "என்ன இது, துறவி வாயைத் திறக்கவில்லையே" என்று பார்த்துக் கொண்டே நின்றான். "சுவாமி! நான் என் தானத்தைப்பற்றிச் சொன்னேன். நீங்கள் அதைப்பற்றி ஏதும் கூறாது மரத்தைக் கீறிக்கொண்டு இருக்கிறீர்களே!" என்றான். ஒன்றுமில்லையப்பா. நான் நகத்தால் இந்த மரத்தை வெட்டிக்கொண்டிருக்கிறேன். நீ கொஞ்ச நேரம் சும்மா இரு!" என்றார். இவனுக்கு அதைக்கேட்டதும் சிரிப்பு வந்தது. "என்ன இது? கை நகத்தால் அவ்வளவு பெரிய மரத்தை வெட்ட முடியுமா? கோடரியால் செய்ய வேண்டியதை உங்களால் எப்படி நகத்தாலே செய்யமுடியும்?" என்றான்.

"ஒரு பிடி அரிசியைக் கொடுத்துவிட்டு நீ மோட்சத்துக்குப் போக நினைக்கும்போது, நான் என்னுடைய விரல் நகத்தால் இம்மரத்தை வெட்ட நினைக்கக் கூடாதா?" என்றார் துறவி. துறவி இப்படிக் கேட்டவுடன் அந்த ஆசாமிக்குத் தனது தவறான மனப்பாங்கு புரிந்தது.

*நம்பிக்கை எதையும் துணிந்து செய்கின்றது. அன்பு எதையும் பொறுத்துக்கொள்கிறது.*


# வட இந்திய யாத்திரை - 05

(தொடர்ச்சி...

– மோகனதாஸ் சுவாமிகள் –

25.11.2016 வெள்ளிக்கிழமை அதிகாலை எமது குழுவினர் கங்கைக் கரைக்குச் சென்று படகின்மூலம் கங்கையின் மறுபக்கம் நீராடி முடித்து காசி விஸ்வநாதர், அன்னபூரணி, காசி விசாலாட்சி போன்றவர்களை வணங்கி, அன்று மதியம் வரை ஆலய வளாகத்திலே எமது பொழுதைக் கழித்தோம். அங்கே தங்கி இருந்த காரணத்தால் பல தடவை காசி விஸ்வநாதரைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. வெள்ளிக்கிழமையன்று காசி விஸ்வநாதரைத் தரிசித்த மனமகிழ்வுடன் எமது குழுவினர் தாம் தங்கியிருந்த விடுதியை அடைந்து மதிய உணவை முடித்து தமது உடலசதியைப் போக்கிக் கொண்டனர்.

மாலை மூன்று மணியளவில், அங்குள்ள வர்த்தக நிலையங்களில் தத்தமக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொண்டனர். ஆனால் எல்லோரது கைகளிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவு பணமே இருந்தது. ஏனெனில் பணத் தட்டுப்பாடு. இந்திய ரூபாய் ஐந்நூறு ஆயிரம் செல்லாது என்றும் நூறு ரூபாய் ஐம்பது ரூபா எடுக்க இயலாத நிலையும் இருந்த காரணத்தால் பொருட்கள் வாங்கமுடியவில்லையே தவிர பணத்தை மிச்சப்படுத்தக் கூடியதாக இருந்தது. பொருட்கள் வாங்கமுடியவில்லையே எனும் ஆதங்கத்தினால் எமது குழுவினர் மிகுந்த கவலை கொண்டனர்.



*மனிதர்களுக்கு நல்லது செய்வதுதான் கடவுளுக்குச் செய்யும் சிறந்த தொண்டு.*

நாமும் எமக்குத் தேவையானவற்றை வாங்கிக்கொண்டு கங்கை பூசையைக் காணும் நோக்கில் கங்கைப் படித்துறையை அடைந்து, இதுவரையும் கங்கை பூசையைக் கரையிலிருந்து பல தடவை பார்த்த நாங்கள் இன்று படகில் சென்று நதியின் நடுமத்தியில் இருந்து பூசையைப் பார்ப்போம் என்று கூறி படகு ஒன்றினை வாடகைக்கு அமர்த்தி கங்கையில் இருந்து அப்பூசையைப் பார்த்தபொழுது அப்பூசையின் மகத்துவத்தையும் உணரக்கூடியதாக இருந்தது. கங்கைக் கரையோரம் பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக காட்சி அளித்தது. நாள்தோறும் இடம்பெறும் இப்பூசையினைச் சலிப்பில்லாமல் பார்ப்பதற்கு மக்கள் கூட்டம் அலைமோதுவதென்றால் கங்காபூசையின் அருட்சிறப்புத்தான் காரணம். காசி யாத்திரைக்கு இவ்வழிபாடும் ஒரு காரணம். மறுநாள் வட இந்திய யாத்திரையை முடித்து தமிழ்நாடு திரும்பவேண்டிய காரணத்தால் விடுதியை அடைந்து எமது பிரயாணத்துக்கு வேண்டிய செயற்பாடுகளில் ஈடுபட்டோம்.



26.11.2016 சனிக்கிழமை மதியம் காசியை விட்டு நாம் புறப்பட உள்ள நிலையில் காலை மீண்டும் காசி விஸ்வநாதரைத் தரிசித்து அன்னபூரணி, சனீஸ்வர தரிசனத்தை முடித்துக் கொண்டு மதிய உணவையும் முடித்து வாரணாசி விமான நிலையத்தை 1.00 மணியளவில் சென்றடைந்தோம். அங்கிருந்து புதுடில்லி நோக்கிய எமது விமானப் பயணம் இரண்டு மணிநேரம் தொடர்ந்தது. பின்னர் சென்னை விமான நிலையம் நோக்கி விமானம் புறப்பட்டது. மாலை சென்னை விமான நிலையத்தை விட்டு நாம் தங்கும் விடுதியை அடைந்தோம்.

கடந்த பல வருடங்களாக தொடராக வட இந்திய யாத்திரையில் நான் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். ஒவ்வொரு தடவையும் காசி பார்த்த இடம் தானே புதிதாகப் பார்க்க என்ன இருக்கிறது என்ற மன எண்ணத்துடன் புறப்பட்டாலும் ஏதோ ஒரு விதத்தில் எமக்கு ஏற்படும் புதுப்புது அனுபவங்களினூடாக மீண்டும் மீண்டும் செல்ல வேண்டும் எனும் எண்ணத்தை ஏற்படுத்தி விடுகிறது. இந்த யாத்திரை முடிவுற்றபோது கூட இனி காசிக்குச் செல்வதில்லை என்ற முடிவோடு தான் வந்தேன். ஆனாலும் காசி விஸ்வநாதரைத் தரிசிக்க வேண்டும் எனும் எண்ணம் என்னுள் மேலோங்கி நிற்கின்றது. அத்துடன் புதுடில்லியில் மலைமீது வீற்றிருந்து அருளாட்சி புரியும் முருகனையும் வணங்கவேண்டும் எனும் அவாவும் உள்ளது. அழகு தமிழுக்குரியவன் நான்தான் எனும் கர்வத்தோடு டில்லி மாநகரில் எழுந்தருளி தமிழோசையை வெளிப்படுத்தி வரும் அவனது ஆலயமும் அவனது அருட்பொலிவையும் காணவேண்டும் எனும் எண்ணம் என் மனதில் வலுச்சேர்த்துக் கொண்டிருக்கிறது. எப்போது அவ்வெண்ணம் ஈடேறுகின்றது என்று பார்க்கலாம். எல்லாம் அவன் செயல். (முற்றும்)

தேவையும் துன்பமும் ஒருபொழுதும் விட்டுப்பிரியா நண்பர்கள்.

# புரட்டாதி மாத வாராந்த நிகழ்வுகள்

**07.09.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**விடயம் :- "இன்னிசை"**

**வழங்குபவர் :- திரு ப. சிவமைந்தன்** அவர்கள்

**(பக்கவாத்திய சகிதம்)**

---

**14.09.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :- "முருக பக்தி"**

**வழங்குபவர் :- திரு நி. பாபுதரன்** அவர்கள்

(ஆசிரியர்)

---

**21.09.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :- "கந்தபுராணம்"** (தொடர்)

**வழங்குபவர் :- திரு அ. குமாரவேல்** அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

**28.09.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் புரட்டாதி மாத வெளியீடு

**வெளியீட்டுரை :- திரு சிவ. ஆறுமுகசாமி J.P** அவர்கள்

**மதிப்பீட்டுரை :- திரு துரை. கணேசமூர்த்தி** அவர்கள்

(ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி)

249ஆவது மலர்

பதிவு இல. QD/49/NEWS/2018

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

